மாணவர்

தமிழ் விளக்கு

[illegible]

என் அன்புமிக்க ஆசிரியர்
உயர்திரு [illegible] M.A. B.Sc L.T
அவர்களுக்கு
அன்பளிப்பு.

வித்துவான் ரா. லே. ஆரோக்கியம் பிள்ளை

தமிழாசிரியர்

அர்ச். சவேரியார் உயர்நிலைப் பள்ளி

தூத்துக்குடி

தமிழ் இலக்கியக் கழகம்

தூத்துக்குடி

1st Edition Feb. 1951.

PUBLISHED BY
THE TAMIL LITERATURE SOCIETY
TUTICORIN, S. INDIA

Printed at
St. Xavier's Press.
Tuticorin. — 2 / 1951

அணிந்துரை.

ஒரு மொழியைத் திருத்தமாகப் பேசவும் எழுதவும் கற்பிக்கும் நூலே இலக்கணம் என்று கூறுவர். இலக்கண நூல்களை இளமை தொட்டே கற்றுவரும் மாணவர்களிடங்கூட பேச்சிலும் எழுத்திலும் பிழைகள் மலிந்து காணப்படுகின்றன. இதுபற்றியே தற்கால அறிஞர்கள் நடைமுறைத் தமிழிலக்கணமே கற்பிக்கப்படுதல் வேண்டும் என்று கூறுகின்றனர்.

எமது பள்ளித் தமிழாசிரியர் திரு. வித்துவான் ஆரோக்கியம் பிள்ளையவர்கள் எழுதி வெளியிட்டுள்ள **"மாணவர் தமிழ் விளக்கு"** என்னும் இந்நூல், மாணவர்களை எழுத்துப் பிழை, சொற் பிழை, சந்திப் பிழை முதலியவைகளில் வீழாதவாறு தடுக்கும் ஒரு தோழனாகவும், ஊன்றுகோலாகவும் விளங்குகிறது. இந்நூலின் முதல் அறுபத்து நான்கு பக்கங்களையும் மாணவனொருவன் ஊக்கத்தோடும், விடா முயற்சியோடும் படித்துப் பயிற்சி செய்வானாயின் பெரும்பாலும் பிழைகளை நீக்க முடியும் என்பது எமது துணிபு. இந்நூல் மாணவர்க்கு மட்டுமன்றி மொழியிற் பயிற்சி பெற ஊக்கம் கொள்ளும் பொது மக்களுக்கும் மிக்க பயனளிக்கும் என்று கூறுதல் மிகையாகாது.

தமிழ் இலக்கணத்தை ஆங்கில ஒப்புமையுடன் மாணவர்கள் புரிந்துகொள்ள ஆசிரியர் செய்துள்ள முயற்சி பாராட்டத்தக்கது. மாணவ மாணவிகள் இந்நூலை வாங்கி மாபெரும் பயனை அடைவார்கள் என்பது எமது நம்பிக்கை. அதுவே எமது விருப்பமும் ஆகும்.

அர்ச். சவேரியார் உயர்நிலைப் பள்ளி,
தூத்துக்குடி, 11—2—1951.

அந்துவான், S J.
தலைமை ஆசிரியர்.

என் ஆசிரியர்

பண்டித வித்துவான்

உயர்திரு தா. சாஸ்தாங்குட்டிப்பிள்ளை அவர்கள்

அன்புடன் அளித்த

சிறப்புப் பாயிரம்

வெண்பா.

1 எழுதும் பொழுதும் இருந்தமிழைப் பேசும்
பொழுதும் எழுபிழையைப் போக்க — முழுதுமுணர்ந்(
ஆக்கினான் மாணவர்க்காய் ஆரோக் கியம்என்பான்
நோக்கு தமிழ்விளக்காம் நூல்.

2 ஆரோக் கியமென்பான் ஆக்குந் தமிழ்விளக்கு
ஓரா தெழுபிழையை யோட்டியே—நேராக
நன்னடையை மாணவர்க்கு நாணாளும் கற்பித்து
முன்னிலையி லுய்க்கும் முதிர்ந்து.

முன்னுரை

மனிதரது உயிர் வாழ்க்கைக்கு உரை நடை இன்றியமையாததாக இருக்கிறது என்பது அறிஞர்கள் கண்ட முடிபு. திருத்தமும் தெளிவுமுடைய உரை நடையைக் கையாளுதலே தாய்மொழிப் படிப்பின் முக்கிய நோக்கம்.

அந்நோக்கம் நிறைவேற வேண்டுமாயின் இளமைப் பருவத்திலேயே பிழை நீக்கி எழுதவும், பேசவும் திறன் பெறுதல் வேண்டும். ஆனால், உயர்நிலை வகுப்பு மாணவர்கள் எழுதும் கட்டுரைகளிற்கூட பிழைகள் மிகுதியாகக் காணப்படுகின்றன.

மாணவர்கள் பிழைமலிய எழுதுதற்குரிய காரணங்களை ஆராய்ந்து அப்பிழைகளை நீக்குதற்கான வழிகளை விளக்குதல் வேண்டும் என்னும் அவா என் உள்ளத்தில் எழுந்தது. ஆதலின், தொடக்க நிலை, நடுநிலை, உயர்நிலைப்பள்ளிகளில் ஏறத்தாழ இருபதாண்டுகள் யான் பெற்ற அனுபவத்தையும், பயின்ற போதனைமுறைகளையும், தமிழ், ஆங்கில இலக்கண நூல்களையும், அகராதி நூல்களையும் துணையாகக் கொண்டு, சில மாணவரை ஆய்வுக் களமாக வைத்து இந்நூலை எழுதத் துணிந்தேன்.

பழைமையிற் கலந்து புதுமையில் தோன்றும் மறுமலர்ச்சியைத் தழுவியுள்ள தற்கால எழுத்தாளர்களின் உரைநடைப் போக்குக்கும் அகராதி முறைமைக்கும் ஏற்ப, இந்நூலில் சில மாறுதல்கள் கொடுக்கப்பட்டுள்ளன. அவை அறிஞரால் விரும்பத்தக்கனவேயாம் என்பது என் நம்பிக்கை.

இதிற் காணப்படும் குற்றங் குறைகளைப் பொறுத்தருளி எனக்கு ஊக்கமளிக்குமாறு அறிஞர்களை வேண்டிக்கொள்கின்றேன். இந்நூலின் திருத்தம் பற்றிய கருத்துக்களைத் தெரிவிக்கும் அன்பர்கட்கு என் மனமார்ந்த நன்றி உரியதாகும்.

இந்நூல் மாணவர்க்கு ஒரு விளக்காக விளங்க வேண்டும் என்பதே என் அவாவும் வேண்டுதலுமாகும். இந்நூலின் நோக்கம் நிறைவேற திருவருள் துணை நிற்குமாக.

இங்ஙனம்,

ஆசிரியர்.

நன்றியுரை.

இந்நூலின் ஆக்கம் குறித்தபோது சிற்சில கருத்துக்களைக் கூறி எனக்கு ஊக்கம் அளித்து ஆசி தந்த பெரியார் **உயர்திரு. கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை** அவர்களுக்கு என் அன்பார்ந்த வணக்கம் உரியதாகுக.

இந்நூலைப் பார்வையிட்டுச் சிற்சில திருத்தங்கள் கூறிச் சிறப்புப் பாயிரம் தந்து எனக்கு ஊக்கமும் ஆசியும் அளித்த என் அன்புமிக்க ஆசிரியர் **பண்டித வித்துவான உயர்திரு. தா. சான்தாங்குட்டிப் பிள்ளை** அவர்களுக்கு யான் என்றும் கடப்பாடுடையேன்.

இதன்கண் வரும் ஆங்கில ஒப்புமைகளை எனது மதிப்பிற்குரிய தோழர் திரு L. S. ஜோசப் B. A. L. T. அவர்களும், எனது நண்பர் வித்துவான் திரு. G. மைக்கல் பிள்ளை B. O. L. அவர்களும் செப்பனிட்டு உதவினார்கள். இவர்கட்கு எனது பேரன்பு உரியதாகுக.

யான் இந்நூலை எழுதிக் கொண்டிருந்த காலத்தில் அடிக்கடி வந்து இந்நூலைப் பார்வையிட்டு என்னை ஊக்கப்படுத்திய எனது நண்பர் வித்துவான் திரு. பொனிபாஸ், எனது தோழர்களான வித்துவான் திரு. சுடலைமுத்து, வித்துவான் திரு. சிவராம கிருஷ்ணன் ஆகியவர்க்கும், இந்நூலை பெரும் பொறுப்பெடுத்து நன்முறையில் அச்சிட்டுத் தந்த அர்ச். சவேரியார் அச்சகப் பொறுப்பாளர் அவர்கட்கும், ஒப்பு நோக்குதலில் உதவி செய்த எனது அன்பர் திரு. வடவை. எஸ். முத்தையா அவர்கட்கும், அட்டைப்படம் எழுதி உதவிய நண்பர் திரு. A. ஜெகநாதன் அவர்கட்கும், எனக்கு ஊக்கமளித்த பெரியார்கள், நண்பர்கள், மாணவர்கள் யாவர்க்கும் என் உளமார்ந்த நன்றி உரியதாகுக.

இந்த நூலுக்கு அணிந்துரை அளித்து எனது முயற்சிக்கு ஆசியளித்துள்ள எனது அன்புமிகு பண்புநிறை தலைமையாசிரியர் **சங். அந்துவான் S. J.** அவர்கட்கு என் அன்பார்ந்த வணக்கமும் நன்றியும் என்றும் உரியன.

இதனைத் தமிழ் இலக்கியக் கழக வெளியீடாக ஏற்று, எனக்கு ஊக்கமளித்த சமயப் பெரும் புலவரும், பன்மொழிப் புலவரும், தமிழ்ப் புரவலருமாகிய **வண. தனிநாயகம் அடிகள்** அவர்கட்கும் என் அன்பார்ந்த நன்றியும் வணக்கமும் உரியனவாகுக.

இங்ஙனம்,

ரா. லே. ஆரோக்கியம் பிள்ளை.

இப்புத்தகத்தைப் பயன்படுத்தும் முறை.

சில மாணவர்கள் குறில் நெடில் வேறுபாடு உணராமலே எழுதுகிறார்கள். அவர்கள் 'குறில் நெடில் ஒலி வேறுபாடு' என்னும் முதற் பயிற்சியை ஊன்றிக் கவனித்து, வாய்விட்டுப் படித்து வருதல் வேண்டும். வேண்டுமிடத்து அருஞ்சொற் பொருளைப் பார்த்துக் கொள்க.

சில மாணவர்கள் எகர ஒகர, ஏகார ஓகார உயிர்மெய்யெழுத்துக்களின் உருவ வேறுபாடு உணராமல் இடர்ப்படுவது உண்டு. அவர்கள் 2-வது பயிற்சியைக் கவனித்துப் படித்து உருவ வேறுபாட்டை நினைவிலிருத்தி எழுதிப் பழகுதல் வேண்டும்.

பொதுவாக லகர ளகர ழகர வேறுபாடும், னகர ணகர வேறுபாடும், ரகர றகர வேறுபாடும் உணராமையால் பிழை மலிய எழுதுபவர் பலர். அத்தகையவர்கள் 3, 4, 5, 6, 7, 8-வது பயிற்சிகளைப் பொருளுணர்ந்து பலமுறை பயில்வதோடு நாநெகிழ் பயிற்சிக்குரிய சொற்களையும் அவ்வாறு பயில்வார்களாக. தொடக்கத்தில் சரியான உச்சரிப்பு உடையவர்களைத் துணையாகக் கொள்ளுதல் நலம்.

சொற்பிழை நீக்கும் பயிற்சியில் கருத்தின்மையாலும் ஒலி மயக்கத்தாலும் ஏற்படும் சொற்பிழைகளும் அவற்றின் திருத்தமும், ஒலிமயக்கமுடைய சொற்களில் ஒப்புக்கொள்ளப்பட்டனவும், சொற்கள் மோனை ஒலி பெற்று மடங்கும் முறையும், விரும்பத்தக்க மரூஉ மொழிகளும், கவிஞர்கள் மட்டும் எடுத்தாளும் மரூஉ மொழிகளும் அவற்றின் திருத்தமும், நகர எழுத்து வரும் வடசொற்களைத் தமிழில் எழுதும் முறையும், பகுதியுணர்ந்து சில சொற்பிழைகளை நீக்கும் வழிகளும் எடுத்துக்காட்டப்பட்டுள்ளன. சூழ்நிலை வேறுபாட்டிற்கு ஏற்ற வாறெல்லாம் வேறுபட வழங்கும் சொற்பிழைகள் அளவிலடங்கா. ஆதலின், அத்தகையன இங்குக் கொள்ளப்படவில்லை.

சந்திப்பிழை நீக்கும் பயிற்சியில் புணர்ச்சியின் பொதுவிலக்கணமும், வல்லினம் மிகா இடங்களும், இன்றியமையாத வேறு சில புணர்ச்சி விதிகளும் விளக்கிக் காட்டப்பட்டுள்ளன. வல்லினம் மிகா இடங்களை மட்டும் கூறியமையால் ஏனைய இடங்களில் மிகும் எனக் கொள்க.

தமிழ் இலக்கணம் என்ற பிரிவில் **எழுத்து, சொல், பொது, அணி, யாப்பு** ஆகிய தலைப்புக்களின் கீழ் முக்கியமான பகுதிகள் இயன்ற வரை ஆங்கில ஒப்புமையுடன் விளக்கப்பட்டுள்ளன.

ஆசிரியர்.

உள்ளுறை.

பொருள் — பக்கம்

I எழுத்துப்பிழை நீக்கும் பயிற்சி

ஒலி வேறுபாடு உணர்தல்

1. குறில் நெடில் ஒலி வேறுபாடு 1
2. எகர ஒகர, ஏகார ஓகார உயிர்மெய்யெழுத்துக்களின் ஒலி-உருவ வேறுபாடு ... 6

அருஞ்சொற் பொருள் 8

3. ல, ள வேறுபாடு 12
4. ல, ழ வேறுபாடு 14
5. ள, ழ வேறுபாடு ... — ... 15
6. ல, ள, ழ வேறுபாடு 16
7. ன, ண வேறுபாடு 18
8. ர, ற வேறுபாடு 20

நாநெகிழ் பயிற்சிக்குரிய சொற்கள் 23

ட, ற இன மெய்யோடு இணைந்து வருதல் ... 33

த இனமெய்யோடு இணைந்து வருதல் ... 34

மொழிக்கு முதலில் வரும் எழுத்துக்கள் ... 35

மொழிக்கு இறுதியில் வரும் எழுத்துக்கள் ... 38

மொழிக்கு இடையில் வரும் எழுத்துக்கள் ... 39

II சொற்பிழை நீக்கும் பயிற்சி 41

III சந்திப்பிழை நீக்கும் பயிற்சி

புணர்ச்சியின் பொது விலக்கணம் ... 51

சந்தி சேர்த்து எழுதச் சுருக்கமான சில வழிகள் 54

IV தமிழ் இலக்கணம்

எழுத்து 65

சொல் 69

பொது 90

அணி 99

யாப்பு 104

சில திருத்தங்கள் :— பக்கம் 8—அகாரம்-அ என்னும் எழுத்து, வீடு. பக்கம் 20—ஆறை - ஆற்றார். பக்கம் 50— கறுப்பு, சிவப்பு என்பன முறையே கருமை, செம்மை என்னும் பொருளில் வரும் பண்புப் பெயர்கள். கறுப்பு வினையாயின் பகுதி கறு. குறிப்பு:- உரை நடையில் ஓர் என்பதன் முன் உயிரும், ஒரு என்பதன் முன் உயிர்மெய்யும் வரும் என்ப.

எழுத்துப் பிழை நீக்கும் பயிற்சி.

ஒலி வேறுபாடு உணர்தல்.

1. குறில் நெடில் ஒலி வேறுபாடு

உயிர் வரிசை

அகாரம்	ஆகாரம்
அக்கம்	ஆக்கம்
அசி	ஆசி
அடி	ஆடி
அச்சி	ஆச்சி
அச்சு	ஆச்சு
அடு	ஆடு
அடை	ஆடை
அட்டை	ஆட்டை
அணி	ஆணி
அணை	ஆணை
அண்டை	ஆண்டை
அதி	ஆதி
அத்தி	ஆத்தி
அப்பு	ஆப்பு
அயர்	ஆயர்
அரி	ஆரி
அறு	ஆறு
அவி	ஆவி
அள்	ஆள்
அனு	ஆனு
அனை	ஆனை
இங்கு	ஈங்கு
இடு	ஈடு
இசை	ஈசை
இட்டு	ஈட்டு
இறு	ஈறு
உடு	ஊடு
உதை	ஊதை
உமை	ஊமை
உரு	ஊரு
உழல்	ஊழல்
உறல்	ஊறல்
உரல்	ஊரல்
உண்	ஊண்
எடு	ஏடு
எண்	ஏண்
எது	ஏது
எலி	ஏலி
எழு	ஏழு
என்	ஏன்
ஒடு	ஓடு

உயிர்மெய் வரிசை

ககர வரிசை

கக்கம்	காக்கம்
கடி	காடி
கடு	காடு
கடை	காடை
கட்சி	காட்சி
கட்டம்	காட்டம்
கண்	காண்
கதி	காதி
கதை	காதை
கந்தம்	காந்தம்
கயம்	காயம்
கரணம்	காரணம்
கலி	காலி

அருஞ் சொற் பொருள் பக்கம் 8, 9, 10, 11, 12-ல் காண்க.

கலை	காலை
கல்	கால்
கவடி	காவடி
கவி	காவி
களி	காளி
களை	காளை
கறல்	காறல்
கற்று	காற்று
கனம்	கானம்
கிரி	கீரி
குகை	கூகை
குச்சு	கூச்சு
குடம்	கூடம்
குடல்	கூடல்
குடை	கூடை
குட்டு	கூட்டு
குண்டு	கூண்டு
குதிர்	கூதிர்
குத்து	கூத்து
குப்பு	கூப்பு
குரல்	கூரல்
குவை	கூவை
குழை	கூழை
குளி	கூளி
குறை	கூறை
கெசம்	கேசம்
கெடி	கேடி
கெடு	கேடு
கெட்டி	கேட்டி
கெட்டு	கேட்டு
கெலி	கேலி
கொங்கு	கோங்கு
கொசு	கோசு
கொடி	கோடி
கொடு	கோடு
கொடை	கோடை
கொட்டம்	கோட்டம்
கொட்டான்	கோட்டான்
கொட்டை	கோட்டை
கொத்து	கோத்து
கொப்பு	கோப்பு

சகர வரிசை

சகம்	சாகம்
சகி	சாகி
சங்கம்	சாங்கம்
சடு	சாடு
சட்டை	சாட்டை
சதம்	சாதம்
சதா	சாதா
சதி	சாதி
சது	சாது
சத்து	சாத்து
சந்தம்	சாந்தம்
சந்தி	சாந்தி
சந்து	சாந்து
சப்பை	சாப்பை
சமன்	சாமன்
சம்பு	சாம்பு
சரதம்	சாரதம்
சரி	சாரி
சரம்	சாரம்
சவடி	சாவடி
சனம்	சானம்
சற்று	சாற்று
சிக்கல்	சீக்கல்
சிட்டு	சீட்டு

சிதை	சீதை
சிரி	சீரி
சித்தி	சீத்தி
சுசி	சூசி
சுட	சூட
சுடு	சூடு
சுட்டு	சூட்டு
சுதி	சூதி
சுபம்	சூபம்
சுரன்	சூரன்
சுனை	சூனை
செக்கு	சேக்கு
செடி	சேடி
செத்து	சேத்து
செரி	சேரி
செல்	சேல்
செறு	சேறு
சொடி	சோடி
சொரி	சோரி
சொலி	சோலி

தகர வரிசை

தக்கு	தாக்கு
தங்க	தாங்க
தங்கி	தாங்கி
தடி	தாடி
தடை	தாடை
தட்டி	தாட்டி
தண்டி	தாண்டி
தப்பு	தாப்பு
தரணி	தாரணி
தரம்	தாரம்
தலம்	தாலம்
தழை	தாழை
தளம்	தாளம்
தளி	தாளி
தறு	தாறு
தனம்	தானம்
தனி	தானி
தரை	தாரை
திட்ட	தீட்ட
திட்டு	தீட்டு
திப்பி	தீப்பி
துக்கம்	தூக்கம்
துணி	தூணி
துண்டி	தூண்டி
துதி	தூதி
துதை	தூதை
துப்பு	தூம்பு
துவி	தூவி
தெங்கு	தேங்கு
தெசம்	தேசம்
தெப்பல்	தேம்பல்
தெளி	தேளி
தொகை	தோகை
தொக்கு	தோக்கு
தொடர்	தோடர்
தொடி	தோடி
தொடு	தோடு
தொடை	தோடை
தொட்டி	தோட்டி
தொண்டி	தோண்டி
தொப்பை	தோப்பை
தொல்	தோல்
தொலி	தோலி

நகர வரிசை

நகம்	நாகம்
நகல்	நாகல்
நகர்	நாகர்
நக்கு	நாக்கு
நசி	நாசி
நடன்	நாடன்
நடி	நாடி
நடு	நாடு
நட்டம்	நாட்டம்
நடுதல்	நாடுதல்
நட்டு	நாட்டு
நட்பு	நாட்பு
நண்	நாண்
நத்தி	நாத்தி
நயன்	நாயன்
நரகர்	நாரகர்
நபி	நாபி
நரி	நாரி
நலி	நாலி
நவி	நாவி
நன்	நான்
நறு	நாறு
நிசம்	நீசம்
நிதி	நீதி
நித்தம்	நீத்தம்
நிறு	நீறு
நுக்க	நூக்க
நுங்கு	நூங்கு
நுழை	நூழை
நெரி	நேரி
நெற்று	நேற்று
நொய்	நோய்

பகர வரிசை

பகம்	பாகம்
பகல்	பாகல்
பகு	பாகு
பக்கல்	பாக்கல்
பசி	பாசி
படம்	பாடம்
படி	பாடி
படு	பாடு
படை	பாடை
பட்டம்	பாட்டம்
பட்டன்	பாட்டன்
பட்டி	பாட்டி
பட்டு	பாட்டு
பட்டை	பாட்டை
பணம்	பாணம்
பணி	பாணி
பண்	பாண்
பண்டி	பாண்டி
பண்டு	பாண்டு
பதம்	பாதம்
பதி	பாதி
பதை	பாதை
பத்தி	பாத்தி
பத்திரம்	பாத்திரம்
பந்தம்	பாந்தம்
பந்தல்	பாந்தல்
பப்பு	பாப்பு
பயல்	பாயல்
பரதம்	பாரதம்
பரம்	பாரம்
பலம்	பாலம்
பலி	பாலி

பல்	பால்
பலை	பாலை
பவனம்	பாவனம்
பவி	பாவி
பழி	பாழி
பறை	பாறை
பனை	பானை
பன்மை	பான்மை
பிகம்	பீகம்
பிடி	பீடி
பித்தை	பீத்தை
பிழை	பீழை
பிற	பீற
புசை	பூசை
புண்	பூண்
புரி	பூரி
புனை	பூனை
பெடை	பேடை
பொட்டு	போட்டு
பொச்சு	போச்சு
பொலி	போலி
பொக்கு	போக்கு
பொன்	போன்

மகர வரிசை

மகம்	மாகம்
மடம்	மாடம்
மடி	மாடி
மடு	மாடு
மடை	மாடை
மணம்	மாணம்
மணி	மாணி
மண்	மாண்
மதம்	மாதம்
மதர்	மாதர்
மதி	மாதி
மது	மாது
மந்தம்	மாந்தம்
மந்தி	மாந்தி
மப்பு	மாப்பு
மயம்	மாயம்
மரி	மாரி
மல்	மால்
மலை	மாலை
மவி	மாவி
மழை	மாழை
மறன்	மாறன்
மறு	மாறு
மற்று	மாற்று
மன்	மான்
மன்றல்	மான்றல்
மிசை	மீசை
மிதி	மீதி
மின்	மீன்
முகம்	மூகம்
முகை	மூகை
முடி	மூடி
முட்ட	மூட்ட
முட்டு	மூட்டு
முரி	மூரி
முழை	மூழை
முளை	மூளை
மெட்டு	மேட்டு
மொத்தை	மோத்தை

யுபம்	யூபம்
ரகு	ராகு

வகர வரிசை

வகு	வாகு	வரம்	வாரம்
வகை	வாகை	வரி	வாரி
வக்கு	வாக்கு	வரை	வாரை
வசம்	வாசம்	வலம்	வாலம்
வசி	வாசி	வலை	வாலை
வசு	வாசு	வல்	வால்
வடி	வாடி	வழி	வாழி
வடை	வாடை	வளம்	வாளம்
வட்டம்	வாட்டம்	வளி	வாளி
வட்டி	வாட்டி	வளை	வாளை
வட்டு	வாட்டு	வள்	வாள்
வணிகம்	வாணிகம்	வனம்	வானம்
வணிதம்	வாணிதம்	விசு	வீசு
வதம்	வாதம்	விடு	வீடு
வதனம்	வாதனம்	விட்ட	வீட்ட
வதி	வாதி	விண்	வீண்
வது	வாது	விதி	வீதி
வதை	வாதை	விரி	வீரி
வந்தி	வாந்தி	விரை	வீரை
வயம்	வாயம்	விற்று	வீற்று
		வெற்று	வேற்று

2. உயிர்மெய் எழுத்துக்களில் எகர ஒகர, ஏகார ஓகார ஒலி வேறுபாடு

கெஞ்சு	கொஞ்சு	செக்கர்	சொக்கர்
கெடி	கொடி	செட்டை	சொட்டை
கெடுத்தல்	கொடுத்தல்	செத்து	சொத்து
கெட்டி	கொட்டி	செல்	சொல்
கெண்டி	கொண்டி	செறிதல்	சொறிதல்
கெம்பு	கொம்பு	தெங்கு	தொங்கு
கெட்டு	கொட்டு	தெண்டன்	தொண்டன்

தெளி	தொளி
நெடி	நொடி
நெருக்கு	நொருக்கு
நெறிதல்	நொறிதல்
பெட்டு	பொட்டு
பெய்	பொய்
பெருக்கு	பொருக்கு
பெறு	பொறு
மெட்டு	மொட்டு
மெத்து	மொத்து
மெத்தை	மொத்தை
மெய்	மொய்
மெல்லு	மொல்லு
கேசம்	கோசம்
கேடு	கோடு
கேட்டி	கோட்டி
கேணி	கோணி
கேதம்	கோதம்
கேது	கோது
கேப்பை	கோப்பை
கேலம்	கோலம்
கேலி	கோலி
கேள்	கோள்
சேடி	சோடி
சேதி	சோதி
சேதிக்க	சோதிக்க
சேமன்	சோமன்
சேப்பு	சோம்பு

சேர	சோர
சேரர்	சோரர்
சேரார்	சோரார்
சேர்வு	சோர்வு
சேலை	சோலை
சேறு	சோறு
சேனை	சோனை
தேக்கு	தோக்கு
தேசம்	தோசம் (தோஷம்)
தேட்டம்	தோட்டம்
தேடு	தோடு
தேய்த்தல்	தோய்த்தல்
தேற்றம்	தோற்றம்
தேரை	தோரை
தேற்றூர்	தோற்றூர்
நேற்று	நோற்று
பேய்	போய்
பேகம்	போகம்
பேடு	போடு
பேதம்	போதம்
பேதி	போதி
பேதை	போதை
பேத்தி	போத்தி
பேழ்	போழ்
மேகம்	மோகம்
மேடு	மோடு
மேதி	மோதி

குறில் நெடில் வேறுபாடும், உயிர்மெய்யெழுத்துக்களில் எகர ஒகர, ஏகார ஓகார, வேறுபாடும் உணராதவர்கள் மேற்கண்டவைகளைக் கவனித்துப் படித்து, பலமுறை எழுதிப் பயிற்சி செய்க.

அருஞ் சொற் பொருள்

அகாரம் - வீடு
அக்கம் - கண்
அசி - வாள்
அடு - தீயில் பாகமாக்கு
அணி - அழகு
அண்டை - சமீபம்
அதி - மிக
அப்பு - நீர்
அயர் - வாட்டம்
அரி - நெற்கதிர்
அள் - அள்ளு
அறு - நீங்கா
அனை - தாய்
ஆக்கம் - செல்வம்
ஆச்சி - பாட்டி
ஆட்டை - வருடம்
ஆண்டை - தலைவன்
ஆதி - தொடக்கம்
ஆத்தி - ஓர் மரம்
ஆயர் - இடையர்
ஆரி - பார்வதி
ஆனை - யானை
இசை - சங்கீதம்
ஈடு - பிரதி
ஈசை - ஏர்க்கால்
ஈட்டு - சப்பாதி
ஈறு - கடைசி
உரு - வடிவு
உழல் - சுற்றித்திரிதல்
உறல் - பொருந்துதல்
ஊடு - தார் நூல்
ஊதை - காற்று
ஊரு - அச்சம்
ஊழல் - கேடு
ஊறல் - ஊறுதல்
ஊரல் - கிளிஞ்சல்
ஏண் - வலிமை
ஏலி - கள்
ஒடு - ஓர் மரம்
கக்கம் - அக்குள்
கடு - நஞ்சு
கந்தம் - மணம்
கயம் - குளம்
கரணம் - தலைகீழாய் உருளுதல்
கலி - ஒலி
கவி - புலவன்
களி - மகிழ்ச்சி
களை - அழகு
கறல் - விறகு
காக்கம் - காக்குறட்டைச்செடி
காடி - புளித்த நீர்
காட்டம் - விறகு
காதி - மிரத பாஷாணம்
காதை - சரித்திரம்
காயம் - பெருங்காயம்
காலி - கழிவு நாள்
காலை - பொழுது
காவி - காவிக்கல்
கிரி - மலை
குச்சு - சிறு குடில்
குவை - கூட்டம்
குழை - தளிர்
கூடல் - மதுரை
கூதிர் - குளிர்
கூத்து - நடனம்
கூப்பு - கைகுவி
கூரல்-பெண் மயிர்; ஓர் மீன்
கூவை - ஒரு கிழங்கு
கூழை - குள்ளம்
கூளி - பேய்

சூறை - சேலை
கேம்பு - ஆரவாரி
கேலி - வெல், ஆசைப்படு
கேட்டி - மிலாறு
கேசம் - மயிர்
கொட்டம் - தொழுவம்
கொட்டான் - தேங்காய்
கோசு - வீதி
கோட்டம் - நாடு
கோட்டான் - கூகை
கோட்டி - கூட்டம், துன்பம்
கோப்பு - கோத்தல்
சகம் - உலகம்
சகி - பொறு
சடு - ஆறு
சதா - எப்பொழுதும்
சதி - வஞ்சனை
சது - நான்கு
சத்து - சாரம்
சந்தம் - அழகு
சப்பை - தட்டை
சம்பு - சிவன்
சரதம் - மெய்
சரம் - பூமாலை
சவடி - ஓராபரணம்
சனம் - ஜனம்
சாகம் - கீரை
சாகி - ஈச்சமரம்
சாது - சற்குணன்
சாந்தி - சாந்தம்
சாப்பை - திராணியற்றவன்
சாமன் - மன்மதன்
சாம்பு - பறை
சாரதம் - இனிய ஓசை
சாரி - நடை
சானம் - பெருங்காயம்
சீக்கல் - சீழ்க்கை
சீரி - புளியமரம்
சீத்தி - இளப்பம்
சூசி - ஊசி
சூட - அணிய
சூதர் - புகழ்வோர்
சூபம் - ஓர் பயறு
சூரன் - சூரியன்
சூனை - சொத்தை
செக்கர் - செவ்வானம்
செட்டை - இறகு
சேக்கு - தாய்ப்பால்
சேத்து - வயல்
சேமன் - தந்திரி
சொக்கர் - சிவன்
சொட்டை - பள்ளம்
சொலி - பிரகாசி
சோரி - மழை
சோனை - விடா மழை
சேல் - கயல்மீன்
தக்கு - தாழ்ந்த ஓசை
தரணி - உலகம்
தலம் - ஸ்தலம்
தழை - தளிர்
தளி - கோயில்
தனம் - பணம்
தனி - தனிமையான
தாட்டி - சாமர்த்தியம்
தாப்பு - குறித்த சமயம்
தாரம் - மனைவி
தாலம் - பனைமரம், பூமி
தாழை - தாழைமரம்
தாளம் } - ஓர் படர்கொடி
தாளி }
தாறு - வாழைக்குலை
தானம் - இடம்
தானி - தானத்திலுள்ளது
தாரை - ஒழுங்கு

திப்பி - சக்கை
தீப்பி - நெருப்பு
துண்டி - அறு
துதி - தோத்திரம்
துதை - நெருக்கம்
துவி - இரண்டு
தூணி - அம்புக் கூடு
தூண்டில் - மீன்
தூதி - தூது செல்வோன்
தூதை - சிறு மட்கலம்
தூம்பு - உள் துளை
தூவி - இறகு
தேம்பு - வாடு
தேளி - ஓர் மீன்
தொக்து - அற்பம், தோல்
தொடி - கைவளை
தொல் - பழைமை
தோக்கு - துப்பாக்கி
தோடி - ஒரு ராகம்
தோடை - ஓர் மரம்
தோப்பை - திண்மையின்றிப் [பருத்தது
தோரை - மூங்கிலரிசி
தோலி - ஓர் மீன்
நகல் - பிரதி
நகர் - பட்டணம்
நசி - அழி
நடன் - நடனம் ஆடுபவன்
நடி - நடனம் ஆடுபவள்
நண் - பொருந்து
நந்தி - விரும்பி
நயன் - நன்மை
நரகர் - பேய்கள்
நபி - முகமது நபி
நலி - நோய்
நள் - பொருந்து
நறு - நறுமணமுள்ள
நாகல் - நாவன்மரம்
நாகர் - ஒரு சாதியார்
நாட்டம் - கண்
நாட்பு - போர்
நாண் - கயிறு
நாத்தி - நாஸ்தி, இன்மை
நாயன் - எசமான்
நாபி - கொப்பூழ்
நாரி - பெண்
நாலி - முத்து
நாவி - ஒரு மருந்து
நீத்தம் - வெள்ளம்
நீறு - புழுதி
நுக்க - பொடியாக்க
நூக்க - தள்ள
நூங்கு - மிகுதி
நூழை - சிறு துவாரம்
நேடி - சிள்வண்டு
நேற்று - உலர்ந்த பழம்
நொய் - இடித்த அரிசி
நோற்று - தவம்செய்து
பகம் - கீர்த்தி
பகு - பிரி
பக்கல் - பக்கம்
பட்டன் - பிராமணரில்
[ஒரு வகுப்பினன்
பட்டி - நாய், சிற்றூர்
பணி - செய்கை
பண் - இசைப்பாட்டு
பண்டி - வண்டி, வயிறு
பண்டு - முன்பு
பதம் - பக்குவம்
பதி - தலைவன்
பதை - துடி
பத்தி - வரிசை
பத்திரம் - சீட்டு
பந்தம் - உறவு
பப்பு - பருப்பு

பயல் - சிறுவன்
பரம் - மேலுலகம்
பரதம் - ஓர் நாட்டியம்
பலே - சிற்றுமுட்டிச் செடி
பவனம் - தேவலோகம்
பவி - நீர்
பாக்கல் - பாவுகல்
பாடி - ஊர்
பாடு - வருத்தம்
பாட்டம் - அச்சல்மழை
பாட்டை - வழி
பாணம் - அம்பு
பாணி - கை
பாண் - இசைப் பாட்டு
பாண்டி-பல்லாங்குழிப்பலகை
பாண்டு - ஓர் நோய்
பாந்தம் - ஒழுங்கு
பாயல் - படுக்கை
பாரம் - கனம்
பாலி - ஓர் பாஷை
பாலை - பாலைநிலம்
பாவனம் - தூய்மை
பாழி - குகை
பிகம் - குயில்
பீகம் - பெருமாட்டி
பித்தை - ஆண் மயிர்
பீத்தை - நாடா
பீழை - துன்பம்
பீற - கீற
புசை - இராசி
புனை - பொலிவு
பூரி - மிகுதி
பேகம் - தவளை
பேடு - பெண் பறவை
பேழ் - பெரிய
போச்சு - குற்றம்
போருக்கு - செதிள்

போன் - எலிபிடிக்கும் கூடு
மகம் - யாகம்
மதர் - களிப்பு
மது - கள்
மப்பு - மந்தாரம்
மல் - மல் யுத்தம்
மறன் - பாவம்
மன் - மிகுதி
மன்றல் - திருமணம்
மாகம் - ஆகாயம்
மாடை - பொன்
மாணி -குறுகிய வடிவம்
மாண் - பெருமை
மாதி - வட்டமாயோடல்
மாந்தம் - ஒருநோய்
மாந்தி - மாமரம்
மாப்பு - மன்னிப்பு
மாயம் - தந்திரம்
மாரி - மழை
மால் - பெருமை
மாலி - கள்
மாழை - பொன்
மான்றல் - மயங்கல்
மிசை - மேடு
மூகை - மொட்டு
மூழை - துடுப்பு, குகை
மூகம் - ஊமை
மூரி - சோம்பல்
மூழை - அகப்பை
மொத்தை - பருமை
மொல்லு - இரைச்சல்
மோத்தை - வெள்ளாட்டுக் [கடா
யுபம்-சாமர்த்தியம்
யூபம் - யாகம்
ரகு - ஓர் அரசன்
வக்கு - வழி
வகு - நீர்

வணிதம் - செப்பம்
வதம் - கொலை
வதி - தங்கு
வது - பெண்
வந்தி - மலடி
வயம் - வசம்
வல் - வல்லமை
வளி - காற்று;
வள்-கூர்மை
வாகு - தோள்
வாசி - படி
வாசு - வெட்டிவேர்
வாடி - அடைப்புள்ள இடம்
வாணிதம் - கள்
வாதனம் - சீலை

வாயம் - நீர்
வாரை - மரவுத்திரம்
வாலம் - வால்
வாலை - திராவகம் வடிக்கும்
வாழ் - வாழ்க [பாத்திரம்
வாளம் - வாள்
வாளி-அம்பு, நீர் இறைக்கும்
விசு - ஓர் வருடம் [தொட்டி
விண் - ஆகாயம்
விரை - வித்து
வீட்ட - கொல்ல
வீர் - வீரம் உடையவன்
வீரை - துன்பம்
வீற்று - வேறுபாடு

---

3. ல, ள வேறுபாடு

ல

அலம் - கலப்பை
அல் - இருள்
அல்லல் - துன்பம்
இலகு - இலேசு
இலக்கம் - குறிப்பு
இலக்கு - குறி
உலகு - உலகம்
உலம் - திரண்ட கல்
உலவு - உலாவு
உல்லம் - ஓர் மீன்
எல்லி - சூரியன், இருள்
கலைத்தல் - பிரித்தல்
கல் - (Stone.) மலை, படி
கறல் - விறகு

ள

அளம் - உப்பளம்
அள் - அள்ளு
அள்ளல் - சேறு அள்ளுதல்
இளகு - கரை
இளக்கம் - இளகிய தன்மை
இளக்கு - இளகச் செய்
உளகு - யாழின் ஓர் உறுப்பு
உளம் - மனம்
உளவு - ரகசியச் செய்தி
உள்ளம் - மனம்
எள்ளி - இகழ்ந்து
களைத்தல் - சோர்தல்
கள் - மது
கறள் - கறை; துரு

காலம் - பொழுது
காலன் - யமன்
காலை - விடியற்காலம்
குலம் - இனம்
கூலி - சம்பளம்
கேலி - பரிகாசம்
கொல்லி - ஓர் மலை
கொலை - உயிர்வதை
கோலம் - அலங்கரிப்பு
கோல் - மரக்கொம்பு
சலம் - பொய், நீர்
சாலை - கூடம்
சூலை - ஓர் நோய்
சேல் - கறையான்
சோலி - காரியம்
தலம் - ஸ்தலம்
தலைவன் - நாயகன்
தவலை - பித்தளைப் பாத்திரம்
தல்லு - அடி
தாலம் - தட்டம்
துலக்கம் - பிரகாசம்
துலை - துலாக்கோல்
துலங்க - பிரகாசிக்க
துவல் - சீக்கிரம்
தோலி - தோல், உமி
தொலை - தூரம்
தொல்லை - தொந்தரவு
தோல் - சருமம்
பல் - (tooth) பல்லு
பல்லி - ஓர் பிராணி
பாலை - பாலை நிலம்
பாலம் - (Bridge) ஆற்றுப்பாலம்
பில்லை - குளிகை
புலி - ஓர் மிருகம்
புல் - (grass) பசு புல் தின்னும்
புல்லி - தழுவி, பூவின் இதழ்
புல்லு - தழுவு

காளம் - விஷம்
காளன் - மாகாளன்
காளை - எருது
குளம் - தடாகம்
கூளி - பேய்
கேளி - மகளிர் விளையாட்டு
கொள்ளி - நெருப்பு விறகு
கொளை - இசைப்பாட்டு
கோளம் - உருண்டை
கோள் - புறணி
சளம் - தொந்தரவு
சாளை - ஓர் மீன்
சூளை - குயவன் சூளை
சேள் (ளு) - தெள்ளுப் பூச்சி
சோளி - பிச்சைக்காரர் பை
தளம் - அடித்தளம்
தளைவன் - கட்டுவேன்
தவளை - ஓர் பிராணி
தள்ளு - நீக்கு
தாளம் - ஓர் வாத்தியம்;
துளக்கம் - அசைவு
துளை - துவாரம்
துளங்க - அசைய
துவள் -வாடு
தோளி - சேறு
தொளை - துவாரம்
தொள்ளை - தொளை
தோள் - புஜம்
பள் - ஒரு சாதி
பள்ளி - பள்ளிக்கூடம்
பாளை-பனை முதலியவற்றின் [பாளை
பாளம் - வெடிப்பு
பிள்ளை - குழந்தை
புளி - ஓர் சுவை
புள் - பறவை
புள்ளி - பொட்டுக்குறி
புள்ளு - ஒரு பூடு

மால் - பெருமை
மாலிகை - மாலை
மொல்லு - இரைச்சல்
வலம் - வலப்பக்கம்
வலன் - வல்லவன்
வல் - வல்லமை
வல்லம் - ஓர் ஊர்
வல்லி - படர் கொடி
வல்லை - விரைவு
வாலம் - வால்
விலக்கு - மாற்றுதல்
விலங்கு - மிருகம்
விலா - விலாப்பக்கம்
விலை - கிரயம்
வில் - (Bow) தனு
வெல்லம் - சர்க்கரை
வெல்லை - ஓர் மலை
வேல் - ஓர் ஆயுதம்
மாள் - இறந்துபோ
மாளிகை - வீடு
மொள்ளு - முகந்துகொள்
வளம் - செழிப்பு
வளன் - வளம்
வள் - வளம்
வள்ளம் - தோணி
வள்ளி - வள்ளியம்மை
வள்ளை - உலக்கைப்பாட்டு
வாளம் - வாள்
விளக்கு - தீபம்
விளங்கு - பிரகாசி
விளா - ஓர் மரம்
விளை - பயிர் விளைதல்
விள் - வேறு படு
வெள்ளம் - தண்ணீர்
வெள்ளை - ஓர் நிறம்
வேள் - மன்மதன்

4. ல, ழ வேறுபாடு

ல

ஆலம் - விஷம்
இலவு - இலவமரம்
உல்லம் - ஓர் மீன்
எலும்பு - (bone) அஸ்தி
ஒலுங்கு - கொசு
கலகம் - சண்டை
கால் - (leg) ஓர் உறுப்பு, $\frac{1}{4}$
கீல் - கிசில்
குலை - கொத்து
கோல் - (kill) சாகடி
நாலிகை - மூங்கில்
பலி - பூசை
பலம் - வலிமை
பால் - பசுவின் பால் முதலியன
பாலி - ஓர் பாஷை

ழ

ஆழம் - (deep) தாழ்வு
இழவு - மரணம்
உள்ளம் - மனம்
எழும்பு - எழு
ஒழுங்கு - முறை
கழகம் - சங்கம்
காழ் - வைரம்
கீழ் - கீழ் இடம்
குழை - தளிர்
கோள் - கொள்
நாழிகை - $2\frac{1}{2}$ நாழிகை ஒரு [மணி
பழி - நிந்தை
பழம் - கனி
பாழ் - கேடு
பாழி - குகை

பீளை - கண்மலம்	பீழை - துன்பம்
புலு - பத்து	புழு - கிருமி
பூல் - ஓர் செடி	பூழ் - கானுங்கோழி
போல் - ஓர் உவமைச் சொல்	போழ் - பிள
மலை - (hill) பர்வதம்	மழை - மாரி
மாலை - பூமாலை	மாழை - பொன்
மால் - பெருமை	மாள் - சாவு
வாலை - திராவகம் வடிக்கும் பாத்திரம்	வாழை - வாழை மரம்
வால் - (tail) புச்சம்	வாழ் - வாழ்க

5. ள, ழ வேறுபாடு

ள	ழ
உளி - ஓர் கருவி	உழி - இடம்
உளுவை - ஓர் மீன்	உழுவை - புலி
ஊளி - நெடுவாய் மீன்	ஊழி-யுக முடிவு;நெடுங்காலம்
களங்கம் - அடையாளம்	கழங்கம் - சூதாடு கருவி
கிளவி - சொல்	கிழவி - மூப்புடையவள்
கொளுத்து - மூட்டு	கொழுத்து-கொழுப்புமிகுந்து
கோளை - எலி	கோழை - கபம்
சுளி - புளியாரைக் கீரை	சுழி - நீர்ச்சுழி
சுளித்தல் - கோபித்தல்	சுழித்தல் - வட்டமிடுதல்
சோளம் - ஓர் பயிர்	சோழம் - சோழ தேசம்
தேளி - ஆராய்ந்துகொள்	தேழி - அதட்டு
நுளை - ஈனம்; குருடு	நுழை - உட்செல்
பளது - குற்றம்	பழது - பயில்
பளு - பாரம்	பழு - விலா; ஏணிப்பழு
புளுகு - பொய்	புழுகு - நாவிப் புழுகு
பூளை - ஓர் செடி	பூழை - துவாரம்
விளி - அழைப்பு	விழி - கண்

மேற்கண்ட பயிற்சியாலும் பின்வரும் பயிற்சியாலும் லகர, ளகர, ழகர வேறுபாடு உணராமையால் ஏற்படும் பிழைகளைப் பொருளை நோக்கி அறிந்துகொள்க.

6. ல, ள, ழ வேறுபாடு

ல	ள	ழ
அலகு - பறவை மூக்கு	அளகு - பெண் மயில்	அழகு - வனப்பு
அலி - பேடி	அளி - கொடு	அழி - கெடு
அலை - திரை, திரி	அளை - தயிர், கலக்கு	அழை - கூப்பிடு
ஆல் - ஆலமரம்	ஆள் - ஆண்மகன்	ஆழ் - அழுந்து
ஆலி - மழைத்துளி	ஆளி - தோழி	ஆழி - கடல்
இலை - (Leaf) மரத்தின் இலை	இளை - சக்திகுறை	இழை - நூல், சீவு
உலவு - உலாவு	உளவு - வேவு	உழவு - உழுதல்
உலை - நெருப்புள்ள அடுப்பு	உளை - குதிரை முதலியவற்றின்	உழை - இடம்
உலைத்தல் - சீரழித்தல்	உளைத்தல் - ஒலித்தல் [கழுத்து மயிர்	உழைத்தல் - முயற்சி செய்தல்
ஒலி - ஓசை	ஒளி - மறை	ஒழி - தள்ளு
ஒலித்தல் - ஆரவாரித்தல்	ஒளித்தல் - மறைதல்	ஒழித்தல் - தள்ளி விடுதல்
கலப்பு - கலத்தல்	களப்பு-கடலில் ஆழமில்லாத இடம்	கழப்பு - வேலை செய்யாது காலம்
கலி - துன்பம்	களி-மாவால் கிண்டிய களி, மகிழ்ச்சி	கழி - நூற்சுருள் [போக்கு
கலித்தல் - தழைதல்	களித்தல் - மகிழ்தல்	கழித்தல் - ஒழித்தல்
கலை - வித்தை	களை - பயிர்க்களை, அயர்வு, அகற்று	கழை - மூங்கில்
காலி - பசுக்கூட்டம், ஒழிவான	காளி - பார்வதி	காழி - சீகாழி (ஊர்)
கிலி - பயம்	கிளி - ஓர் பறவை	கிழி - பிள

குலவி - உறவாடி	குளவி - தேனீ	குழவி - குழந்தை
கூலம் - பலசரக்கு	கூளம் - குப்பை	கூழம் - எள்ளு
கோலி - கோலிக்காய்	கோளி - கொள்வோன்	கோழி - ஓர் பறவை
சலி - சல்லடையினாற் சலி	சளி - கோழை	சழி - தளர்
சூலி - கர்ப்பவதி	சூளி - ஆண்மயிர்	சூழி - உச்சி
தலை - சிரசு	தளை - கட்டு	தழை - தளிர், இலை
தவல் - குறைய	தவள - வெண்மையான	தவழ - ஊர
தாலி - மாங்கல்யம்	தாளி - பனைமரம்	தாழி - சாடி, குடம்
தால் - நாக்கு	தாள் - பாதம், (Paper) காகிதம்	தாழ் - தணி, தாழ்ப்பாள்
தோலி - ஓர் மீன்	தோளி - அவுரிப்பூண்டு	தோழி - சிநேகிதி
நாலி - முத்து	நாளி - கள்	நாழி - ஒருபடி
போலி - புடைத்த நெல்	பொளி - துளை	பொழி - அதிகரி
போலிய - பெருக	பொளிய - துளை செய்ய	பொழிய - அதிகரிக்க
	முளை - ஆப்பு, தறி	முழை - குகை
மூலை - (Corner) கோணம்	மூளை - (brain) தலையில் மூளை	மூழை - அகப்பை
வலி - வன்மை, நோய்	வளி - காற்று	வழி - பாதை
வாலி - ஓர் குரங்கு அரசன்	வாளி - அம்பு, (Bucket) ஓர் பாத்[திரம்	வாழி - வாழ்க
வால் - இளமை, (tail) புச்சம்	வாள் - ஓர் ஆயுதம்	வாழ் - வாழ்க
வாலை - திராவகம் வடிக்கும் [பாத்திரம்	வாளை - ஓர் மீன்	வாழை - ஓர் மரம்
விலா - மார்பு	விளா - ஓர் மரம்	விழா - திருவிழா

7. ன, ண வேறுபாடு

ன	ண
அனல் - நெருப்பு	அணல் - கீழ்வாய்
அனு - தொடர்ச்சி	அணு - நுண்மையானது
அனை - தாய்	அணை - அணைக்கட்டு
அனைய - அத்தன்மையான	அணைய - சேர
அனையார் - அத்தன்மையானவர்	அணையார் - பகைவர்
அன்னம் - சோறு, ஒரு பறவை	அண்ணம் - மேல்வாய்
அனுக்கம் - சோம்பல்	அணுக்கம் - சமீபம்
அரன் - சிவன்	அரண் - கோட்டை
ஆனி - ஒரு மாதம்	அணி - எழுத்தாணி
ஆனை - யானை	ஆணை - வீண் சபதம், கட்
ஆன் - பசு	ஆண் X பெண் [டளை
இனி - பின்பு	இணி - ஏணி
இனை - வருந்து	இணை - ஒப்பு
உனக்கு - (நீ) உன்+கு	உணக்கு - உலர்த்து
உன் - (வி) நினை; நீ என்பதன்	உண் - சாப்பிடு
உன்னி-நினைத்து, குதிரை [திரிபு	உண்ணி - ஓர் செந்து
ஊனம் - குறைபாடு	ஊணம் - ஓர் தேசம்
ஊன் - மாமிசம்	ஊண் - உணவு
என் - 'நான்' என்பதன் திரிபு	எண் - எண்ணிக்கை, நினை
எவன் - யார்	எவண் - எவ்விடம்
ஏனம் - பாத்திரம்	ஏணம் - மான், எலும்பு
ஏனை - ஒழிந்த	ஏணை - தொட்டில்
ஏன் - (Why)	ஏண் - பெருமை
கனம் - பாரம்	கணம் - கூட்டம்
கனி - பழம்	கணி - எண்ணு
கனை - ஒலி	கணை - அம்பு
கன்னன் - ஒரு வள்ளல்	கண்ணன் - ஸ்ரீ கிருஷ்ணன்
கன்னி - இளம் பெண்	கண்ணி - மாலை, பூட்டாங்
கானம் - இசை, காடு	காணம் - கொள் [கயிறு
கான் - காடு	காண் - பார்
கானல் - ஒளி	காணல் - பார்த்தல்
கினை - கவசம்; விளா மரம்	கிணை - மருதப் பறை
கின்னம் - துன்பம்	கிண்ணம் - சிறு வட்டில்

கின்னரம் - ஓர் யாழ்	கிண்ணரம் - ஓர் வீணை
துனி - வளை	துணி - குணத்தையுடையது
துனித்தல் - வளைத்தல்	துணித்தல் - எண் பெருக்கு
துனிப்பு - ஆடல்	துணிப்பு - ,, [தல்
கோன் - அரசன்	கோண் - வளைவு
கோனன் - ஆடுமேய்ப்பவன்	கோணன் - வளையமாட்டான்
சனம் - மக்கள்	சணம் - கணம்
சானம் - பெருங்காயம்	சாணம் - } மாட்டுச்
சானி - வேசி	சாணி - } சாணம்
சுனை - மலையில் நீரூற்று	சுணை - சுரணை, கூர்மை
சுன்னம் . பூச்சியம்	சுண்ணம் - பொடி
சேனம் - பருந்து	சேணம் - மெத்தை
சோனை - விடா மழை	சோணை - ஓர் நதி, ஓர் மலை
தனி - தனிமையான	தணி - குறை
தனித்தல் - தனிமையாதல்	தணித்தல் - குறைத்தல்
தன் + உடைய; தன்னுடைய	தண் - குளிர்
தானி - தானத்திலுள்ளது	தாணி - தான்றிமரம்
தினை - ஓர் தானியம்	திணை - இடம்
துனி - நோய்	துணி - சீலை
துனை - வேகம்	துணை - உதவி
நன்ன - பல்லாற் கடிக்க	நண்ண - பொருந்த
நானம் - கஸ்தூரி	நாணம் - வெட்கம்
நான் - I (தன்மைப் பெயர்)	நாண் - கயிறு
நுனிக்க - கூர்மையாக்க	நுணிக்க - நுட்பமாகச்
பனி - குளிர்	பணி - தொழில் [செய்ய
பனிக்க - நடுங்க	பணிக்க - கட்டளையிட
பனை - ஓர் மரம்	பணை - பருமை
பன் - ஒரு புல்	பண் - இசைப்பாட்டு
பன்ன - சொல்ல	பண்ண - செய்ய
பன்னல் - சொல்லல்	பண்ணல் - பண்ணுதல்
பன்னி - மனைவி	பண்ணி - செய்ய [செய்தல்
பானம் - நீர்	பாணம் - அம்பு
பானி - பருகுவோன்	பாணி - கை, பேச்சு
பான் - பானம்	பாண் - பாட்டு
பினைதல் - பிசைதல்	பிணைதல் - கட்டுதல்
புனை - பொலிவு	புணை - தெப்பம்
பூனை - ஓர் மிருகம்	பூணை - முல்லைநிலம்

பேன் - தலையிற் பற்றும் பூச்சி
பேண் - காப்பாற்று
மனம் - உள்ளம்
மணம் - வாசனை
மனை - வீடு
மணை - சிறு பீடம்
மானம் × அவமானம்
மாணம் - மாட்சிமை
மானி - மானமுள்ளவன்
மாணி - குறுகிய வடிவம்
மான் - ஓர் மிருகம்
மாண் - பெருமை
மானவர் - மனிதர்
மாணவர் - மாணாக்கர்
வானம் - ஆகாயம்
வாணம் - அம்பு
வானி - கூடாரம்
வாணி - சொல்

8. ர, ற வேறுபாடு

ர	ற
அர - பாம்பு	அற - முற்ற
அரம் - ஓர் கருவி	அறம் - தருமம்
அரவு - பாம்பு	அறவு - அறுதல்
அரன் - சிவன்	அறன் - அறம்
அரி - திருமால்	அறி - உணர்
அரிதல் - அறுத்தல்	அறிதல் - உணர்தல் [வாள்
அரிவாள் - கூன்வாள்	அறிவாள் - (அவள்) உணர்
அரிவை - பெண்	அறிவை - (நீ) உணர்வாய்
அருகு - சமீபம்	அறுகு - ஓர் புல்
அருந்து - உண்	அறுந்து - துண்டுபட்டு
அருப்பு - அரும்பு	அறுப்பு - அறுத்தல்
அரை - பாதி	அறை - அடி, அரங்கு
ஆர - நிறைய	ஆற - சூடுதணிய
ஆரி - சோழன்	ஆறி - சூடு தணிந்து
ஆரை - மதில்	ஆறை - ,,
இரந்தான் - வேண்டிக்கொண்டான்	இறந்தான் - செத்தான்
இரகு - ஸ்ரீராமனின் பாட்டன்	இறகு - சிறகு
இரக்கம் - மனவுருக்கம்	இறக்கம் - சரிவு
இரங்கு - மனமிளகு	இறங்கு - தாழ இறங்கு
இரவை - அணு	இறவை - ஏணி
இரா - இரவு	இறா - தேன்கூடு (இறால்)
இருக்கு - முதல் வேதம்	இறுக்கு - அழுந்தக்கட்டு
இருப்பு - இருக்கும் தன்மை	இறுப்பு - கடன் செலுத்துதல்

இருந்து - உட்காரச்செய்	இறுத்து - கடன் செலுத்தி,
இரும்பு - ஓர் உலோகம்	இறும்பு-குறுங்காடு [சொல்லி
இரை - ஒலி, உணவு	இறை - அரசன், கடவுள்
இரைவன் - ஒலிப்பேன்	இறைவன் - ,, ,,
ஈரல் - உள்ளுறுப்பில் ஒன்று	ஈறல் - தக்கம்
உரல் - நெல் முதலியன குற்றும்	உறல் - பொருந்துதல்
உரவு - வலிமை [உரல்	உறவு - பொருத்தம்
உரி - அரைப்படி	உறி - தூக்கு
உரு - வடிவு	உறு - மிகுதியான
உரை - பேச்சு	உறை - படைக்கூடு
உரைப்பு - தேய்ப்பு	உறைப்பு - காரம்
ஊரல் - உரிஞ்சல்	ஊறல் - ஊறுதல்
ஊரி - சங்கு	ஊறி - நீர் கசிந்து
ஊரு - அச்சம்	ஊறு - நீரூறு, இடையூறு
எரி - நெருப்பு	எறி - அறை
எரிபடுவன் - பிளவை	எறிபடுவன்-(அவன்) அறை
	[படுவான்
எரித்தல் - தீ எரித்தல்	எறித்தல் - வெயில் எறித்தல்
எரிப்பு - உறைப்பு	எறிப்பு - பிரகாசம், வெயில்
ஏரல் - கிளிஞ்சல்	ஏறல் - ஏறுதல் [எறித்தல்
ஏரா - மரக்கலத்தின் அடி மரம்	ஏறா - ஏறமாட்டா
ஏரி - குளம்	ஏறி × இறங்கி
ஒரு - ஒன்று என்பது திரிபு	ஒறு - அடக்கு
ஒருத்தல் - யானை	ஒறுத்தல் - வருத்துதல்
கரு - கருப்பம்	கறு - கோபம்,
	['கறுப்பு' என்பதன் பகுதி
கருப்பு - பஞ்சம்	கறுப்பு - கரிய நிறம்
கரை - எல்லை	கறை - குற்றம், மாசு
கர்ப்பம் - சினை	கற்பம் - உலக முடிவு
காரல் - ஒரு மீன்	காறல் - ஓர் மருந்துச் செடி
காரி - கறுப்பு	காறி - காறியுமிழ்ந்து
காரை - ஓர் செடி	காறை - கழுத்தணியில்
கிரி - மலை	கிறி - வழி, பொய் [ஒன்று
கீரி - ஓர் பிராணி	கீறி - பிளந்து
குரங்கு - ஓர் விலங்கு	குறங்கு - தொடை
குரவர் - பெரியோர்	குறவர் - ஓர் சாதியார்
குருகு - நாரை	குறுகு - சுருங்கு

துருக்த - ஒரு செடி
துரும்பி - புற்ருஞ்சோறு
துரை - ஒலி
கூரை - வீட்டுக்கூரை
கோரல் - வேண்டிக்கொள்ளுதல்
கோரை - ஓர் புல்
சருது - உலர்ந்த இலை
சார - பற்றிக்கொள்ள
சிரை - நரம்பு
சீரா - தலைச்சீரா
சூரல் - பிரம்பு
சூரன் - வீரன்
சேரி - சிரணி
சேரு - போர்
சேரல் - இணைத்தல்

சொரி - சிந்து
சொரிய - சிந்த
சொரிவு - பொழிவு
திரம் - ஸ்திரம்
திரை - திரைச்சீலை
துரவு - கிணறு
நெரி - கை நெரித்தல்
பரவை - பரப்பு, கடல்
பரி - குதிரை
பிரை - உறைமோர்
புரம் - ஊர்
பொரி - நெற்பொரி
பொரு - போர் செய்
மரம் - விருட்சம்
மரி - சாகு
மரை - தாமரை
மாரி - மழை
விரது - உபாயம்
விரல் - ‘விரல்’ என்னும் உறுப்பு

துறுக்த - இடையீடு
துறும்பி - காதுள் அழுக்கு
துறை - ஊனம்
கூறை - சீலை
கோறல்-கொல்லுதல்
கோறை - பழுது
சறுது - நழுவு
சாற - வழுக்க
சிறை - காவல்
சீறா - சீறாப்புராணம்
சூறல் - குடைதல் ‘சூல்’ [பகுதி
சூறன் - மூஞ்சூறு
சேறி - நெருங்கு
சேறு - தடு
சேறல் - செல்லுதல் [‘செல்’ பகுதி

சொறி-சொறிசிரங்கு, தினவு
சொறிய - சுரண்ட
சொறிவு - தினவு
திறம் - வலிமை
திறை - அரசிறை
துறவு - துறத்தல்
நெறி - வழி, சுளுக்கு
பறவை - பட்சி
பறி - பொன், பிடுங்கு
பிறை - இளஞ்சந்திரன்
புறம் - பக்கம்
பொறி - அடையாளம்
பொறு - மன்னி, தாமதி
மறம் - பாவம்
மறி - தடு
மறை-ஒளிந்துகொள், வேதம்
மாறி - மாற்றம் அடைந்து
விறது - விறகு எரி
விறல் - வலிமை

நா நெகிழ் பயிற்சிக் குரிய சொற்கள்

1. லகர ளகர ழகரச் சொற்கள்

அலங்காரம், அலங்கோலம், அலட்சியம், அலமாரி, அலர்தல், அலறல், அலி, அலுத்தல், அலுவல், அலை, அலைத்தல், அல்லி, அழகர், அழகு, அழல், அழி, அழிவு, அழு, அழுகண்ணி, அழுக்கு, அழுங்கு, அழுத்தம், அழுவம், அழைத்தல், அளபெடை, அளவளாவு, அளவை, அளி, அளை, அள்ளு.

ஆலங்கட்டி, ஆலம், ஆலயம், ஆலாபனம், ஆலை, ஆலோசனை, ஆழம், ஆழாக்கு, ஆழி, ஆழ்த்து, ஆழ்வார், ஆளுகை, ஆள்வினை.

இட்டலி, இடைவிடாமல், இயலும், இரங்கல், இரலை, இருகால், இலக்கணம், இலக்கியம், இலங்கு, இலச்சினை, இலவு, இலவம்பஞ்சு, இலை, இலௌகிகம், இல்லான், இல்லை, இழிசொல், இழிவு, இழுக்கு, இழை, இகழ், இமிழ், (ஒலி) இளகு, இளக்காரம், இளங்கதிர், இளநீர், இளவல், இளவேனில், இளைப்பு, இளமை.

ஈசல், ஈழம், (இலங்கை) ஈழை, ஈளை.

உமிழ், உருளை, உலகம், உலக்கை; உலவு, உலை, உலைதல். உலோகம், உலோபம், உழக்கு, உழவு, உழு, உழைப்பு. உழுந்து, உளுந்து, உளறு, உளைதல், உள்ளம், உள்ளி, உள்ளுதல்.

ஊசல், ஊழல், ஊழி, ஊழ், ஊளை.

எலி, எலும்பு, எலுமிச்சை, எல்லாம், எல்லை, எல்லோரா, எளிது, எளிமை, எளியோர், எளியவர், எள்ளல், எழும்பு, எழுச்சி, எழுதுகோல், எழுத்து, எழுப்பு, எழுமை, எழுந்தருள்.

ஏழ்மை, ஏழை, ஏழைமை, ஏலம், ஏலாமை, ஏலாதி, ஏழு.

ஒலுங்கு, ஒழுகு, ஒழுக்கம், ஒழுங்கு, ஒளி, ஒளிர், ஓலை.

கட்டில், கயிலை, கரிசல், கம்பளம், கருவிளம், கலகம், கலங்கு கலப்பு, கலம், கலயம், கலி, கலிங்கம், கலை, கலைதல், கல்வி, கழங்கு, கழஞ்சு, கழனி, கழி, கழிச்சல், கழுகு, கழுவு, கழை, களம், களவு, கள்வன், கள்ளன், கள்ளம், களை.

காலம், காலட்சேபம், காலமழை, காலன், காலாள், காலி, காலை, கால், காழகம், காழி, காழ், காழ்ப்பு, காளகம், காளமேகர், காளி, காளை,

கிழக்கு, கிழவன், கிழடு, கிழமை,கிழத்தி, கிழங்கு, **கிளர்**, கிளம்பு, கிளப்ப, கிளர்ச்சி, கிளிஞ்சல், கிளையார், கிளைத்தல், கிலுக்கு, கிலேசம். **கீல்**, கீலம், கீழறை, கீழ், கீழ்க்குரல், கீழ்ப்படிதல்.

குலசேகரன், குலவு, குலாசாரம், குலாலன், குலிகம், குலிங்கம், குலிசம், குலுக்கு, குலுங்கு, குலை, குல்லாய்.

கூலம், கூலி, கூழன், கூழாங்கல், கூழான், கூழை, கூழ், கூளம், கூளி, கூளியர்.

கெழு, கெழுதகைமை, கெழுமை, கெழுமு, கெளிறு.

கேழல், கேழ்வரகு, கேளிக்கை, கேளிர், கேள், கேள்வி.

கொலு, கொலுசு, கொலை, கொல், கொல்லம், கொல்லர், கொழி, கொழிஞ்சி, கொழு, கொழுகொம்பு, கொழுக்கட்டை, கொழுஞ்சி, கொழுநன், கொழுந்தன், கொழுந்து, கொழும்பு, கொளுவி, கொளுத்து, கொள்ளு, கொள்கை, கொள்ளார், கொள்ளி, கொள்ளிடம், கொள்ளை.

கோலம், கோலா, கோலாகலம், கோலாட்டம், கோலி, கோலியர், கோல், கோழி, கோழை, கோழைத்தனம், கோளம், கோளா, கோளாறு, கோளி, கோள்.

சலுகை, சல்லடை, சல்லி, சல்லியம், சழக்கு, சளசள, சள்ளை.

சால, சாலி, சாழல், சாளரம்.

சில, சிலந்தி, சிலம்பம், சிலம்பு, சிலர், சிலாக்கியம், சிலிர்க்க, சிலுசிலுத்தல், சிலுப்பு, சிலுவை, சிலை, சிலேடை, சில்லறை.

சீலம், சீலன், சீலா, சீலை, சீழ், சீழ்க்கை.

சுலபம், சுலோகம், சுலோசனம், சுழல், சுழற்ற, சுழி, சுழித்தல், சுளகு, சுளி, சுளுவு, சுளை, சுள், சுள்ளி.

சூல், சூலம், சூழல், சூழ்ச்சி, சூழ்வோர், சூளாமணி.

செலவு, செலுத்து, செல், செல்லம், செல்லல், செல்வன், செல்வாக்கு, செல்வி, செழிப்பு, செழுமை, செழியன், சோழியன்.

சைலம், **சோல்**, சொல்வளம், சொள்ளல், சொள்ளை.

தலம், தலை, தலையணை, தலைச்சன், தலைநாள், தலைதடுமாற்றம், தலைமாடு, தலைமுழுக்கு, தலையாரி, தலைமை, தலைப்படல், தலை

வன், தலைவி, தழும்பு, தழுவுதல், தழைவு, தழைதல், தளபாடம். தளர, தளர், தளர்ச்சி, தளவாடம், தளிர், தள்ளாடு, தள்ளு, தள்ளுபடி,

தாழ, தாழக்கோல், தாழை, தாழ்ச்சி, தாழ்மை, தாழ்ப்பாள், தாழ்வாரம், தாழ்வு, தாளாண்மை, தாளிதம்.

தில்லை, திளைக்க, தீபாவளி. **துலா**, துலாக்கோல், துலாம்பரம், துல்லியம், துவாலை, துளசி, துளிர், துளை, துள்ளி, துள்ளல்.

தூதளை, தூலம், தூள். **தெலுங்கு**, தெளி, தேளி, தேள், தைலம்.

தொலி, தொலை, தொல்லை, தொல்காப்பியம், தொழில், தொழு, தொழுவம், தொள்ளாயிரம், தோல்வி, தோழமை, தோழன், தோழி.

நிழல். நிழற்ற. **நீழல்**, நீலம், நீலமணி, நீலமேனி, நீலோற்பலம், **நுதல்**, நுளம்பு (கொசு), நுள்ளுதல், நுளையர், **நூல்**, **நூழில்**, நூழை.

நெல்லி, நெளி, நெளிய. **நேர்வாளம்**. **நொள்ளை**. **நோதல்**. நோன்முள், நோய்ஞ்சல், நோன்றல்.

பல்கை, பலகணி, பலகாரம், பலம், பலவந்தம், பலன், பலா, பலிக்க, பலுக, பல்லக்கு, பல்லாங்குழி, பல்லவர், பல்லாண்டு, பவளம், பவழம், பழக, பழக்கம், பழமை, பழம், பழுக்க, பழுது, பளிங்கு, பள்ளம், பள்ளி, பள்ளு, பள்ளை. **பாலின்**, பாலடை, பாலர், பாலம், பாலிகை, பாளையம், பாழான. **பிழம்பு**, பிழிய, பிழுக்கை, பிழைப்பு, பிளக்க, பிளவை, பிளிற, பிறழ்தல், பிலவ (ஓர் ஆண்டின் பெயர்), பில்லாக்கு, **பீலி**, பீழை, பீளை.

புலம்பு, புலம், புலமை, புலவன், புலர, புலால், புலியூர் புழுக்கம், புழுக்கை, புழுதி, புழுங்க. புளகம், புளிப்பு, புளியோலை, புள்ளுவர், **பூலா**, பூழியன். பையல், பொல்லாப்பு, பொழிப்பு, பொழுது, பொழில், பொள்ளல். **போல**, போழ, போளம்.

மலங்கு, மலங்க, மலடு, மலர், மலர, மலாய், மலிவு, மலைய, மலை, மலைக்க, மலைப்பு, மலையாளம், மல், மல்லி, மல்லிகை, மவுலி, மழலை, மழிக்க, மழு, மழுக்கம், மழை, மழைக்கோள்.

மால, மாலதி, மாலி, மாலினி, மாலுமி, மாலை, மால், மாவிலங்கு, மாழ்குதல், மாள, மாளவம், மாளிகை, மள்ளர்.

மிலாறு, மிலைய, மிளகாய், மிளகு, மிளிர், **மீளி**, **முரளு**.

முகில், முயல், முடங்கல், முதலை, முதலோன், முதல்வன், முல்லை, முழக்கம், முழங்க, முழம், முழவம், முழுக்கு, முழுத்தம், முழை, முளரி, முளை, முளைக்க, முளையடி, முள்ளங்கி, முள்ளி.

மூரல், மூலம், மூல பாடம், மூலிகை, மூளி, மூள, மூழ்குதல்

மெலி, மெல்ல, மெல்லிணை, மெல்லியல், மெல்லுதல்.

மேழி, மேலிடு, மேல், மேளம். மொக்குள், மொள்ளு, மொழுக் கன், மோழை

யாத்தல், யாழ், யாழ்ப்பாணம், லகு, லட்சியம், லட்சம், லவணம்,

லாவண்யம், லாபம், லாயம், லாடம், லாகிரி.

லிகிதர், லிபி. லோபம்,

வழக்கு, வழி, வழுக்கு வாழ்த்து, வாழ்தல், வாழ்வு, வாழி, வாளி. விழுது, விழுமம், விழைதல், விளம்பரம், விளிம்பு, விளைய, விளைச்சல், விளையாட்டு, விளையுள். வெல்லம், வெளி, வெளிச்சம், வெளிப்படை, வெளுப்பு, வெள்ளம், வெள்ளரி, வெள்ளாடு, வெள்ளாளன், வெள்ளி, வெள்ளிடை, வெள்ளுள்ளி, வெள்ளை, வெள்ளையடி.

வேலன், வேலி, வேலை, வேல், வேழம், வேளாண், வேளாண்மை, வேளாளர், வேளிர், வேளை, வேள், வேள்வி, வௌவால்.

2. னகர, ணகரச் சொற்கள்

அனந்தம், அனல், அனவரதம், அனுதி, அனுகூலம், அனுக்கிரகம், அனுசிதம், அனுமதி, அனைத்தும், அன்பு, அன்னம், அன்னியன். அன்னியோன்னியம், அன்னை, அணங்கு, அணி, அணைதல், அணு, அணை, அண்டங்காக்கை, அண்ணம், அண்ணல், அண்ணன், அண்ணி.

ஆனந்தம், ஆனந்தன், ஆனி, ஆனை, ஆன்மா, ஆணவம், ஆணி, ஆணித்தரம், ஆணை, ஆண், ஆண்மை.

இனம், இனும், இனி, இனிப்பு, இனிமை, இன்பம், இன்னும், இன்னல், இன்னோசை, இணங்கு, இணை, இணைப்பு. ஈனம்.

உன், உன்னதம், உன்மத்தம், உணங்கு, உணர், உணவு, உண்டியல், உண்மை.

ஊனம், ஊனக்கண், ஊன், ஊண், என், என்பு, என்னே.

எண்சுவடி, எண்ணம், எண்ணெய்.

ஏனம், ஏனைய, ஏன், ஏணி, ஏணை.

ஒன்பது, ஒன்னார், ஒண்மை, ஒண்ணுது.

கனகசபை, கனகம், கனம், கனல், கனவான், கனவு, கனு, கனி, கனிவு, கன்னம், கன்னி, கன்னிமை, கணகணப்பு, கணக்கன்,

கணம், கணவன், கணவாய், கணிதம், கணீர், கணு, கணைக்கால், கணையாழி, கண், கண்காணிப்பு, கண்ணி, கண்ணிமை, கண்ணோட்டம்.

கானகம், கானம், காணம், காணிக்கை, காண்.

கிணறு, கிண்கிணி, கிண்ணம், கிண்ணரம், கிண்ணி.

குனிதல், குன்றுதல், குணங்கு, குணம், குணுக்கு, குண்டு.

கூனல், கூனி, கூன். கெண்டி. கெண்டை, கேணி, கேண்மை. கொன்று. கோன், கோணங்கி, கோணம், கோண்.

சனம், சனனம், சனார்த்தனன், சனி, சனியன், சன்மானம், சன்மார்க்கம், சன்னதி, சன்னல், சன்னியாசி.

சணம், சணல், சண்பகம், சானகி, சாணம், சாணி, சாணை, சாண்.

சினம், சினேகம், சினை, சின்னம், சின்னபின்னம்,

சீனக்காரம், சீனு, சீனி.

சுனை, சுன்னம், சுணக்கம், சுணங்கு, சுணை, சுண்ணம், சுண்ணாம்பு. சென்மம், சென்னை, செண்பகம்

சேனை, சைனர், சைனியம், சேணம், சேணியர், சேண், சோணடு, சோணை.

ஞானம், ஞானி, ஞானேந்திரியம்.

தனது, தனம், தனயன், தனி, தன்மை, தன், தணல், தணி, தணித்தல், தண், தண்ணீர்.

தானம், தானியம், தாணு.

தினம், தினமணி, தினவு, தினுசு, தினை. தின்ன.

தீனம், தீனபந்து, தீனி.

துன்பம், துன்னல். துணி, துணிகரம், துணிச்சல், துணை.

தென்னவன். தேன், தேனீ, தேன்குழல், தொனி. தோணி.

நனி, நனைய, நன்மை, நன்செய், நன்னூல், நண்ண, நண்பன்,

நாணம், நாணயம், நாணல், நாண், நாணி, நுனி. நுணல், நுணுக்கம்; நுண்ணிய, நுண்மை.

பனி, பனை; பனிமயம், பணி, பணிகாரம். பண்ணை, பண்பு.

பானம், பானை, பான்மை,

பின்; பின்னம்; பின்னல்; பிணங்கு; பிணக்கம்; பிணம்; பிணி; பிணை; பிண்ணாக்கு.

புனம்; புனர்; புனல்; புனிதம்; புன்செய்; புன்முறுவல்; புன்னை; புணர்ச்சி; புண்; புண்ணியம்.

பூனை; பூண்; பூணூல்.

பெண்; பெண்மை. பொன்; பொன்னாங்கண்ணி; பொன்னுரை; பேன்; பேண்; பேணு; பேணுதல்.

மனம்; மன்னன்; மன்னிப்பு; மனச்சாட்சி; மணக்கும்; மணங்கு; மணமகள்; மணம்; மணி; மணியக்காரன்; மனை; மண்.

மானிடம்; மானியம்; மான்; மாணவன்; மாணாக்கன்; மாணிக்கம்; மாண்பு.

மினவுதல்; மினுக்கம்; மினுங்கு; மின்னல்; மீனவன்; மீன்.

முனி; முனிவர்; முனை; முன்கை; முன்பு; முன்னணி; முன்னிலை; முன்னோர்.

மென்மை; மென்னடை; மேனி; மேன்மக்கள்; மேன்மேல்.

மைனு; மோன நிலை; மோனை; மௌனம்.

வனப்பு; வனம், வனாந்தரம்; வன்சொல்; வன்மை; வன்னியர். வணங்கு; வணிகம்; வணிகன்; வண்ணம்.

வான்; வானம்; வானிலை; வாணம், வாணாள்; வாணிகம். வாணிபம்;

வினவு; வினை; வினாடி; வினியோகம்; வினை; வினோதம். விண்; விண்ணப்பம்; விண்மீன்; வீணன்; வீணை. வெண்மை. வேனில்.

3. ரகர றகரச் சொற்கள்

அரக்கர்; அரக்கு, அரங்கு; அரசன்; அரசி; அரசியல்; அரண்; அரம், அரவம். அரி; அரிசி; அரிச்சுவடி; அரிதல்; அரிது; அரிய; அரியணை; அரிவாள்; அரிவை. அருள்; அருணன்; அருணாசலம்; அருந்ததி; அருந்து; அருமை; அரும்பு; அருவி; அருந்துதல்; அரூபி; அரை; அரைப்பு; அரையாப்பு; அரோசிகம்; அர்ச்சகன்; அர்ச்சனை; அர்ச்சியசிஷ்டர்; அர்த்தசாமம்; அர்ப்பணம்; அறம், அறச்சாலை; அறவோர். அறி; அறிகுறி; அறிக்கை; அறிஞன்; அறிமுகம்; அறிபவர்; அறிவாளி; அறிவிலி; அறிவீனம்; அறிவு. அறுகு; அறை; அறைகூவல்; அறைகுறை (அரைகுறை). அற்பன்; அற்பம்; அற்புதம்.

ஆர; ஆரணம்; ஆரம்; ஆரவாரம்; ஆராட்டு; ஆராதனை; ஆராய்ச்சி; ஆரியம்; ஆரைக்கீரை; ஆரோகணம்; ஆரோக்கியம்; ஆர்; ஆர்ப்பரி; ஆர்வம். ஆற; ஆறு; ஆறுதல்; ஆறுது.

இரக்கம்; இரங்கு; இரட்டை; இரப்பு; இரவி; இரவு; இறகு; இறக்கம்; இறங்கு; இறப்பு; இறவை; இரிதல்; இருட்டு; இருதயம்; இருப்பிடம்; இருமல்; இரும்பு; இருள். இறுக்கம்; இறுத்தல்; இறுதி; இறுமாப்பு; இறும்பூது; இரை; இரைச்சல்; இறை; இறைச்சி; இறைமை; இறைவன்.

ஈரம்; ஈருள்ளி; ஈர்க்கு. ஈறு.

உக்கிரம்; உத்தரம்; உத்தரீயம்; உத்தரவு; உபகாரம்; உபகரணம்; உயரம்; உயிர்; உரம்; உரி; உரிமை; உரியவர்; உருள்; உருகு; உருட்டு; உருபு, உருளி; உருளை. உறக்கம்; உறங்கு; உறவு; உறவினர்; உறுது; உறி; உறுகண்; உறுதி; உறுமு; உறை; உறைப்பு; உறையுள்; உறைவிடம்; உற்சாகம்; உற்சவம்; உற்பாதம்.

ஊராண்மை; ஊருணி. ஊறணி; ஊறுதல்; ஊற்று.

எரி; எரிச்சல்; எரு; எருக்கு, எருது; எருமை. எறி; எறும்பு.

ஏரி, ஏரல். ஏறு; ஏறி; ஏற்றம்.

ஒரு; ஒரு சந்தி; ஒருதலை; ஒருமை. ஒறு. ஒறுத்தல்.

ஓரம்; ஓராயம்; ஓர்.

கரம்; கரடு. கரடி; கரணம்; கரண்டி; கரப்பான்; கரவு; கறங்கு; கரி; கரிக்குருவி; கரிகாலன்; கருகு; கருக்கு; கருடன்; கருணை; கருமம்; கருமி; கருமை; கரும்பு; கரை; கர்ப்பம். கற; கறத்தல்; கறி; கறிமசாலை; கறு; கறுப்பு; கறுவு; கறை; கறவை; கற்பனை; கற்பு.

காரணம்; காரம்; காராம்பசு; காராமணி; காராளர்; காரி; காரிகை; காரியம்; காரியதரிசி; காருகர்; காரை; கார்த்திகை. காறல்; காறு; காறை.

கிரகம்; கிரகித்தல்; கிரணம்; கிரந்தி; கிரமம்; கிரயம்; கிராமணி; கிராமம்; கிராம்பு; கிரியை; கிருஷி; கிருமி. கிறுக்கு; கிறுக்கன்.

கீரி; கீரை; கீர்த்தனை; கீர்த்தி. கீறு.

குரங்கு; குரல்; குரவை; குரு; குருடு; குருதி; குருந்து; குரும்பை; குருளை. குரை; குரோதம். குறடு; குறத்தி; குறம்; குறவன்;

குறள்; குறி; குறிக்கோள்; குறிச்சி; குறிஞ்சி; குறிப்பு; குறுக்கம்; குறுணி; குறுணை; குறுந்தடி; குறுந்தொட்டி; குறை.

கூரை; கூர். கூறு; கூறுபாடு; கூறை; கெருடன்; கேரளம்;

கொற்கை. கோரணி; கோரம்; கோரி; கோரிக்கை; கோரை; கோரோசனை; கௌரவம்; கௌரி.

சரக்கு; சரசம்; சரணம்; சரணாகதி; சரம்; சராசரம்; சராசரி; சரி; சரிகை; சரிதல்; சரித்தல்; சரித்திரம்; சரிவு; சரீரம்; சரீரி, சருகு; சர்க்கம்; சர்க்கரை; சர்ச்சை; சர்ப்பம்; சர்க்கார்; சர்வம். சறுகு; சறுக்கு; சற்பாத்திரம்;

சார்ங்கம்; சாரணர்; சாரதி; சாரம், சாரல்; சாராயம்; சார்பு. சாற்று.

சிரங்கு; சிரம்; சிரஞ்சீவி; சிரட்டை: சிரஸ்தார்; சிரத்தை; சிருஷ்டி. சிறுகுடி; சிறுத்தை; சிறுபயிறு; சிறுபான்மை; சிறுமி; சிறுமை; சிறுவன்; சிறை; சிற்சபை; சிற்பம்.

சீரகம்; சீராட்டல்; சீரை; சீர்; சீர்குலைதல்; சீர்கேடு; சீர் தூக்கு; சீர்மை, சீறு; சீறு.

சுரங்கம்; சுரணை; சுரண்டல்; சுரபி; சுரம்; சுருக்கம்; சுருங்கு; சுருட்டு; சுருதி; சுருள்; சுரூபம். சுறுசுறுப்பு,

சூரன்; சூரியகாந்தி; சூரியன். சூறுவளி; சூறைக்காற்று.

செரித்தல்; செரு; செருகு; செருக்கு; செருந்தி; செருப்பு. செறிவு; செறு.

சேர, சேரமான்; சேரன்; சேரி; சேர்; சேர்மானம்; சேர்வை; சேறு.

சொரிய; சொரிவு; சொரூபம்; சொர்க்கம்; சொர்ணம்; சொறி; சொறிதல்; சொற்பம்;

சோர; சோரன், சோர்வு; சௌராட்டிரம், சோறு.

தர; தரகு; தரங்கம்; தரங்கன்பாடி; தரணி; தரம்; தராசு. தரித்தல்; தரிசனம்; தரித்திரம்; தருணம், தருப்பை; தருமம், தருவித்தான், தரை; தர்பார். தறி; தறித்தல்; தறுகண்; தறுதலை; தற்குறிப்பு; தற்சமயம்,

தாரகை; தாரணி; தாரதம்மியம், தாரம்; தாரா; தாராளம்; தார். தாறுமாறு; தாற்பரியம்.

திரட்சி; திரவம்; திராவிடம்; திரவியம்; திறமை; திரி; திரிதல்; திரிகடுகம்; திருகு; திருக்கு; திருகுதாளம், திருடன்; திருட்டாந்தம்; திருத்தம்; திருநாள்; திரும்ப; திருவாசகம்; திரை. திறை (அரசிறை).

தீரம்; தீர்க்கதரிசனம்; தீர்த்தம்; தீர்மானம்; தீர்வை; தீர்வைக்காரன்.

துரத்து; துருக்கர்; துரும்பு; துருவம்; துரை; துரைசானி; துரைத்தனம்; துரோகம்; துறவறம்; துறைமுகம்.

தூரம், தூரதிருஷ்டி, தெரிசனம், தெரிதல், தெரிவித்தல், தெற்கு,

தேர, தேரை, தேர்வு, தேர்ச்சி; தேறுதல். தைரியம். தோரணம். தோற்கருவி,

நரகம், நரம்பு, நரன், நரி, நரை, நறவு, நறுக்க, நறுக்குமூலம், நறுந்தொகை,

நாரை, நார். நாறு, நாற்காலி, நாற்குணம்.

நிரட்சரேகை, நிரந்தரம், நிரம்ப, நிரல், நிரவல், நிராகரித்தல், நிருபம், நிரூபணம், நிர்வகித்தல், நிர்வாணம், நிர்ணயம், நிர்ப்பந்தம், நிர்மாணம், நிர்வாகம்; நிறம், நிறுத்தல், நிறை,

நீரழிவு, நீராவி, நீர்த்திவலை, நீர்நிலை, நீர்மட்டம்; நீறு,

நுரை. நூறு. நெரி, நெரிஞ்சி, நெருங்கு, நெருப்பு, நெறி.

நேரம், நேர், நேர்த்தி, நேர்பட, நேர்மை. நொறுங்கு.

பரணி, பரண், பரத கண்டம், பரதம், பரதவர், பரத்தை, பரபரப்பு, பரப்பு, பரமன், பரம்பரை, பரவசம், பரவர், பரிசம், பரிசில், பரிசு, பரிட்சை, பரிதாபம், பரித்தியாகம், பரிபக்குவம், பரிபாடல், பரிபாலனம், பரிபூரணம், பரிமளம், பரிமாணம், பரிமாறுதல் பரிமேலழகர், பரிவாரம், பரிவு. பருகுதல், பருத்தி, பருந்து, பருப்பு, பருமன், பரை, பர்த்தா. பறத்தல், பறட்டை, பறண்டுதல், பறம்பு, பறவை, பறி, பறித்தல், பறை.

பாரசீகம், பாரதியார், பாரபட்சம், பாரம்பரை, பாராட்டு, பாராயணம், பாரிசம், பாரிசாதம், பார், பார்த்தல், பார்வதி, பார்வை. பாறை.

பிரகடனம், பிரகாசம், பிரகாரம், பிரக்யாதி, பிரசங்கம், பிரசவம், பிரசன்னம், பிரசாதம்; பிரசாரம், பிரசித்தம், பிரச்சினை, பிரண்டை, பிரதமர், பிரதாபம், பிரதி, பிரபஞ்சம், பிரபு, பிரமாணிக்கம், பிரமிப்பு, பிரயத்தனம், பிரயாணம், பிரயோசனம், பிரலாபம், பிரவேசம், பிரளயம்; பிறகு, பிறப்பு, பிறர், பிறவி. பிராட்டி, பிராணன், பிராணி, பிராது, பிரார்த்தனை, பிராப்தி, பிரார்த்திக்க, பிராயச்சித்தம், பிராயம், பிரித்தல், பிரியம், பிரிதல்; பிரீதி, பிரேரித்தல், பீர், பீர்க்கு; பிறிது, பிறை, பிறைசூடி.

புரட்சி, புரட்டாசி, புரம், புரவி, புரளி, புறங்காடு, புறங்கூறல், புறணி, புறப்படு, புறம்,

பூரணம், பூரிப்பு, பூர்வம், பூர்வீகம். பெரியவர், பெருகு, பெருக்கம், பெருங்காயம், பெருச்சாளி, பெருந்தகை, பெருமாட்டி, பெருமாள், பெருமான், பெருமிதம், பெருமை, பெரும்பாலும்; பெற, பெறுதல்.

பேரன், பேரிகை, பேரீச்சம்பழம், பேர்த்தி; பேறு, பேறுகாலம்.

பொரி, பொரியல், பொருட்டு, பொருத்தம், பொருநை, பொருந்த, பொருமை, பொறி, பொறுமை, பொறை, பொற்பு.

போராட்டம், போர், போர்க்களம், போர்வை.

மரகதம், மரக்கலம், மரக்கால், மரபு, மரம், மரித்தல், மரியாதை, மருங்கு, மருதம், மருந்து, மருமகன், மருமகள், மருவினன் (தழுவினன்), மரைக்காயர்; மறதி, மறம், மறவர்,மறி, மறுப்பு, மறுதலி, மறுமை.

மாரன், மாரி, மாருதம், மார்கழி, மார்க்கம், மார்பு; மாறாட்டம், மாறுபாடு, மாற்சரியம்,

மிரட்டு, மிரளுதல், மிருகம், மிருதங்கம், மிருது; மீற.

முரசு, முரடு, முரண், முரண்டு, மூர்க்கம், மூர்க்கன், மூர்த்தி; முறம், முறையீடு, முற்பகல்,

மெருகு, மெருகெண்ணெய், மேருமலை, மேரை; மேற்கு, மேற்கோள்.

வரகு, வரட்சி, வரம், வரம்பு, வரலாறு, வரன், வரி, வரிசை, வருகை, வருடம், வருத்தம், வருந்து, வருவாய், வருவி, வரை, வர்த்த

மானம், வர்மம், வர்ஷித்தல், வர்ணம், வர்ணனை, வர்ணித்தல்; வறடு, வறியவர், வறுத்தல், வறுமை, வற்புறுத்தல்.

வாரம், வாராவதி, வாரி, வார், வார்ப்பு வேலை.

விரட்டுதல், விரதம், விரல், விரவு, விரி, விருட்சம், விருது, விருத்தி, விருந்து, விருப்பம், விரைவு, விரோதம். விறகு, விற்பனை.

வீரம், வீரன், வீரியம், வீறுப்பு, வீற்றிருத்தல்.

வெருட்டுதல், வெருளுதல்; வெறுமை, வெறும் பேச்சு, வெற்றிலை, வெற்றுரை,

வேர், வேர்க்கடலை, வேர்வை, வேற்றுமை, வைரம், வைராக்கியம், வேறு.

ணகர மெல்லின மெய் அதன் இனமாகிய டகரத்தோடும் னகர மெல்லின மெய் அதன் இனமாகிய றகரத்தோடும் இணைந்து வருதற்கு உதாரணங்கள்

அண்டா, அண்டம், அண்டர், அண்டல், அண்டு, அண்டை; அன்று, அன்றில், அன்றி.

ஆண்டி, ஆண்டு; ஆன்ற, ஆன்றார், ஆன்றோர்.

இரண்டகம், இரண்டு; இன்றி, இன்று.

ஈண்டு, ஈண்டை; ஈன்றவள், ஈன்றாள்.

உண்டான், உண்டி, உண்டியல், உண்டை.

ஊன்று, ஊன்றி, ஊன்றுகோல், ஊன்றிக்கொள்.

என்றான், என்று, என்றும். ஒன்றல், ஒன்றன் பால், ஒன்றி, ஒன்று.

கண்டம், கண்டனம், கண்டாங்கி, கண்டி, கண்டிகை, கண்டிப்பு, கண்டு, கண்டை; கன்று, கன்றி.

காண்டம், காண்டவம், காண்டாமிருகம், காண்டிகை, காண்டிபம், காண்டீபம்.

குண்டு, குண்டலம், குண்டன், குண்டா, குண்டிகை, குண்டு, குண்டை, குன்றம், குன்றல், குன்றி, குன்று. கூண்டு.

கெண்டி, கெண்டை. கொண்டல், கொண்டாடு, கொண்டி, கொண்டை. கொன்றான், கொன்றை.

சண்டை, சான்றோர், சான்றாண்மை, சான்று. சிண்டு; சுண்ட, சுண்டல், சுண்டி, சுண்டு, சுண்டெலி, செண்டா, செண்டு. சென்று; ஞான்று; தண்டம், தண்டல், தண்டன், தண்டி, திண்டாட்டம், திண்டு, தின்றவன், தீண்டு, தீண்டுதல், துண்டம், துண்டி, துண்டு; துன்றுசுவை. தூண்டாவிளக்கு, தூண்டில், தெண்டன்; தென்றல். தொண்டன், தொண்டி, தொண்டு, தொண்டை; தொன்று தொட்டு. தோன்றல், தோன்றாத்துணை, தோன்றினர். நண்டு, நன்றி, நன்று. நொண்டு, நொண்டி, நோண்ட; நோன்றல். பண்டகசாலை, பண்டம், பண்டாரம், பண்டி, பண்டிகை, பண்டிதன், பண்டு, பண்டையோர், பாண்டம், பாண்டல், பாண்டி, பாண்டு, பாண்டை, பிண்டம், பிண்டி; பின்றை. மண்டபம், மண்டலம், மண்டலி, மண்டி, மண்டிலர், மண்டு, மண்டூகம், மண்டை; மான்றல். மிண்டு, மீண்டான், முண்டம், முண்டாசு, முண்டு; மூன்று, மென்றுதின். வண்டல், வண்டி, வண்டு, விண்டு, வெண்டளை, வெண்டைக்காய், வெண்டையம்; வென்றி, வென்றேன்; வேண்டு.

நகர மெல்லின மெய் அதன் இனமாகிய தகரத்தோடு இணைந்து வரும் என்பதற்குச் சில உதாரணங்கள்

அந்த, இந்த, எந்த, கந்தன், கந்தம், குந்தம், சந்தம், சொந்தம், தந்தான், நிந்தை. பந்து, மந்தை, வந்து, வந்தனர்.

மொழிக்கு முதலில் வரும் எழுத்துக்கள்

கீழ்க் காணும் வரிசையில் பொறிக்கப்பட்டுள்ள தடித்த எழுத்துக்களில் தொடங்கும் சொற்கள் யாவும் தமிழில் வழங்கும் பிற மொழிச் சொற்கள் எனக் கொள்க

அ	ஆ	இ	ஈ	உ	ஊ	எ	ஏ	ஐ	ஒ	ஓ	ஔ	12
க	கா	கி	கீ	கு	கூ	கெ	கே	கை	கொ	கோ	கௌ	12
ங												
ச	சா	சி	சீ	சு	சூ	செ	சே	சை	சொ	சோ	சௌ	12
ஞ	ஞா	(ஞி)	—	—	—	ஞெ	(ஞே)	—	ஞொ	—	—	4
ட	டா	டி	டீ	--	டூ	டெ	டே	டை	டொ	டோ	—	10
த	தா	தி	தீ	து	தூ	தெ	தே	தை	தொ	தோ	தௌ	12
ந	நா	நி	நீ	நு	நூ	நெ	நே	நை	நொ	நோ	நௌ	12
ப	பா	பி	பீ	பு	பூ	பெ	பே	பை	பொ	போ	பௌ	12
ம	மா	மி	மீ	மு	மூ	மெ	மே	மை	மொ	மோ	மௌ	12
ய	யா	—	—	யு	யூ	—	—	—	—	யோ	யௌ	6
ர	ரா	ரி	ரீ	ரு	ரூ	ரெ	ரே	—	ரொ	ரோ	ரௌ	11
ல	லா	லி	லீ	லு	லூ	லெ	லே	—	லொ	லோ	லௌ	11
வ	வா	வி	வீ	—	—	வெ	வே	வை	—	—	வௌ	8

குறிப்பு:– ங என்ற எழுத்து சுட்டெழுத்தோடும் வினாவெழுத்தோடும் சேர்ந்தே மொழிக்கு முதலில் வரும்.

உதாரணம்:– அங்ஙனம் இங்ஙனம்
எங்ஙனம் யாங்ஙனம்

௩ நீக்கலாகவுள்ள மொழிக்கு முதலில் வரும் எழுத்துக் களுக்கு உதாரணம் வருமாறு:-

அ

அரிசி
ஆடை
இலை
ஈ
உரல்
ஊஞ்சல்
எருது
ஏர்
ஐயம்
ஒன்று
ஓடம்
ஔவியம் (பொறாமை)

க

கடல்
காடு
கிழங்கு
கீரை
குருவி
கூடு
கெடுதல்
கேள்வி
கை
கொக்கு
கோழி
கௌவை (ஒலி)

ச

சங்கு
சார்பு
சிலம்பு
சீப்பு
சுக்கு
சூழ்தல்
செல்வம்
சேரி
சைவம்
சொல்
சோறு
சௌக்கியம்

ஞ

ஞமலி - (நாய்)
ஞாயிறு - (சூரியன்)
(ஞிமிறு - மிஞிறு என் பதன் எழுத்து நிலை மாறின இலக்கணப் போலி (மிஞிறு-வண்டு)
ஞெகிழி-கடைக்கொள்ளி
(ஞேயம் - நேசம் என் பதன் போலி)
ஞொள்கல் - (மெலிதல்)

ட

டம்பம்
டாப்பு (ஜாப்தா)
(டிங்கியடித்தல் - சோற்றுக் குத் திண்டாடுதல்)
டிலா - தளர்ச்சி
(டுவிடுதல் - நட்பை விட்டிடு தல்)
(டொங்கு - பொந்து)
டோலி - தூக்கிச் செல்லும் மஞ்சம்
டெலிபோன் - ஓர் கருவி
டேரா - முகாம் (camp)
(டைகாத் - சர்வமானிய கிராமம்)

த

தங்கம்
தாழ்ப்பாள்
திண்ணை
தீ
துண்டு
தூண்
தெப்பம்
தேங்காய்
தை
தொடை
தோள்
தௌவை (மூதேவி)

ந

நகம்
நாய்
நிலை
நீர்
நுங்கு
நூறு
நெல்
நேர்மை
நைதல்
நொண்டி
நோக்கம்
நௌவி (மான்)

ப

பகல்
பாடல்
பிட்டு
பீர்க்கு
புதுமை
பூட்டு
பெண்
பேண்
பையன்
பொன்னன்
போர்வை
பௌவம் (கடல்)

ம

மல்லிகை
மாலை
மின்னல்
மீன்
முள்
மூத்தவர்
மெத்தை
மேடை
மைந்தன்
மொட்டு
மோப்பம்
மௌவல் (காட்டு மல்லிகை)

ய

யவனர்
யானை
யுக்தி
யூகம்
யோகம்
யௌவனம்

ர

ரகசியம்
ராகம்
ரிஷி
ரீங்காரம்
ருசு
ரூபம்
ரெட்டியார்-ஓர் [ஜாதி
ரேகை
ரொக்கம்
ரோகம்
(ரௌத்திரம்)

ல

லட்சம்
லாபம்
லிபி (எழுத்து)

வ

வளை
வாளி
விளக்கு

ல (தொடர்ச்சி)	வ (தொடர்ச்சி)
லீலை - விளையாட்டு	வீடு
லுங்கி - ஒருவகை ஆடை	வெள்ளி
(**லூட்டி** - கொள்ளை)	வேர்
லெப்பை - லப்பை	வையம்
லேகியம் - நக்கியுண்ணும் மருந்து	வௌவு
(**லொஸ்கு** - ஒன்றுமின்மை)	
லௌகீகம் - உலக சம்பந்தம்	

குறிப்பு. மேற்காட்டிய உதாரணங்கள் அடைப்புக் குறியினுள் உள்ள வார்த்தைகள் வழக்கில் மிகுதியாக இல்லை.

தடித்த எழுத்துக்களில் காணப்படும் சொற்கள் யாவும் பிற மொழிச் சொற்கள்.

மொழிக்கு இறுதியில் வரும் எழுத்துக்கள்.

மெய்யெழுத்துக்களின்மேல் ஏறிவரும் அ, ஆ, இ, ஈ, உ, ஐ முதலிய உயிரெழுத்துக்களும், மெய்யெழுத்துக்களில் ஞ், ண், ந், ம், ன், ய், ர், ல், வ், ழ், ள் என்பனவும் மொழிக்கு இறுதியில் வரும்.

உதாரணம்

பல	—	அ	உரிஞ் (தேய்)	—	ஞ்
பலா	—	ஆ	பெண்	—	ண்
கிளி	—	இ	வெரிந் (முதுகு)	—	ந்
தம்பீ	—	ஈ	மரம்	—	ம்
அது, உப்பு	—	உ	அரசன்	—	ன்
உலக்கை	—	ஐ	நாய்	—	ய்
			வேர்	—	ர்
			செல்	—	ல்
			தெவ் (பகை)	—	வ்
			யாழ்	—	ழ்
			ஆள்	—	ள்

குறிப்பு: கேள, சேள, முதலிய அளபெடைச் சொற்களில் எகரவிறுதியும், ஓரெழுத்தொரு மொழிகளாகிய பூ, கூ முதலியவற்றில் ஊகார இறுதியும், தே (தெய்வம்) பே (நுரை) நே (அன்பு) முதலியவற்றில் ஏகார இறுதியும், சோ (அரண்) கோ (அரசன்) முதலியவற்றில் ஓகார இறுதியும், வௌ, கௌ முதலியவற்றில் ஔகார இறுதியும் வரும்.

மொழிக்கு இடையில்வரும் எழுத்துக்கள்.

பொது விதிகள்

ஒரு சொல்லின் இடையில் ர், ழ் என்ற மெய்கள் தத்தம் எழுத்தோடு சேர்ந்து வாரா. ஏனைய பதினாறு மெய்களும் தத்தம் எழுத்தோடு சேர்ந்து வரும்.

உதாரணம்:— சுக்கு, அங்ஙனம், பச்சை, மஞ்ஞை, (மயில்) பட்டம், கண்ணன், பத்து, அந்நியர், அப்பம், அம்மி, செய்ய, பல்லி, கொவ்வை, பள்ளம், குற்றம், கன்னம்.

ஒரு சொல்லின் இடையில் க், ச், த், ப், வ், ர், ழ் என்ற மெய்கள் நீங்கலாக உள்ள பதினொரு மெய்களும் வேறு எழுத்துக்களோடு சேர்ந்துவரும்.

உதாரணம்:- பங்கு, பஞ்சு, தட்பம், மண்டபம், அந்தி, அம்பு, பெய்து, சார்பு, நல்கு, போழ்து (பொழுது), தெள்கு (தெள்ளுப்பூச்சி), கற்பு, நன்று

புறனடை:— சிலர் பிறமொழிச் சொற்களை எடுத்தாளும்போது தமிழொலி கொடுப்பதில்லை. அத்தகைய சொற்களில் முற்கூறிய விதிகள் பொருந்தாமை காண்க.

(உ-ம்) சுக்ரன், பத்ரம், அப்ரகம், திவ்யம்.

ஒரு சொல்லின் இடையில்வரும் ர், ழ் என்ற மெய்கள் பிற மெய்களோடு சேர்ந்தே வரும்.

(உ-ம்) சார்பு, போழ்து (பொழுது)

குறிப்பு: ஒரு சொல்லின் இடையில் உயிரெழுத்துக்கள் தனியாக வாரா. மெய்யெழுத்தோடு சேர்ந்தே வரும்.

சிறப்பு விதிகள்,

ஒரு சொல்லின் இடையில்வரும் மெல்லின மெய்கள் பெரும்பாலும் தமக்கு இனமான வல்லின உயிர்மெய்கட்கு முன்னர் வரும்.

உதாரணம்: சங்கு, நஞ்சு, வண்டு,
பந்து, அம்பு, ஒன்று.

ண், ன், முதலிய மெல்லினமெய்கள் தமக்கு இனமல்லாத வேறு உயிர்மெய்கட்கு முன்னரும் வரும்.

(உ-ம்) எண்கு, புன்கு, பண்பு, இன்பம்,
வெண்மை, நன்மை,

ஒரு சொல்லின் இடையில் ட், ற் என்னும் மெய்களில் ஒன்று வந்தால் அதன்பின்வரும் எழுத்து க், ச், ப் என்னும் மெய்கள்மேல் உயிரேறிய உயிர்மெய்யெழுத்துக்களில் ஒன்றாக வும் இருக்கும்.

(உ-ம்) வெட்கம், கற்க, மாட்சி, பயிற்சி, திட்பம், கற்பு.

ஒரு சொல்லின் இடையில் ய், ர், ழ் என்னும் மெய்க ளில் ஒன்று வந்தால் அதன்பின்வரும் உயிர்மெய்யெழுத்து க், ச், த், ந், ப், ம், வ், என்னும் மெய்கள்மேல் உயிரேறிய உயிர்மெய்யெழுத்தாக இருக்கும்.

(உ-ம்) ய்-பொய்கை, கொய்சகம், எய்தான், செய்நர், ஆய்பு, சேய்மை, ஆய்வு.

ர்-சேர்க, சேர்தும், சேர்நர், மார்பு. சீர்மை, ஆர்வம்.
ழ்-மூழ்கு, வாழ்தல், வாழ்நன், சூழ்ப, சீழ்மை, வாழ்வு.

ஒரு சொல்லின் இடையில் ல், ள் என்னும் மெய்களில் ஒன்று இருந்தால் அதன்பின்வரும் எழுத்து க், ச், ப், வ் என் னும் மெய்கள்மேல் உயிரேறிய உயிர்மெய்யெழுத்துக்களில் ஒன்றாக இருக்கும்.

(உ-ம்) நல்கு, வல்சி, சால்பு, செல்வம்,
வெள்கி, கொள்ப, வேள்வி.

ஒரு சொல்லின் இடையில் பெரும்பாலும் இரண்டு ஒற்றுக்கள் சேர்ந்துவாரா. ஆனால் ய், ர், ழ் என்னும் மூன்று மெய்யெழுத்துக்கள் மட்டும் க், ச், த், ப், ங், ஞ், ந், ம் என்னும் மெய்யெழுத்துக்களில் ஒன்றைப் பெற்று ஈரொற்றுக (இரண்டு மெய்யெழுத்தாக) வரும்.

(உ-ம்) காய்க்கும், பாய்ச்சு, தேய்த்தான், வாய்ப்பு, (தேய்ஞ்சது), காய்ந்தனப், மொய்ம்பு, ஈர்க்கு, உணர்ச்சி, ஆர்த்தல், ஆர்ப்பு, நேர்ந்து, வாழ்க்கை, சூழ்ச்சி, வாழ்த்து, காழ்ப்பு, வாழ்ந்து.

குறிப்பு: ய், ர், ழ் இவற்றுடன் ங், ஞ் என்பவை பெரும்பாலும் புணர் மொழிகளிலேதான் சேர்ந்து வரும்.

(உ-ம்) பாழ்ங்கிணறு, கூர்ஞ்சிறை.

சொற்பிழை நீக்கும் பயிற்சி

சில வழூஉச் சொற்களும் அவற்றின் திருத்தமும்

வழூஉ		திருத்தம்
அடமானம்	-	அடைமானம்
அதுகள்	-	அவை
அரைஞாக் கயறு	-	அரைஞாண்
அருவாமணை	-	அரிவாள்மணை
ஆம்படையான்	-	அகமுடையான்
ஆத்துக்காரி	-	அகத்துக்காரி
உணத்து	-	உலர்த்து
ஊந்து	-	ஊர்ந்து
ஒத்தணம்	-	ஒற்றடம்
களவாணி	-	களவாளி
கண்ணுக்குட்டி	-	கன்றுக்குட்டி

வழூஉ		திருத்தம்
கண்ணாலம்	-	கலியாணம்
கருவப்பிலை	-	கறி வேப்பிலை
கார்த்தருள்	-	காத்தருள் (கா-பகுதி)
கைமாத்து	-	கைமாற்று
கோடாலி	-	கோடரி
சித்தப்பன்	-	சிற்றப்பன்
செம்பக்காலம்	-	சேமக்கலம்
தலைவாணி தலகாணி	-	தலையணை
தாப்பாள் தாழ்ப்பாழ்	-	தாழ்ப்பாள்
நீர்ப்பாசானம்	-	நீர்ப்பாசனம்
புழக்கடை	-	புழைக்கடை
மக்கள்கள்	-	மக்கள்
மாயவரம்	-	மாயூரம்
மூந்தாணி	-	முன்தானை (தானை - ஆடை)
வெட்டிப்பேச்சு	-	வெற்றுப் பேச்சு
வென்னீர்	-	வெந்நீர்

	தவறு	திருத்தம்
300	முன்னூறு	முந்நூறு
400	நாநூறு	நானூறு
90	———	தொண்ணூறு
900	———	தொள்ளாயிரம்

ஒலி மயக்கத்தால் ஏற்படும் பிழைகளும் திருத்தமும்

பிழை		திருத்தம்
ஊரணி	-	ஊருணி
எண்ணை	-	எண்ணெய்
எழிய	-	எளிய
* ஏழ்மை	-	ஏழைமை
உத்திரவு	-	உத்தரவு
தந்தரம்	-	தந்திரம்
தொந்திரவு	-	தொந்தரவு
கம்மாய்	-	கம்வாய் (கம்-நீர்)
கத்திரிக்காய்	-	கத்தரிக்காய்
கண்பூளை	-	கண்பீளை
சிரோன்மணி	-	சிரோமணி
தாவாரம்	-	தாழ்வாரம்
* நஞ்சை	-	நன்செய்
* புஞ்சை	-	புன்செய்
பத்திரிக்கை	-	பத்திரிகை
ராமயாணம்	-	ராமாயணம்
லாவகம்	-	லாகவம்
வயறு	-	வயிறு
வெண்ணை	-	வெண்ணெய்

ஒலி மயக்கமுடைய சொற்களில் அறிஞர்களால், அங்கீகரிக்கப்பட்டவைகளிற் சில·

கட்டிடம்	-	கட்டடம்
இயந்திரம்	-	எந்திரம்
தருவாய்		தறுவாய் (சமயம்)

* இக்குறியிட்டவை மரூஉ மொழிகளாகவும் கொள்ளப்படும்.

சுதந்திரம் - சுதந்தரம்

மந்திரம் - மந்தரம் (தேவர் கோயில்)

செபம் என்ற பொருளில் **மந்திரம்** என்றும், **மேருமலை** என்ற பொருளில் **மந்தரம்** என்றும் எழுதுதல் வேண்டும்.

மோனை ஒலிபெற்றுப் பேச்சு வழக்கில் மயங்கி வரும் சில சொற்களும் திருத்தமும்

	பேச்சு வழக்கு	திருத்தம்	
1	எழவு எலை வெளைகிறது	இழவு இலை விளைகிறது	மொழி முதல் இகரம், பேச்சு வழக்கில் அதன் மோனையாகிய எகரத்தோடு மயங்கி வருதல் காண்க.
2	ஒரல் கொரங்கு ஒலகம்	உரல் குரங்கு உலகம்	மொழி முதல் உகரம், பேச்சு வழக்கில் அதன் மோனையாகிய ஒகரத்தோடு மயங்கி வருதல் காண்க.
3	மானம் முழுங்கு முழி	வானம் விழுங்கு விழி	மொழி முதல் வகரம், பேச்சு வழக்கில் மோனையாகிய மகரத்தோடு மயங்கி வருதல் காண்க.
4	விசை	மீசை	மொழி முதல் மகரம், பேச்சு வழக்கில் மோனையாகிய வகரத்தோடு மயங்கி வருதல் காண்க.
5	துரண்டி	சுரண்டி (ஓர் கருவி)	மொழி முதல் சகரம் பேச்சு வழக்கில் மோனையாகி தகரத்தோடு மயங்கி வருதல் காண்க.

இவைபோல்வனவற்றை நன்கு உணர்ந்து திருத்தமாக எழுதுதல் வேண்டும்.

புலவரும் வழங்கும் மரூஉ மொழிகளும், அவற்றின் திருந்திய வடிவமும்.

மரூஉ		திருந்திய வடிவம்
அஞ்சு	-	ஐந்து
அருமந்த	-	அருமருந்தன்ன
(அருமாந்த	-	அருமை வாய்ந்த)
ஆந்தையார்	-	ஆதன் தந்தையார்
ஆர்	-	யார்
யார்	-	யாவர்
பல்லாங்குழி	-	பதினன்கு குழி
நாலு	-	நான்கு
ஆறை	-	ஆற்றூர்
உறந்தை	-	உறையூர்
காரந்தை	-	கருந்தட்டாங்குடி
காஞ்சி	-	காஞ்சிபுரம்
குடந்தை	-	கும்பகோணம்
கைலை	-	கைலாயம்
கோவை	-	கோயம்புத்தூர்
சுசீந்தை	-	சுசீந்தரம்
செந்தில்	-	திருச்செந்தூர்
சென்னை	-	சென்னபட்டணம்
தஞ்சை	-	தஞ்சாவூர்
திருச்சி	-	திருச்சிராப்பள்ளி
நாகை	-	நாகபட்டினம்
நெல்லை	-	திருநெல்வேலி
புதுவை	-	புதுச்சேரி
பாண்டி நாடு	-	பாண்டியன் நாடு
மயிலை	-	மயிலாப்பூர்

குறிப்பு:- இத்தகைய மரூஉ மொழிகளைக் கட்டுரையில் எழுதலாம்.

மறுமலர்ச்சிக் கவிஞர்கள் உணர்ச்சி வசப்பட்டு பாமரரின் உள்ளத்திற் பதியுமாறு அவர்கள் கூறும் சில மரூஉ மொழிகளைத் தம் செய்யுளில் வழங்குவர். அவற்றுட் சிலவற்றையும் அவற்றின் திருந்திய வடிவத்தையுங் கீழே காண்க.

மரூஉ		திருத்தம்
ஆச்சு, ஆச்சுது	-	ஆயிற்று
போச்சு, போச்சுது	-	போயிற்று
பாயுது	-	பாய்கிறது
மேயுது	-	மேய்கிறது
வருகுது	-	வருகிறது
போகுது	-	போகிறது
குடிக்குது	-	குடிக்கிறது
துடிக்குது	-	துடிக்கிறது

குறிப்பு:- இத்தகைய மரூஉ மொழிகளைக் கட்டுரையில் எழுதுதல் விரும்பத்தக்கதன்று.

தமிழில் வழங்கும் புணர்மொழிகளல்லாத வட சொற்களில் நகர எழுத்து வரும் இடங்களில் தமிழுக்கே சிறப்பாக உரிய னகரத்தை அமைத்து எழுதுவதே முறை. அவற்றுட் சில கீழே தரப்பட்டுள்ளன.

வட சொல்		தமிழில் எழுதும் முறை
அந்நம்	-	அன்னம்
அநிலம்	-	அனிலம்
ஆசநம்	-	ஆசனம்
கவநம்	-	கவனம்
ஜநம்	-	சனம்
ஜநநம்	-	சனனம்
ஸந்நிதி	-	சன்னிதி
ஸந்தாநம்	-	சந்தானம்

வட சொல்		தமிழில் எழுதும் முறை
ஸ்நாநம்	-	ஸ்நானம்
ஜாநகி	-	சானகி
ஜீவனம்	-	சீவனம்
தநு	-	தனு
நியமநம்	-	நியமனம்
பவநம்	-	பவனம்
பவனி	-	பவனி
புநிதம்	-	புனிதம்
புவநம்	-	புவனம்
மநஸ்	-	மனம்
மநு	-	மனு

* **ந** என்பது வடமொழியில் இன்மைப் பொருளை — எதிர் மறைப்பொருளை உணர்த்தும் சொல்லாகும். **ந** என்னும் இச் சொல் மெய்ம்முதன்மொழியோடு சேரும்போது நகரவொற்று (ந் + அ) நீங்கும்; அகரம் புணரும்.

(உ-ம்) ந + பாக்கியவதி = அபாக்கியவதி (ந் கெட்டது) ந + காலம் = அகாலம்; ந + கண்டம் = அகண்டம்; ந + சுத்தம் = அசுத்தம்; ந + தர்மம் = அதர்மம்.

* **ந** என்னும் இச்சொல் உயிர்முதன்மொழியோடு சேருமாயின் ந் + அ என்பது 'அந்' என மாறிநின்று புணரும்.

(உ-ம்) ந + அங்கன் = அநங்கன் (அனங்கன்) (ந்அ, அந் என மாறியது) ந + அர்த்தம் = அநர்த்தம் (அனர்த்தம்)

அவற்றுள் 'ந' வின் திரிபாகிய **அந்** என்னும் எதிர்மறைப் பொருளுணர்த்தும் சொல்லையும், **அநு** என்னும் துணைச்சொல்லையும் கொண்டு தொடங்கும் வடசொற்கள்

---

* "நேர்ந்த மொழிப் பொருளை நீக்க வருநகரம்
சார்ந்த துடலாயின் தன்னுடல்போம்—சார்ந்ததுதான்
ஆவியேல் தன்னுவி முன்னாகும்" (நேமிநாதம்)

வழக்கில் மிகுதியாக உள்ளன. அந், அநு என்னும் வட சொற்களில் தமிழுக்கே சிறப்பாக உரிய னகரத்தை இட்டு எழுதுதல் பிற்கால வழக்கம். இக்காலத்தில் பெரும்பாலும் சிறப்பு னகரமே இடுகின்றனர்.

சில உதாரணங்கள்:

அந் + உயிர் முதன்மொழி

அநகன்	—	அனகன்
அநங்கன்	—	அனங்கன்
அநபாயன்	—	அனபாயன்
அநந்தம்	—	அனந்தம்
அநாயாசம்	—	அனாயாசம்
அநாவசியம்	—	அனாவசியம்
அநேகம்	—	அனேகம்
அநுசிதம்	—	அனுசிதம்
அநுபமன்	—	அனுபமன்

குறிப்பு :- சிலர் இக்காலத்தில் சிநேகம் என்ற வடசொல்லையும் சினேகம் என எழுதுகின்றனர்.

அநு +

அநுகூலம்	—	அனுகூலம்
அநுக்கிரகம்	—	அனுக்கிரகம்
அநுதாபம்	—	அனுதாபம்
அநுதினம்	—	அனுதினம்
அநுபந்தம்	—	அனுபந்தம்
அநுபல்லவி	—	அனுபல்லவி
அநுபானம்	—	அனுபானம்
அநுமானம்	—	அனுமானம்
அநுமேயம்	—	அனுமேயம்

அநுமதி	—	அனுமதி
அநுராகம்	—	அனுராகம்
அநுவாதம்	—	அனுவாதம்
அநுவதித்தல்	—	அனுவதித்தல்

நகர வரிசையிலுள்ள உயிர்மெய்யெழுத்துக்களை முதலிற் கொண்டுள்ள வடசொற்கள் பல தமிழில் வழங்குகின்றன. அவை எதிர்மறைப்பொருள் உணர்த்தும்போது முதலில் அகரம் பெற்றுவரும். இத்தகைய சொற்களில் நகரத்துக்குப் பதில் னகரம் இடுதல் கூடாது.

(உ-ம்) அ + நாமதேயம் = அநாமதேயம்
அ + நித்தியம் = அநித்தியம்
அ + நியாயம் = அநியாயம்
அ + நீதி = அநீதி

பகுதியுணரும் பயிற்சி

செந்தமிழ்ச் சொற்களைக் கண்டுணர்தற்குப் பகுதிகளை அறிந்துகொள்ளும் திறன் பெறுதல் இன்றியமையாததாகும். நன்னூலில் பகுதிகளைக் குறிப்பிடும் சூத்திரம், பிறசொற்களின் பகுதிகளையும் உய்த்துணர வழிகாட்டுவதாகும். மொழியிறுதியில் வரும் எழுத்துக்களுக்கு ஒவ்வொரு உதாரணமாகவும், பகுதியாகவும் அமைந்துள்ள இச் சூத்திரத்தை நன்கு பயின்று பிறசொற்களின் பகுதிகளையும் புரிந்துகொள்க.

நட வா மடி சீ விடு கூ வே வை
நொ போ வௌ உரிஞ் உண் பொருந் திரும் தின்
தேய் பார் செல் வவ் வாழ் கேள் அஃகு—என்று
எய்திய இருபான் மூன்றும் ஈற்றவும்
செய்யென் ஏவல் வினைப்பகாப் பதமே.

பகுதிகளைக் கவனியாமையால் சிலர் சொற்களைத் தவறாக எழுதுகின்றனர். அங்ஙனம் தவறாக எழுதும் சொற்களில்

சிலவற்றையும் அவற்றின் சரியான உருவத்தையும் பகுதியையும் கீழே காண்க.

தவறு	சரி	பகுதி
ஆக்ஷி	ஆட்சி	ஆள்
காக்ஷி	காட்சி	காண்
மாக்ஷி	மாட்சி	மாண்
உடமை	உடைமை	உடைமை
உணத்து	உலர்த்து	உலர்
(நீர்) ஊத்து	(நீர்) ஊற்று	ஊறு
ஊந்து	ஊர்ந்து	ஊர்
ஏள்மை	ஏழைமை	ஏழைமை
எழவு	இழவு	இழ
எழியார்	எளியார்	எளிமை
எண்ணை	எண்ணெய்	எள் + நெய்
வெண்ணை	வெண்ணெய்	வெண்மை + நெய்
காராய்	காவாய்	கா
கருப்பு	கறுப்பு	கறு
(நாய்) குலைத்தது	(நாய்) குரைத்தது	குரை
கேழ்வி	கேள்வி	கேள்
சமயல்	சமையல்	சமை
சிகப்பு	சிவப்பு	சிவ
சுவற்றில்	சுவரில்	சுவர் (wall)
சுவர	சுவற	சுவறு (வற்று)
பிடதி	பிடரி	பிடர்
(மலரை) மோர்ந்து	மோந்து	மோ
முகந்து	முகர்ந்து	முகர்
(நீர்) மோந்து	முகந்து	முக
(நீர்) மொந்து	மொண்டு	மொள்
துடர்	தொடர்	தொடு
துடங்கு	தொடங்கு	தொடு

சந்திப் பிழை நீக்கும் பயிற்சி

சந்திப் பிழை நீக்குதற்குச் **சொற்கள் புணரும் முறைமை** அறிதல் வேண்டும். அதனை விளக்கும் பகுதியே **புணரியல்** என இலக்கண நூலிற் கூறப்படும்.

புணர்ச்சி என்பது நிலைமொழி ஈற்றிலுள்ள உயிர் அல்லது மெய்யோடு வருமொழி முதலிலுள்ள எழுத்துப் பொருந்தும் முறையைக் கூறுதல். இது வேற்றுமைப் புணர்ச்சி, அல்வழிப் புணர்ச்சி என இருவகைப்படும்.

[நிலைமொழி - முதலில் நிற்கும் மொழி; வருமொழி - நிலைமொழியோடு வந்து சேரும் மொழி]

வேற்றுமைப் புணர்ச்சி :- சொற்கள் புணரும்போது நடுவே இரண்டாம் வேற்றுமை முதல், ஏழாம் வேற்றுமையீறாக உள்ள ஆறு வேற்றுமை உருபுகளும் மறைந்தாவது வெளிப்பட்டாவது வருவது.

வேற்றுமையுருபு மறைந்து வருவது **வேற்றுமைத் தொகை** எனப்படும்; இது **தொகை நிலைத் தொடர்**. வேற்றுமை யுருபு வெளிப்பட்டு வருவது **வேற்றுமை விரி** எனப்படும்; இது **தொகா நிலைத் தொடர்.**

அல்வழிப் புணர்ச்சி :- வேற்றுமையல்லாத வழியில் சொற்கள் புணர்வது அல்வழிப் புணர்ச்சியாம்.

இது, வினைத் தொகை முதலிய ஐவகைத் **தொகை நிலைத் தொடராகவும்**, எழுவாய், விளி முதலிய எட்டுத் **தொகா நிலைத் தொடராகவும்** வரும்.

தொகை நிலைத் தொடர் :- நிலைமொழியும் வருமொழியும் இடையில் இடைச்சொற்கள் மறைந்து நிற்கப் புணர்ந்து ஒரு மொழிபோல் வருபவை. இது வேற்றுமைத் தொகை (வேற்றுமைப் புணர்ச்சி), வினைத் தொகை, பண்புத் தொகை,

உவமைத் தொகை, உம்மைத் தொகை, அன்மொழித் தொகை (அல்வழிப் புணர்ச்சி) என ஆறு வகைப்படும்.

[அன்மொழித் தொகையில் மறைந்து நிற்பது பெயராக இருக்கும்]

தொகா நிலைத் தொடர்:— நிலைமொழியும் வருமொழியும் புணரும்போது இடையில் எந்தச் சொல்லும் மறைந்து நிற்காமல் வருபவை.

வேற்றுமைப் புணர்ச்சியில்

தொகை நிலைத் தொடர்	தொகா நிலைத் தொடர்
(உ-ம்) பால்குடி	(உ-ம்) பாலைக்குடி
தயிர்க் குடம்	தயிரை உடைய குடம்

[பால்குடி, தயிர்க்குடம் என்பனவற்றில் வேற்றுமையுருபுகள் மறைந்து வருவதையும்; பாலைக்குடி, தயிரையுடைய குடம் என்பனவற்றில் வேற்றுமை உருபுகள் விரிந்து வருவதையும் காண்க.]

அல்வழிப் புணர்ச்சியில் தொகைநிலைத் தொடர்

(உ-ம்) 1. வினைத் தொகை — சுடு சோறு (சுட்ட சோறு, சுடுகின்ற சோறு, சுடும் சோறு என) முக்கால இடைநிலைகள் மறைந்து வருவது.

2. பண்புத் தொகை :— செந்தாமரை (செம்மை ஆன தாமரை)

(பண்பை விளக்கும் சொல்லாகிய 'ஆன' 'ஆகிய' என்ற பண்புருபு மறைந்து வருவது)

3. உவமைத் தொகை :— மதிமுகம் (மதி போன்ற முகம்)

('போல்' என்னும் உவமவுருபு மறைந்து வருவது)

4. உம்மைத் தொகை:- ஆடிப்பாடி (ஆடியும் பாடியும்) ('உம்' என்னும் இடைச்சொல் மறைந்து வருவது)

5. அன்மொழித் தொகை:- தேமொழி வந்தாள்.
(தேன் போன்ற மொழி 'உடையவள்' வந்தாள்)
(தொகை மொழி மேலும் ஒரு சொல் மறைந்து வருவது)
(தேமொழி – உவமைத் தொகை)

குறிப்பு:— நிலைமொழி பண்புப் பெயராகவும், வருமொழி பண்பை அடையும் பொருட் பெயராகவும் இருப்பது **பண்புத் தொகை**. இவ்வாறன்றி ஒரு பொருளைக் குறிக்கும் இரு பெயர் புணரும்போது இடையே 'ஆன, ஆகிய' என்ற உருபு மறைந்து வருதலும் உண்டு. இது **இருபெயரொட்டுப் பண்புத்தொகை** எனப்படும்.

(உ-ம்) நாவலன் நக்கீரன் (நாவலனாகிய நக்கீரன்)
அண்ணல் காந்தி (அண்ணலாகிய காந்தி)

அல்வழிப் புணர்ச்சியில் தொகா நிலைத் தொடர்

(உ-ம்) 1. எழுவாய்த் தொடர்—முருகன் வந்தான்.
('முருகன்' என்னும் எழுவாய் வருமொழியோடு தொடர்ந்தது)

2. விளித் தொடர்—முருகா வா.
('முருகா' என்னும் விளி வருமொழியோடு தொடர்ந்தது)

3. பெயரெச்சத் தொடர்—வந்த முருகன்.
('வந்த' என்னும் பெயரெச்சம் வருமொழியோடு தொடர்ந்தது)

4. வினையெச்சத் தொடர்—வந்து போனான்.
('வந்து' என்னும் வினையெச்சம் வருமொழியோடு தொடர்ந்தது)

5. வினைமுற்றுத் தொடர்—வந்தான் முருகன்.
('வந்தான்' என்னும் முற்று வருமொழியோடு தொடர்ந்தது)

6. இடைச் சொல் தொடர்—மற்றொன்று.
('மற்று' என்னும் இடைச்சொல் வருமொழியோடு தொடர்ந்தது)

7. உரிச்சொல் தொடர்—சாலவும் நன்று.
('சால' என்னும் உரிச்சொல் வருமொழியோடு தொடர்ந்தது)

8. அடுக்குத் தொடர்—பாம்பு! பாம்பு!
('பாம்பு' என்னும் பெயர்ச்சொல் அதே சொல்லைத் தொடர்ந்தது)

சந்தி சேர்த்து எழுதச் சுருக்கமான சில வழிகள்

சொற்கள் ஒன்றோடொன்று புணரும்பொழுது எழுத்துத் தோன்றுதலும், கெடுதலும், விகாரம் அடைதலும் உண்டு. அவற்றுள் முக்கியமான சில விதிகள் மட்டும் இங்குத் தரப்பட்டுள்ளன.

பொதுவிதி:— எழுத்துக்களைச் சரியாக உச்சரித்துப் பேசுபவர்க்கும், படிப்பவர்க்கும், தெளிவான கேள்வியுடையவர்க்கும் சந்திப் பிழைகள் ஏற்படா.

வல்லெழுத்து மிகா இடங்கள் *

உயிரீற்றுக்கும் மெய்யீற்றுக்கும் பொதுவான விதிகள்

		உதாரணம்:	
வல்லினம் மிகா.		உயிரீறு	மெய்யீறு
1. எழுவாய்த் தொடரில் (முதல் வேற்றுமை)	,,	பறவை பறந்தது;	மனிதர் போனார்.
2. இரண்டாம் வேற்றுமைத் தொகையில் பெரும்பாலும்	,,	புளி தின்றான்;	நீர் குடித்தான்.
3 நான்காம் வேற்றுமைத் தொகையில் உயர்திணைப் பெயர்முன்	,,	வள்ளி கணவன்;	சிறுவர் தந்தை.
4. ஆறும் வேற்றுமைத் தொகையில்	,,	நங்கை கண்;	அவர் தலை.
5. விளித் தொடரில்	,,	அண்ணா கொடு;	பிள்ளாய் கேள்.
6. வினைத் தொகையில்	,,	சுடு சோறு;	செய் தவம்.
7. உம்மைத் தொகையில்	,,	யானை குதிரை;	தாய் தந்தை.
8. முன்னிலை வினைமுற்றின் முன்	,,	பாடினை தம்பி;	பாடினாய் தம்பி.
9. படர்க்கை ,,	,,	வந்தன பசுக்கள்;	வந்தனர் சிறுவர்.
10. ஏவல் வினைமுற்றின் முன்	,,	வா கண்ணா;	பார் கண்ணா.

---

* வல்லினம் மிகா இடங்களே குறிக்கப்பட்டுள்ளமையால் ஏனைய இடங்களில் மிகும் எனக் கொள்க.

	வல்லினம் மிகா.	உயிரீறு	மெய்யீறு
11	வியங்கோள் வினைமுற்றின்முன்	,, வாழ்க பெரியோர்;	வாழியர் பெரியீர்
12.	குறிப்பு ,,	,, பெரியது யானை;	பெரியர் கடவுள்.

13. அத்தனை, இத்தனை, எத்தனை; அவ்வளவு, இவ்வளவு, எவ்வளவு; வினைச் சொல்லோடு சேர்ந்து வரும் 'படி'-முன் வல்லினம் மிகா } அத்தனை குதிரை. எவ்வளவு தொகை. போகும்படி செய்தான்.

14. சில மொழி, வட மொழி இரண்டும் வட சொல்லாயிருந்தாலும் வலி மிகா } கமல பாதம்; சுரர் காரியம்.

உயிரெழுத்துக்களின் முன் வல்லினம் மிகா இடங்கள்

அ

அகரவீற்றுப் பெயரெச்சம், 'பல' 'சில' என்னும் அஃறிணைப் பன்மைப் பெயர்ச்சொல், ஆறும் வேற்றுமை உருபு ஆகியவற்றின் முன் வல்லினம் மிகா.

உதாரணம் :

1 **நின்ற** + சிறுவன் = நின்ற சிறுவன்; **படிக்கிற** + தம்பி = படிக்கிற தம்பி } அகரவீற்றுப் பெயரெச்சம்,

2 **பல** + பூனைகள்; **சில** + குதிரைகள் } அஃறிணைப் பன்மைப் பெயர்ச்சொல்;

3 முருக**னுடைய** கால் — ஆறும்வேற்றுமை உருபு (முன் வல்லினம் மிகாமற் புணர்ந்தமை காண்க)

[செய்யுளில் மட்டும் வரும் 'செய்யிய' என்னும் வாய்பாட்டு வினையெச்சத்தின் முன்னும் வல்லினம் மிகாது].

ஆ

ஆகாரவீற்று எதிர்மறை வினைமுற்று, 'ஆ' என்னும் இடைச்சொல், 'ஆ' 'மா' என்ற பெயர்ச்சொற்கள் முன் வரும் வல்லினம் மிகா.

(உ-ம்) உண்ணு + குதிரைகள் = உண்ணு குதிரைகள்
(உண்ணு — உண்ணமாட்டா)

அவனு + கொண்டான் = அவனு கொண்டான் (அவன் + ஆ)

ஆ + சிறிது = ஆசிறிது; மா + கொடிது = மாகொடிது.
(ஆ — பசு; மா — விலங்கு)

இ - ஐ

இகர ஐகாரவிறுதியுடைய சொற்களில் எழுவாய்த் தொடர், உம்மைத்தொகை, வினைத்தொகை ஆகியவற்றில் மட்டும் இயல்பாம்.

உதாரணம்:

இ புலி + சிறிது = புலி சிறிது — எழுவாய்த்தொடர்.
செடி + கொடி = செடி கொடி — உம்மைத்தொகை.
இடி + சுவர் = இடி சுவர் — வினைத்தொகை.

ஐ யானை + பெரிது = யானை பெரிது — எழுவாய்த்தொடர்.
யானை + குதிரை = யானை குதிரை — உம்மைத்தொகை.
உரை + கல் = உரைகல் — வினைத்தொகை.

ஈ

'நீ' என்னும் ஈகார இறுதிச் சொல்முன் வரும் வல்லினம் இயல்பாம்.

(உ-ம்) நீ + போ = நீபோ.

உ

உகர இறுதியுடைய (1) அது, இது என்னும் சுட்டுப் பெயர், (2) எது, யாது என்னும் வினாப் பெயர்கள், (3) ஒன்று, இரண்டு முதலிய எண்ணுப் பெயர்கள், (4) ஒரு (ஒன்று) இரு

(இரண்டு), அறு (ஆறு), எழு (ஏழு) முதலிய விகார எண்ணுப் பெயர்கள், (5) 'ஒடு, ஓடு' என்னும் மூன்றாம் வேற்றுமை உருபுகள், (6) ஆறாம் வேற்றுமை உருபு ஆகியவற்றின் முன் வல்லினம் மிகா.

உதாரணம் :

1. சுட்டுப்பெயர்
   - அது + பெரிது = அதுபெரிது
   - இது + சிறிது = இது சிறிது
2. வினப்பெயர்
   - எது + கடல் = எதுகடல்
   - யாது + பெறுவீர் = யாது பெறுவீர்
3. எண்ணுப்பெயர்
   - இரண்டு + பெட்டிகள் = இரண்டு பெட்டிகள்
   - ஐந்து + காற்றாடிகள் = ஐந்து காற்றாடிகள்
4. விகார எண்ணுப் பெயர்
   - ஒரு + துணைவன் = ஒருதுணைவன்
   - இரு + புறம் = இருபுறம்
   - அறு + சாண் = அறுசாண்
   - எழு + கடல் = எழுகடல்
5. மூன்றாம் வேற்றுமை உருபு 'ஒடு, ஓடு'
   - அவனொடு + சென்றான் = அவனொடு சென்றான்
   - அவனோடு + சென்றான் = அவனோடு சென்றான்
6. ஆறாம் வேற்றுமை உருபு 'அது'
   - முருகனது + கை = முருகனது கை
   - எனது + தலை = எனது தலை

ஏ - ஓ

ஏகார, ஓகார இடைச்சொல் முன் வல்லினம் மிகா.

உதாரணம் :

அவனே + கண்டான் = அவனே கண்டான். (அவன் + ஏ)

வந்தானோ + சொல் = வந்தானோ சொல். (வந்தான் + ஓ)

ஐ விகுதிபெற்ற அஃறிணைப் பன்மைப் பெயர்முன் வரும் வல்லெழுத்து இயல்பாம்.

(உ-ம்) **அவை** சென்றன; **இவை** பாடின.

(**மே, மை**) **து** என்னும் விகுதிகளையுடைய எதிர்மறை வினையெச்சங்களின் முன் வரும் வல்லினம் மிகா.

(உ-ம்) காணாது சென்றான்.

காணாமே சென்றான்; காணாமை சென்றான்—இவை தற்கால உரை நடையில் வாரா.

குற்றியலுகரத்தின்முன் வல்லினம்

ஆறுவகை குற்றியலுகரங்களுள் நெடிற்றொடர், உயிர்த் தொடர், ஆய்தத்தொடர், இடைத்தொடர் இவற்றுக்குமுன் அல்வழிப் புணர்ச்சியிலும், வேற்றுமைப் புணர்ச்சியிலும் வல்லெழுத்து மிகா.

உதாரணம்

அல்வழிப் புணர்ச்சி

ஆறு தலை	—	நெடிற்றொடர்
வரகு சிறிது	—	உயிர்த்தொடர்
எஃகு பெரிது	—	ஆய்தத்தொடர்
நெய்து தருவான்	—	இடைத்தொடர்

வேற்றுமைப் புணர்ச்சி

காசு தந்தான்	—	நெடிற்றொடர்
வரகு கதிர்	—	உயிர்த்தொடர்
எஃகு பெருமை	—	ஆய்தத்தொடர்
மார்பு கடுமை	—	இடைத்தொடர்

குறிப்பு:— நெடிற்றொடரும் உயிர்த்தொடரும் ஒற்று இடையில் மிகுவதாயின் அவை வல்லின முதன்மொழியோடு புணரும்போது வல்லெழுத்து மிகும்.

(உ-ம்) ஆடு + கால் = ஆட்டுக்கால்
வயிறு + கடுப்பு = வயிற்றுக்கடுப்பு

மென்றொடர்க்குற்றியலுகரத்தின் முன் வல்லினம் அல்வழிப் புணர்ச்சியில் மட்டும் மிகாமல் இயல்பாக வரும்.

(உ-ம்) பந்து + பெரிது = பந்து பெரிது
வந்து + போனான் = வந்து போனான்

1. புறனடை: சொல்லால் அல்வழியும் பொருளால் வேற்றுமையுமாகிய அங்கு, இங்கு, எங்கு முதலிய இடப்பொருளுணர்த்தும் மென்றொடர்க் குற்றியலுகரங்கள் முன் வல்லினம் மிகும்.

(உ-ம்) அங்குப் போனான், இங்குக் கண்டேன், எங்குப் பெற்றான்.

2. சொல்லால் அல்வழியும் பொருளால் வேற்றுமையுமாகிய அன்று, இன்று, என்று, பண்டு முதலிய காலப்பொருளுணர்த்தும் மென்றொடர்க் குற்றியலுகரங்கள்முன் வல்லினம் மிகா.

(உ-ம்) அன்று கண்டான்; இன்று சொன்னான்; என்று தந்தான்; பண்டு போயினான்.

3. மென்றொடர்க் குற்றியலுகரத்தின்முன் வல்லினம் வேற்றுமைப் புணர்ச்சியில் மிகுமாயினும், இரண்டாம் வேற்றுமைத் தொகையில் மிகா.

(உ-ம்) வண்டு கண்டேன்; அம்பு தொடுத்தான்.

குறிப்பு:— வன்றொடர்க் குற்றியலுகரத்தின்முன் வல்லினம் வினைத்தொகையில் மட்டும் மிகா, ஏனையவிடங்களில் மிகும்.

(உ-ம்) கூப்பு கரம்; (கூப்பிய, கூப்புகிற, கூப்பும்)
நாட்டு புகழ் ;(நாட்டிய, நாட்டுகிற, நாட்டும்)

உயிர்முன் உயிர் புணர்தல்

இ, ஈ, ஐ என்னும் எழுத்துக்களை இறுதியில் உடைய சொற்களுக்குமுன் உயிர் வந்தால் யகர உடம்படுமெய் தோன்றும்.

(உ-ம்)
மணி + ஒளி = மணியொளி
தீ + இன் (இடைச்சொல்) = தீயின்
மலை + அழகு = மலையழகு
} யகரவுடம்படு மெய் தோன்றிற்று.

சொல்லின் இறுதியில் வரும் இ, ஈ, ஐ நீங்கலாகவுள்ள ஏனைய உயிரெழுத்துக்களுக்குமுன் உயிர் வந்தால் வகர உடம்படுமெய் தோன்றும்.

(உ-ம்)
பல + இடம் = பலவிடம்
பூ + உடன் = பூவுடன்
திரு + உள்ளம் = திருவுள்ளம்
} வகரஉடம்படு மெய் தோன்றிற்று.

சொல்லின் இறுதியில் வரும் **இடைச்சொல் 'ஏ' முன்** உயிர்வரின் பெரும்பாலும் **யகரமும், பெயர்ச்சொல்லாகிய 'ஏ' முன்** உயிர் வரின் **வகரமும்** உடம்படுமெய்யாகத் தோன்றும்.

(உ-ம்)
அவனே + அழகன் = அவனேயழகன்
நானே + என்றான் = நானேயென்றான்
} இடைச்சொல் 'ஏ' முன் யகரஉடம்படுமெய் தோன்றிற்று

ஏ + எல்லாம் = ஏவெல்லாம்
தே + ஆரம் = தேவாரம்
} பெயர்ச்சொல் ஏ முன் வகர உடம்படுமெய் தோன்றிற்று.
(ஏ = அம்பு ; தே = தெய்வம்)

"இ ஈ ஐ வழி யவ்வும், ஏனை
உயிர்வழி வவ்வும், ஏமுனிவ் விருமையும்
உயிர்வரின் உடம்படு மெய்யென் றாகும்"

குற்றியலுகரத்தின் முன் உயிர்

குற்றியலுகரத்தின்முன் உயிரெழுத்து வந்தால் உகரம் தனக்கு இடமாகிய மெய்யைவிட்டு நீங்கும். பின்னர், மெய்யெழுத்தின்மேல், வந்த உயிரெழுத்துச் சேரும்.

சில முற்றியலுகரங்களும் இவ்விதியை ஏற்கும்.

(உ-ம்) வரகு + எங்கே = வரகெங்கே – குற்றியலுகரம்
கதவு + எங்கே = கதவெங்கே – முற்றியலுகரம்

மெய்யீற்றுப் புணரியல்

'மெய்யீற்றின்முன் உயிர்'

1. நிலைமொழியின் இறுதியில் நின்ற மெய்யெழுத்தின் மேல் வருமொழி முதலிலுள்ள உயிரெழுத்து வந்து கூடிநிற்கும்.

(உ-ம்) வேல் + எறிந்தான் = வேலெறிந்தான்
நாள் + ஒன்று = நாளொன்று

"உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே" (நன்னூல்)

2. தனித்த குற்றெழுத்தையடுத்து நின்ற மெய், வருமொழி முதலில் உயிர் வந்தால் இரட்டித்து நிற்கும்.

(உ-ம்) பொன் + அணி = பொன்னணி
பெண் + ஆல் = பெண்ணால்

[அன்பன் + ஐ = அன்பனை, அவன் + அது = அவனது, எனத் தனிக் குறிலைச் சாராது பல எழுத்துக்களுக்குப் பின் வந்த ஒற்றும், ஆண் + ஆல் = ஆணால் எனத் தனி நெடிலையடுத்து வந்த ஒற்றும் உயிர் வந்த விடத்து இரட்டிக்கவில்லை என்பதைக் கவனிக்கவும்]

மெய்யீற்றின் முன் மெய்

1. ணகர, னகரத்தின்முன் வல்லினம்.

நிலைமொழி இறுதியில் நின்ற **ணகர, னகர மெய் (ண், ன்)** வருமொழி முதலில் வல்லினம் வந்தால் **வேற்றுமைப் புணர்ச்சியில் முறையே டகர, றகர மெய் (ட், ற்) ஆகத் திரியும்.**

(உ-ம்) மண் + பானை = மட்பானை
பொன் + குடம் = பொற்குடம்

2. மகர வீறு

மகரத்தை(ம்) இறுதியிலுடைய சொற்கள், வல்லினத்தோடு புணரும்போது, மகர மெய் கெட்டு வல்லெழுத்து மிகும்; மெல்லினத்தோடும் இடையினத்தோடும் புணரும்போது மகர மெய் கெட்டு இயல்பாகப் புணரும்; உயிரெழுத்தோடு புணர்ந்தால் மகர மெய் கெட்டு உடம்படுமெய் தோன்றும்; சிலவிடங்களில் மகர மெய், வரும் வல்லெழுத்தின் இனமாகத் திரியும்.

(உ-ம்) மரம் + கிளை = மரக்கிளை
வட்டம் + பலகை = வட்டப் பலகை
} மகர மெய் கெட்டு, வல்லெழுத்து மிகுந்தது.

மரம் + நார் = மரநார்
மரம் + வேர் = மரவேர்
} மெல்லின, இடையினத்தின்முன் மகர மெய் கெட்டு, இயல்பாகப் புணர்ந்தது

மரம் + அடி = மரவடி
குணம் + ஆன் = குணவான்
} மகர மெய் கெட்டு, உடம்படு மெய் தோன்றியது.

அறம் + செய்ய = அறஞ்செய்ய
வரம் + கொடு = வரங்கொடு
} மகரமெய், வரும் வல்லினத்துக்கு இனமாகத் திரிந்தது.

"மவ்வீறு ஒற்றழிந்து உயிரீறு ஒப்பவும்
வன்மைக்கு இனமாத் திரிபவும் ஆகும்" (—நன்னூல்)

3. ய, ர, ழ, ஈற்றின் முன் வல்லினம்.

சொல்லின் இறுதியில் வரும் யகர, ரகர, ழகர மெய்களின் முன் (ய், ர், ழ்) வல்லினம் வந்தால் வேற்றுமைப் புணர்ச்சியில் மிகும். அல்வழிப்புணர்ச்சியில் சிலவிடங்களில் மிகுந்தும், சிலவிடங்களில் இயல்பாகவும் வரும்.

உதாரணம்.

வேற்றுமைப் புணர்ச்சி

நாய் + கால் = நாய்க்கால்
தேர் + தட்டு = தேர்த்தட்டு
தமிழ் + செய்யுள் = தமிழ்ச்செய்யுள்
வேற்றுமையில் வலிமிக்கது.

அல்வழிப் புணர்ச்சி

* மிகுதல்	இயல்பாதல்
மெய் + கீர்த்தி = மெய்க்கீர்த்தி	வேய் + கடிது = வேய் கடிது
கார் + பருவம் = கார்ப்பருவம்	வேர் + சிறிது = வேர் சிறிது
யாழ் + கருவி = யாழ்க்கருவி	சீழ் + தீது = சீழ் தீது

4. லகர ளகர ஈற்றின் முன் வல்லினம்

மொழியிறுதியிலுள்ள லகர ளகர மெய்கள், வல்லினம் வந்தால் வேற்றுமைப் புணர்ச்சியில் முறையே றகர டகர மாகத் திரியும்; அல்வழிப் புணர்ச்சியில் இயல்பாகவும், திரிந்தும் வரும்.

(உ-ம்) பல் + பொடி = பற்பொடி } வேற்றுமைப்
முள் + செடி = முட்செடி } புணர்ச்சி

(பல்லுக்குப் பொடி; முள்ளையுடைய செடி)

அல்வழிப் புணர்ச்சி

இயல்பு	* திரிதல்
கால் + சிறிது = கால்சிறிது	வேல் + படை = வேற்படை
வாள் + பெரிது = வாள்பெரிது	வாள் + படை = வாட்படை

*குறிப்பு: ய், ர், ழ், என்னும் ஒற்றும், ல், ள் என்னும் ஒற்றும் அல்வழியில் முறையே மிகுதலும் திரிதலும் பெரும்பாலும் இருபெயரொட்டுப் பண்புத்தொகையாதல் காண்க.

வருமொழித் திரிபு

அவன் + தாள் = அவன்றாள்; கல் + தூண் = கற்றூண்
எண் + திசையும் = எண்டிசையும் ('எண்' எட்டு என்பதன் விகாரம்) எள் + துணை = எட்டுணை

இவ்வுதாரணங்களில் னகர லகர மெய் முன்வந்த தகரம், றகரமாகவும், ணகர ளகர மெய் முன்வந்த தகரம், டகரமாகவும் திரிதல் காண்க.

தன் + நிலை = தன்னிலை; நல் + நாள் = நன்னாள்
கண் + நீர் = கண்ணீர்; எள் + நெய் = எண்ணெய்

இவ்வுதாரணங்களில் னகர லகர மெய் முன்வந்த நகரம், னகரமாகவும், ணகர ளகர மெய் முன்வந்த நகரம், ணகரமாகவும் திரிதல் காண்க.

குறிப்பு: இவ்வருமொழித் திரிபு இக்காலத்தில் ஒரு சொல் போன்ற புணர்மொழிகளில் மட்டும் வழங்கப்படுகின்றன. மற்ற விடங்களில் பிரித்தே எழுதி விடுதல் நலம்.

"னலமுன் றனவும் ணளமுன் டணவும்
ஆகுந் தநக்கள் ஆயுங் காலே" (நன்னூல்)

தமிழ் இலக்கணம்.

(ஆங்கில ஒப்புமையுடன்.)

எழுத்து

1. தமிழ் மொழியின் எழுத்துக்கள் இருநூற்றுநாற்பத்தேழு. இவை உயிர், மெய், உயிர் மெய், ஆய்தம் என நான்கு வகைப்படும்.

உயிரெழுத்துக்கள் (Vowels): அ, ஆ, இ, ஈ, உ, ஊ, எ, ஏ, ஐ, ஒ, ஓ, ஔ. 12

மெய்யெழுத்துக்கள் (Consonants): க், ங், ச், ஞ், ட், ண், த், ந், ப், ம், ய், ர், ல், வ், ழ், ள், ற், ன். 18

உயிர்மெய்யெழுத்துக்கள்: 18 மெய்யெழுத்தோடும் 12 உயிரெழுத்தும் தனித்தனி சேர்வதால் ஏற்படும் எழுத்துக்கள்.

(க, கா, ... னோ, னௌ) 216

ஆய்த எழுத்து ஃ 1

ஆக 247

உயிரெழுத்தும் மெய்யெழுத்தும், உயிர்மெய்யெழுத்தும் ஆய்தவெழுத்தும் உண்டாவதற்கு முதற்காரணமாக இருக்கின்றன. ஆதலால், உயிரெழுத்தும் மெய்யெழுத்தும் **முதலெழுத்து** என்றும், உயிர்மெய்யெழுத்தும் ஆய்தவெழுத்தும், **சார்பெழுத்து** என்றும் சொல்லப்படுகின்றன.

உயிரெழுத்துக்கள் குறில், நெடில் என இருவகைப் படும்.

குறில் (Short Vowels):— அ, இ, உ, எ, ஒ. 5

நெடில் (Long Vowels):— ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ. 7

மெய்யெழுத்துக்கள் வல்லினம், மெல்லினம், இடையினம் என மூன்று வகைப்படும்.

வல்லினம் (Hard Consonants):— க், ச், ட், த், ப், ற்

மெல்லினம் (Soft or Nasal Consonants) :—

ங், ஞ், ண், ந், ம், ன்.

இடையினம் (Medial Consonants) :—

ய், ர், ல், வ், ழ், ள்.

குறிப்பு:— ஜ, ஷ, ஸ, க்ஷ, ஹ. (ஜம்பம், கஷ்டம், ஸ்தாபனம், க்ஷேமம், ஹாணர்) முதலிய வட எழுத்தொலிகளும் தமிழில் வழங்குகின்றன.

2. சுட்டு வினாவெழுத்துக்கள்

அ, இ, உ இம்மூன்றும் சுட்டுப் பொருளைத் தரும்போது சுட்டெழுத்துக்கள் என்றும், எ, யா, ஆ, ஓ, ஏ, இவை வினாப் பொருளைத் தரும்போது வினாவெழுத்துக்கள் என்றும் சொல்லப்படும்.

சுட்டெழுத்துக்கள்	வினாவெழுத்துக்கள்
(உ-ம்) அவன் - அப்பலகை	(உ-ம்) எவன்? - எம்மரம்
இவன் - இப்பலகை	யார்? - யாங்ஙனம்
உவன் - உப்பலகை	அவனா? (அவன் + ஆ)
(உகரம் சுட்டுப்பொருளைத் தருதல் இக்கால வழக்கில் இல்லை.)	அவனோ? (அவன் + ஓ)
	ஏன், அவன்தானே? (ஏ)

3. அளபெடை

உயிரளபெடை: நெட்டெழுத்துக்கள் ஏழும், இசை (பாட்டு) விளி, பண்டமாற்று, புலம்பல் ஆகிய விடங்களில் தம் அளவினின்று நீண்டு ஒலிக்கும். இது உயிரளபெடை எனப்

படும். நெடிலின் இனமான குறிலே அளபெடையின் குறியாக வரும்.

(உ-ம்) ஓஒதல் வேண்டும் –(இசை);
தாயே எ –(விளி)
பயரோஒ பயறு –(பண்டமாற்று)
நான் பெற்ற மகனே எ –(புலம்பல்)

இவ்வுயிரளபெடை செய்யுளில் மூன்றுவகையாக வரும்.

1. செய்யுளிசையளபெடை: செய்யுளில் ஓசை குறையுமிடத்து நெடில் அளபெடுப்பது.

(உ-ம்) 'ஓஒதல் வேண்டும்' வெண்பாவில் விளமுன் நேர் வருதற் பொருட்டு அளபெடுத்தது.

2. இன்னிசையளபெடை: செய்யுளில் ஓசை குறையாதவிடத்தும், இன்னிசையூட்டும் பொருட்டும் குறில் நெடிலாகி அளபெடுப்பது.

(உ-ம்) "கெடுப்பதூஉம் கெட்டார்க்குச் சார்வாய்மற் றாங்கே எடுப்பதூஉம் எல்லா மழை."

3. சொல்லிசையளபெடை: இது இருவகைப்படும்.
1. பெயர்ச்சொல் வினையெச்சமாதற் பொருட்டு அளபெடுப்பது.

(உ-ம்) நசை (விருப்பம்); நசைஇ (விரும்பி)

2. சொல் உருவம் மாறி அளபெடுப்பது.

(உ-ம்) ஒருவி-ஒரீஇ (ஒருவி என்பது ஒரீ என மாறி ஒரீஇ என அளபெடுத்தது.)

ஒற்றளபெடை: மெய்யெழுத்துக்களில் ங், ஞ், ண், ந், ம், ன், வ், ய், ல், ள் ஆகியவை அளபெடுப்பது உண்டு. அவை ஒற்றளபெடை எனப்படும்.

(ஒற்றளபெடை பெரும்பாலும் இனிய இசையின் பொருட்டே வரும்.)

(உ-ம்) "இலங்ங்கு வெண்பிறைசூ டீச னடியார்க்கு
கலங்ங்கு நெஞ்சமிலை காண்"

4. குற்றியலுகரம்

குற்றியலுகரம்: 'உ' என்னும் எழுத்து தனக்குரிய அளவிற் குறைந்து ஒலித்தால் குற்றியலுகரம் எனப்படும். **தனிக் குறில் அல்லாத மற்ற எழுத்துக்களுக்குப் பின், மொழி இறுதியில் வரும் வல்லின மெய்யின் மேல் ஏறி நிற்கும் உகரம் குற்றியலுகரமாம்.**

(உ-ம்) காசு, எஃகு, வயிறு, பத்து, வண்டு, மார்பு.

(சு, கு, று, து, டு, பு, ஆகியவை வல்லின் மெய் யின் மேல் ஏறி நிற்கும் உகரம் என அறிக)

ஆடு, காசு— குற்றியலுகரம், தனி நெடிலையடுத்து வருவதால் நெடிற்றொடர்க் குற்றியலுகரம்.

அஃது, எஃகு— ,, ஆய்த எழுத்தையடுத்து வருவதால் ஆய்தத் தொடர்க் குற்றியலுகரம்.

தராசு, வயிறு— ,, அயலெழுத்தாக உயிர்மெய் நெடில், உயிர்மெய்க்குறில் ஆகியவற்றைக்கொண்டு மேலும் எழுத்துக்களைப் பெற்று வருவதால் உயிர்த்தொடர்க் குற்றியலுகரம்.

எட்டு, பத்து— ,, வல்லின மெய்யை அடுத்து வருவதால், வன்றொடர்க் குற்றியலுகரம்.

பஞ்சு, வண்டு— ,, மெல்லின மெய்யை அடுத்து வருவதால் மென்றொடர்க் குற்றியலுகரம்.

நல்கு, மார்பு— ,, இடையின மெய்யை அடுத்து வருவதால் இடைத்தொடர்க் குற்றியலுகரம்.

உ, கு, அறு, புகு, கதவு இவை போல்வன முழு ஓசையுடைய உகரங்கள். ஆதலின், இவை முற்றியலுகரம் எனப்படும்.

5. குற்றியலிகரம்: குற்றியலுகரத்தின் முன் யகாரம் வந்தால் உகரம் இகரமாகும். அவ்விகரமும், **'மியா'** என்னும் அசைச் சொல்லிலுள்ள இகரமும் குற்றியலிகரங்களாம்.

(உ-ம்) வரகு + யாது = வரகி யாது; கேள் + மியா [= கேண்மியா

(குற்றியலிகரம் உரைநடையில் விரும்பத்தக்கதன்று.)

6. போலி:- ஒரு சொல்லில் ஓர் எழுத்து உள்ள இடத்தில் மற்றொரெழுத்து நின்றாலும், பொருள் வேறுபடாமல் இருப்பது போலியாம்.

(உ-ம்) மயல் - மையல்
நாண் - ஞாண் } முதற் போலி

அமச்சு - அமைச்சு
நீந்தினான் - நீஞ்சினான் } இடைப் போலி

அறம் - அறன்; பக்கம் - பக்கல்
பந்தல் - பந்தர்; மதில் - மதிள் } கடைப் போலி

சுரும்பு - சுரும்பர்; வண்டு - வண்டர் என குற்றியலுகரத்துக்கு **அர்** போலியாக வருவது செய்யுள் வழக்கு.

சொல்.

சொல்: ஒரு எழுத்தோ, தொடர்ந்த பல எழுத்துக்களோ ஒரு பொருளைத் தருமாயின் சொல் எனப்படும்.

தமிழில் சொற்கள் பெயர்ச்சொல், வினைச்சொல், இடைச்சொல், உரிச்சொல் என நான்கு வகைப்படும்.

1. பெயர்ச்சொல்

பெயர்ச்சொல்:— ஆள், பொருள், இடம், காலம், உறுப்பு, குணம், தொழில் முதலியவற்றைக் குறிக்கும் சொல் பெயர்ச்சொல் எனப்படும்.

ஆளின் பெயரும், உயிர்ப்பொருளும், உயிரல்லாத பொருளும் ஆகிய எல்லாப் பொருளின் பெயரும் **பொருட்பெயர்** என அழைக்கப்படும்.

[ஆங்கிலத்தில் கூறப்படும் Proper Noun, Common Noun, Material Noun, Abstract Noun ஆகியவற்றுக்கும் தமிழின் பெயர்வகைகட்கும் வேறுபாடு உண்டு]

பெயர்ச்சொல் வகைகள்

பொருட்பெயர்:	அருளப்பன்	Proper Noun
	ஆடு, மேசை, நாய்	Common Noun
	மண், கல், பொன், இறைச்சி	Material Noun
இடப்பெயர்:	மதுரை, தூத்துக்குடி	Proper Noun
	தேசம், உலகம்	Common Noun
சினைப்பெயர்.	மூக்கு, கண், மலர், இலை	,,
காலப்பெயர்:	இளவேனில், தை, வாரம்	Abstract Noun
குணப்பெயர்:	உண்மை, கடினம், பசுமை, வட்டம்	,,
தொழிற்பெயர்:	படித்தல், தூக்கம், கேடு	,,

வினையாலணையும் பெயர்

ஒரு பொருளின் தொழிலை உணர்த்தும் முற்றுவினைச் சொல், அந்தப் பொருளுக்குப் பெயராய்வரும்பொழுது வினையாலணையும் பெயர் எனப்படும்.

(உ-ம்) படிக்கின்றவன், படித்தவன், படிப்பவன்.

[இவ்வுதாரணங்களில் படிக்கின்றான், படித்தான், படிப்பான் என்ற முற்றுவினைச் சொற்கள் அவ்வினையை உடைய பொருளுக்குப் பெயராக வருதல் காண்க.]

'கற்றாரைக் கற்றாரே காமுறுவர்' இவ்வாறு வினைமுற்று வேற்றுமையுருபேற்றுப் பெயராக வருதலும் உண்டு.
கற்றாரை—2-ம் வேற்றுமை; கற்றார்(படித்தவர்)—முதல் வேற்றுமை

தொழிற் பெயர்க்கும் வினையாலணையும் பெயர்க்குமுள்ள வேறுபாடு

தொழிற் பெயர்	வினையாலணையும் பெயர்
1 தொழிலுக்குப் பெயராய் வரும். 2. இது பெரும்பாலும் காலம் காட்டாது.	தொழிலையுடைய பொருளுக்குப் பெயராய் வரும். 2. இது பெரும்பாலும் காலம் காட்டும்,

தொழிற் பெயர்-முன் தொடர்ச்சி.	வினையாலணையும் பெயர்-முன் தொடர்ச்சி.
3. தொழிற்பெயர் படர்க்கை யிடத்துக்கு உரியது.	வினையாலணையும் பெயர் மூவிடத்துக்கும் உரியது.
உ-ம்:- நடத்தல், வருகை, மறதி	உ-ம்:- நடந்தவன்-(படர்க்கை) வந்தேனை-(தன்மை) மறந்தாயை-(முன்னிலை)

(வந்தேனை—வந்த என்னை; மறந்தாயை—மறந்த உன்னை)

ஆகுபெயர்

ஒன்றன் பெயர் அதனோடு தொடர்புள்ள மற்றொன்றுக்கு ஆகிவருவது ஆகுபெயராம். இது ஆங்கிலத்தில் Synecdoche, Metonymy என இருவகை அணியாகக் கூறப்படும்.

ஆகுபெயரின் வகைகள்

கீழ்க்காணும் ஏழ ஆகுபெயர்களும் ஆங்கிலத்தில் Synecdoche என்று கூறப்படும் அணிவகையில் அடங்கும்.

1. **பொருளாகுபெயர்:** முதற்பொருளின் பெயர், அதன் சினைப்பொருளுக்கு ஆகிவருவது.

(உ-ம்) **தாமரை** அணிந்தான் (தாமரை என்னும் கொடியின் பெயர், இங்கு அதன் பாகமாகிய தாமரைப் பூவைக் குறிக்கிறது)

2. **சினையாகுபெயர்:** சினைப்பொருளின் பெயர், முதற்பொருளுக்கு ஆகிவருவது.

(உ-ம்) **தலை**க்கு இரண்டு அணா கொடு. (தலை என்னும் சினைப் பெயர், இங்கு ஆளைக்குறிக்கிறது)

3. **குணவாகுபெயர்:** ஒரு குணத்தின் பெயர், அக் குணத்தையுடைய பொருளுக்கு ஆகிவருவது.

(உ-ம்) **வெள்ளை** அடித்தான் (வெள்ளை என்னும் குண (நிற)ப் பெயர், இங்கு சுண்ணாம்பைக் குறிக்கிறது)

4. **தொழிலாகுபெயர்:** ஒரு தொழிலின் பெயர், அத் தொழிலையுடைய பொருளுக்கு ஆகிவருவது.

(உ-ம்) அக்பர் அவையில் அறிவும், ஷாஜஹான் அவையில் கலையும் சிறந்து விளங்கின. (அறிவு, கலை என்னும் தொழிற்பெயர்கள், இங்கு அறிஞரையும் கலைஞரையும் குறிக்கின்றன.)

5. **காலவாகுபெயர்:** காலத்தின்பெயர், அக்காலத்தோடு தொடர்புள்ள ஒரு பொருளுக்கு ஆகிவருவது.

(உ-ம்) **கார்** அறுத்தது. (கார் என்னும் காலத்தின் பெயர், இங்கு அக்காலத்தில் விளையும் பயிரைக் குறிக்கிறது)

6. **கருவியாகு பெயர்.**— ஒரு கருவியின் பெயர், அக் கருவியினால் ஆக்கப்பட்ட பொருளுக்கு ஆகி வருவது.

(உ-ம்) i **திருக்குறள்** படித்தேன்.

(குறள் என்னும் வெண்பாவகையின் பெயர், இங்கு அவ்வகை வெண்பாக்களாலாகிய நூலைக் குறிக்கிறது)

ii பெண்களுக்குத் **தங்கத்தில்** விருப்பம் அதிகம்.

(தங்கம் என்ற முதற்கருவியின் பெயர், இங்கு அதனால் ஆக்கப்பட்ட நகையைக் குறிக்கிறது)

(கருவியாகுபெயர், காரணவாகுபெயர் எனவும் கூறப்படும்.)

7. **உவமையாகு பெயர்:**— உவமானத்தின் பெயர், உவமேயத்துக்கு ஆகிவருவது.

(உ-ம்) i **பாவை** வந்தாள்.

(பாவை என்னும் உவமானத்தின் பெயர், இங்கு அதுபோன்ற பெண்ணைக் குறிக்கிறது)

ii நீதிமன்றத்தில் **கரிகாற் சோழர்களே** அமர்தல் வேண்டும். (கரிகாற் சோழன் என்னும் உவமானத்தின் பெயர், இங்கு அவனைப் போன்ற வியக்கத்தக்க அறிவுடைய நீதிபதிகளாகிய உவமேயத்தைக் குறிக்கிறது.)

கீழ்க்காணும் ஆறு ஆகுபெயர்களும் ஆங்கிலத்தில் Metonymy என்று கூறப்படும் அணிவகையில் அடங்கும்.

1. **இடவாகு பெயர்:**— இடத்தின் பெயர், இடத்திலுள்ள பொருளுக்கு ஆகிவருவது.

(உ-ம்) **ஊர்** சிரித்தது.
(இங்கு ஊர் என்பது, ஊரிலுள்ள மக்களைக்குறிக்கும்)

2. தானியாகு பெயர்: ஸ்தானத்தில் (இடம்) உள்ள பொருளின் பெயர், அப் பொருளின் ஸ்தானத்துக்குப் பெயராய் வருவது.

(உ-ம்) **விளக்கு** ஒடிந்தது.

(விளக்கு என்னும் நெருப்புச் சுவாலை (light) யின் பெயர், அதன் ஸ்தானமான விளக்குத் தண்டுக்கு (lamp) ஆயிற்று.

3. அளவையாகு பெயர்:- (1) எண்ணல், (2) எடுத்தல், (3) முகத்தல், (4) நீட்டல் என்னும் அளவைகளின் பெயர், அவ்வளவைகளைக் கொண்ட பொருளுக்கு ஆகிவருவது.

(உ-ம்) i இப் பழங்களில் உனக்கு **இரண்டு**.

(இரண்டு என்னும் எண்ணின் பெயர், இரண்டு பழங்களைக் குறிப்பதால் எண்ணலளவை ஆகுபெயர்)

ii **இரண்டு வீசை** கொடு.

(வீசை என்னும் எடுத்தலளவைப் (நிறுத்தல் அளவை) பெயர், வீசை அளவுள்ள சீனி முதலியவற்றைக் குறிக்கும்.)

iii உண்பது **நாழி**.

(நாழி என்னும் முகத்தலளவைப் பெயர், நாழி அளவுள்ள தானியத்தைக் குறிக்கிறது)

iv உடுப்பது நான்கு **முழம்**.

(முழம் என்னும் நீட்டலளவைப் பெயர், இங்கு அவ்வளவைக்கொண்ட துணியைக் குறிக்கிறது.)

4. காரியவாகு பெயர்:— காரியத்தின் பெயர், காரணத்திற்கு ஆகிவருவது.

(உ-ம்) i **அலங்காரம்** கற்றான்.

(அலங்காரம் என்னும் இலக்கணமாகிய காரியத்தின் பெயர், அதனை அறிவித்தற்குக் காரணமாகிய அலங்கார (அணி) நூலுக்கு ஆயிற்று.)

ii **அறம்** கற்றும் மறம் புரிகின்றோம்.

(அறம் என்னும் தருமகுணங்களாகிய காரியத்தின் பெயர், அதனை அறிவித்தற்குக் காரணமாகிய அறநூலுக்கு ஆயிற்று)

5. கருத்தா ஆகுபெயர்:— கருத்தாவின் பெயர், அவரால் இயற்றப்பட்ட நூலுக்கு ஆகி வருவது.

(உ-ம்) **கம்பனைக்** கற்றுக் கவிநயம் உணர்.

(கம்பன் என்னும் புலவனின் பெயர், அவனால் இயற்றப்பட்ட ராமாயணத்தைக் குறிக்கிறது.)

6. சின்ன ஆகுபெயர்:— ஒரு சின்னத்தின் பெயர், அச்சின்னத்தையுடைய பொருளுக்கு ஆகிவருவது.

(உ-ம்) வாளினும் வலிமையுடையது பேனா.

(இங்கு வாள், பேனா ஆகிய சின்னங்கள் வாள்வீரரையும் எழுத்தாளரையும் குறிக்கின்றன.)

இயற்பெயர்க்கும் ஆகுபெயர்க்குமுள்ள வேறுபாடு

இயற்பெயர்	ஆகுபெயர்
இடுகுறியினாலாவது காரணத்தினாலாவது ஒன்றற்கு **இயல்பாய் அமைந்த பெயர்.**	ஒருபெயர்ச்சொல்லின் இயல்பான பொருள், அதனை முடிக்க வரும் சொல்லின் பொருளோடு பொருத்தமில்லாமற்போகுமிடத்து அச்சொல்லில் **ஆக்கிக்கொள்ளப் படும் பெயர்.**
(உ-ம்) **தாமரை** (கொடியின் பெயர்)	(உ-ம்) **தாமரைமுகம்** (தாமரை என்பது இங்கு பூவைக்குறிக்கிறது.)
நீலம் (நிறத்தின் பெயர்)	**நீலம் சூடினாள்** (நீலம் என்பது இங்கு நீலோற்பல மலரைக் குறிக்கிறது)

பொதுப் பெயர்கள்

(முக்கியமானவை மட்டும்)

தந்தை, தாய் முதலிய முறைப் பெயர்களும், **யான், யாம், நான், நாம், யாங்கள், நாங்கள்** முதலிய தன்மைப் பெயர்களும், **நீ, நீர், நீங்கள்** முதலிய முன்னிலைப் பெயர்களும், மூவிடத்திலும் வரும் **எல்லாம்** என்னும் பெயரும், **தான், தாம்** என்பனவும், உயர்திணை, அஃறிணை என்ற இரு திணைகளுக்கும் பொதுவாக வருதலின் பொதுப் பெயர்கள் எனப்படும்.

(உ-ம்) உயர்திணை	அஃறிணை
தந்தை இவன்	**தந்தை** இவ்வெருது
தாய் இவள்	**தாய்** இப்பசு
யான் மகன்	**யான்** பறவை
நீ மகள்	**நீ** பறவை
அவர் **எல்லாம்**	அவை **எல்லாம்**
அவர் **தாம்** சொன்னபடி செய்வர்	அது **தன்** குஞ்சுக்கு இரை கொடுத்தது.

(தன் என்பது தான் என்பதன் விகாரம்)

எல்லாம்' என்பது மூவிடத்திலும் வரும் என்பதற்கு உதாரணம் :—

நாம் எல்லாம்; நீங்கள் எல்லாம்; அவர்கள் எல்லாம்.

ஒரு பெயர்ச் சொல்லில் திணை, பால், எண், இடம் என்ற நான்கு பொருளையும் நாம் அறிய வேண்டும். பெயர்ச் சொல் வாக்கியத்தில் வரும் பொழுது அதன் வேற்றுமையையும் அறிதல் வேண்டும்.

திணை (பிரிவு)

திணை:- இது உயர்திணை, அஃறிணை என இரு வகைப் படும்.

உயர்திணை:- உயர்ந்த பிரிவைச் சேர்ந்தது உயர்திணையாம். பகுத்தறிவுள்ள உயிர்கள் யாவும் இப்பிரிவில் அடங்கும்.

(உ-ம்) மக்கள் (தேவர், நரகர்)

அஃறிணை:- உயர்திணைப் பொருள்களில் அடங்காத எல்லாம் அஃறிணையாம்.

(உ-ம்) பசு, மரம், கல்,

பெயர்ச்சொல் வாக்கியத்தில் வரும்பொழுது அதன் வேற்றுமையையும் அறிதல் வேண்டும்.

பால் (பகுப்பு)

உயர்திணைப் பெயர்கள் ஆண்பாற் பெயர் (Masculine gender) பெண்பாற் பெயர் (Feminine gender) பலர் பாற் பெயர் Common gender) என மூன்று வகைப்படும்.

1. **ஆண்பாற் பெயர்:-** ஒரு ஆண் மகனைக் குறிக்கும் பெயர்.

(உ-ம்) அவன், கந்தன் - ஆண்பாற் பெயர்

2. **பெண்பாற் பெயர்:-** ஒரு பெண் மகளைக் குறிக்கும் பெயர்.

(உ-ம்) அவள், சீதை - பெண்பாற் பெயர்.

குறிப்பு:- ஆங்கிலத்தில் உயர்திணை, அஃறிணை என்னும் அறிவு பற்றிய பிரிவு நோக்காததால் பெரும்பாலும் உயிருள்ள எல்லாப் பொருள்களையும் ஆண்பால் (Masculine gender) பெண்பால் (Feminine gender) எனப் பகுக்கின்றனர்.

3. **பலர்பாற் பெயர்:-** ஆண்களிற் பலரையும், பெண்களிற் பலரையும், ஆணையும் பெண்ணையும் குறிக்கும் பெயர்கள் பலர்பாற் பெயர்கள் (Common gender) என்று கூறப்படும்.

(உ-ம்) வீரர்கள், தாய்மார், பெற்றோர், அவர்கள்.

அஃறிணைப்பெயர்கள்; ஒன்றன்பாற் பெயர், பலவின் பாற் பெயர் என இருவகைப்படும்.

1. அஃறிணை ஒன்றன்பாற் பெயர்: 'து' விகுதியுடைய சுட்டுப்பெயரும், வினாப்பெயரும், பிறபெயரும், 'ஒன்று' என்னும் எண்ணுப்பெயரும், ஒரு பொருளைக் குறிக்கும் அஃறிணைப்பெயரும் அஃறிணை ஒன்றன்பாற் பெயர்களாம்.

(உ-ம்) அது, இது—து-விகுதியுடைய சுட்டுப்பெயர்
எது, யாது—,, ,, வினாப்பெயர்
வருவது வந்தே திரும்—து-விகுதியுடைய பிறபெயர்
ஒன்று — ஒரு பொருள் குறிக்கும் எண்ணுப்பெயர்
யானை, மரம் - ஒரு பொருள் குறிக்கும் அஃறிணைப் [பெயர்

2. அஃறிணைப் பலவின்பாற் பெயர்: 'வை' விகுதியுடைய சுட்டுப்பெயரும், வினாப்பெயரும், பிறபெயரும் 'அ' விகுதி பெற்ற வினையாலணையும் பெயர்களும், இரண்டு முதலிய எண்ணுப் பெயர்களும், 'பல சில' முதலிய குறிப்பு வினையாலணையும் பெயர்களும், பன்மை குறிக்கும் 'கள்' விகுதிபெற்ற அஃறிணைப் பெயர்களும் அஃறிணைப் பலவின்பாற் பெயர்களாம்.

(உ-ம்) அவை, இவை—வை விகுதிபெற்ற சுட்டுப்பெயர்
எவை, யாவை— ,, ,, வினாப்பெயர்
நல்லவை ,, ,, பிறபெயர்
கரியன—அ விகுதி பெற்ற குறிப்பு வினையா [லணையும் பெயர்
இரண்டு, மூன்று— எண்ணுப்பெயர்கள்
யானைகள், மரங்கள்—அஃறிணைப் பலவின்பாற் [பெயர்கள்

[ஆங்கிலத்தில் உயிரில்லாத பொருள்கள் ஒருமையாயின் Neuter gender, Singular என்றும்; பன்மையாயின் Neuter gender, Plural என்றும் கூறப்படும்.]

பால்பகா அஃறிணைப் பெயர்கள்

அஃறிணைப் பெயர்களில் யானை – (ஒருமை); யானைகள் – (பன்மை) எனப் பால் பகுத்துக் கூறும் வழக்கம் பண்டைத் தமிழில் இல்லை.

எனவே, எல்லா அஃறிணைப்பொருட் பெயர்களும், பால் பகா அஃறிணைப் பெயர்களாகக் கருதப்பட்டன. முற்காலத்தில் பெயர்களோடு பன்மைப் பொருள் தரும் 'கள்' விகுதி சேர்க்கும் வழக்கம் இல்லையாதலின், பயனிலையை நோக்கி எழுவாயின் ஒருமை பன்மையை உணர்ந்தனர்.

(உ-ம்) யானை வந்தது; யானை வந்தன.

[இப்பெயர் தற்காலத் தமிழ்நடையை நோக்கின் குறிக்கத்தக்கதன்று.]

எண்

ஒருமை, பன்மை என இருவகைப்படும்.

ஒருமை (Singular) க்கு ஆண்பால், பெண்பால், ஒன்றன்பால் என்ற மூன்றும் உரியன.

(உ-ம்) அவன், மகன் — ஆண்பால்
அவள், மகள் — பெண்பால்
அது, மரம் — ஒன்றன்பால்

பன்மை (Plural) க்குப் பலர்பால், பலவின் பால் என்ற இரண்டும் உரியன.

(உ-ம்) அவர், மக்கள் — பலர்பால்
அவை, மரங்கள் — பலவின் பால்.

இடம்

தன்மை, முன்னிலை, படர்க்கை என இடம் மூன்று வகைப்படும்.

தன்மை (First Person): பேசுகிறவன் தன்னையே குறிப்பது.

(உ-ம்) நான் — தன்மை ஒருமை. I
நாம் — தன்மைப் பன்மை. We

முன்னிலை (Second Person): எதிரில் நிற்கும் பொருளைக் குறிப்பது.

(உ-ம்) நீ — முன்னிலை ஒருமை
நீங்கள் — முன்னிலைப் பன்மை } You

படர்க்கை (Third Person): தன்மையையும் முன்னிலையையும் குறியாது அயற்பொருளைக் குறிப்பது.

(உ-ம்) அது, வீடு, — படர்க்கை யொருமை
அவர், அவை, வீடுகள் — படர்க்கைப் பன்மை

வேற்றுமை — *Case*

ஒரு பெயர்ச் சொல்லானது, பிற சொற்களை ஏற்றுக் கொள்வதற்காக அடையும் விகாரமே வேற்றுமை எனப்படும். இது எட்டு வகைப்படும்.

முதல் வேற்றுமை (Nominative case): பெயர் எழுவாய் (Subject) ஆக வருவது. இதற்குத் தனி உருபு இல்லை.

(உ-ம்) **கண்ணன்** வந்தான். — எழுவாய்

இரண்டாம் வேற்றுமை (Objective case): பெயர் செயப்படுபொருள் (Object) ஆக வருவது. 'ஐ' என்பது இதன் உருபு. (உருபு மறைந்தும் வரலாம்)

(உ-ம்) 1. கண்ணன் மரத்தை வெட்டினன்.
2. கண்ணன் பால் குடித்தான்.

மூன்ரும் வேற்றுமை : i கருவிப்பொருள், ii கருத்தாப் பொருள், iii உடனிகழ்ச்சிப் பொருளில் வரும். ஆல், ஓடு (ஆன், ஒடு) உடன் முதலியன இதன் உருபுகள்.

(உ-ம்) i வாளால் வெட்டினன்; ii தலைவனால் இடப் பட்ட கட்டளை; iii தந்தையோடு மகன் சென்ருன்.

நான்காம் வேற்றுமை : 'இதற்கு இது' என்பது பொருள். இதன் உருபு 'கு' என்பதாகும்.

(உ-ம்) முருகனுக்குக் கொடு.

ஐந்தாம் வேற்றுமை : இது நீங்கல், ஒப்பு, எல்லை, ஏதுப் பொருளில் வரும். இல், இன், நின்று, இருந்து என்பன இதன் உருபுகள்.

(உ-ம்)

மரத்திலிருந்து இறங்கினன். — நீங்கல்

புலியிற் பாய்ந்தான் — ஒப்பு (இல் – போல)

பழந்தமிழ் நாட்டின் வட எல்லை வேங்கடமலை — எல்லை

அறிவிற் சிறந்தவர் திருவள்ளுவர் - ஏது (காரணம்)

ஆரும் வேற்றுமை (Possessive case): இது உட மைப் பொருளில் வரும். அது, உடைய முதலியன இதன் உருபுகள்.

(உ-ம்) எனது கை, எனது புத்தகம்.
என்னுடைய கண், என்னுடைய நாற்காலி.

ஏழாம் வேற்றுமை : இது இடப் பொருளில் வரும். இல், இடம், உள், கண், முன், பின், முதலியன இதன் உருபுகள்.

(உ-ம்) மரத்தில் குருவி; அவனிடம் கொடு.
மேசையினுள் பேனு; கடலின்கண் அலை;
கோவில் முன் மைதானம்; வீட்டின் பின் தோட்டம்.

குறிப்பு : 3, 4, 5, 7ஆம் வேற்றுமைகள் ஆங்கிலத்தில் Objective case governed by Preposition எனப்படும்.

எட்டாம் வேற்றுமை (Nominative case of address): படர்க்கையோரை அழைப்பதற்கு அவர் பெயரைக் கூறும் முறை. இது விளி வேற்றுமை எனப்படும்.

(உ-ம்) முருகா! வா. தம்பீ! வா.

வினைச்சொல்

வினைச்சொல்: ஒரு பொருளின் செயலை உணர்த்துவது வினைச்சொல்லாம். இது தெரிநிலைவினை, குறிப்புவினை என இருவகைப்படும். அவை முற்று, வினையெச்சம், பெயரெச்சம் என மூன்றுவகையாகப் பிரிக்கப்படும்.

வினைச்சொல்
- தெரிநிலை
  - முற்று
  - வினை எச்சம்
  - பெயர் எச்சம்
- குறிப்பு
  - முற்று
  - வினை எச்சம்
  - பெயர் எச்சம்

தெரிநிலைவினைமுற்று: தொழிலும், காலமும் வெளிப்படையாகத் தெரியப் பொருள் முடிந்து நிற்கும் வினைச்சொல். இது எழுவாயோடு திணை, பால், எண், இடங்களில் ஒத்து இருக்கும்.

(உ-ம்) நான் **படித்தேன்**; முருகன் **சிரிக்கிறான்**.

இதனை ஆங்கிலத்தில் Finite Verb என்பர்.

eg. I *have learnt* my lessons.

Hari *laughs*.

தெரிநிலைவினையெச்சம்: தெரிநிலைவினைமுற்றில் திணை, பால் முதலியவற்றைக் காட்டும் விகுதி குறைந்து, வினைச்சொல் லையோ, வினைப் பகுதியையுடைய தொழிற்பெயர், வினையாலணை யும் பெயரையோ கொண்டு முடியும் வினைச்சொல் தெரிநிலை வினையெச்சமாம்.

(உ-ம்) படித்து **வந்தான்**—வினைமுற்று (வினைச்சொல்)
படித்து **வந்து**—வினையெச்சம் ,,
படித்து **வந்த**—பெயரெச்சம் ,,
படித்து **வருதல்**—தொழிற்பெயர் (பெயர்ச்சொல்)
படித்து **வந்தவன்**—வினையாலணையும் பெயர் ,,
படித்து — இறந்தகால வினையெச்சம்
படிக்க — நிகழ்கால வினையெச்சம்
படித்தால் — எதிர்கால வினையெச்சம்

ஆங்கிலத்தில் பெரும்பாலும் இறந்தகால வினைமுற்றே இறந்தகால வினையெச்சமாக வருகிறது.

eg. I ***walked*** and rested.
நிகழ்கால வினையெச்சம் Infinitive எனப்படும்.

eg. Birds love *to sing*. — (பாட)
The speaker is about *to begin*. — (தொடங்க)

[எதிர்கால வினையெச்சத்தில் Subjunctive-Condition Subjunctive-Purpose என்பவைகளை அடக்கலாம்]

(உ-ம்) If I love Subjunctive-Condition
(நான் **நேசித்தால்**)
We eat that we may live ,, Purpose
(நாம் **வாழ்வதற்காக** உண்கிறோம்)

தெரிநிலைப் பெயரெச்சம்: பால் காட்டும் விகுதி குறைந்து, பெயரைக்கொண்டு முடியும் வினைச்சொல் பெயரெச்சமாம்.

(உ-ம்) **எழுதின** பிள்ளை; **எழுதுகிற** பிள்ளை;
எழுதும் பிள்ளை.

தெரிநிலைப்பெயரெச்சம் ஆங்கிலத்தில், **Participle requiring a noun** எனப்படும்.

eg. *broken* pot; *rolling* stone.

குறிப்பு வினைமுற்று: தொழிலையும், காலத்தையும் குறிப்பாக உணர்த்தும் வினைமுற்று.

(உ-ம்) முருகன் **பொன்னன்** (பொன்னையுடையவனாய் இருந்தான், இருக்கிறான், இருப்பான் என முக்காலத்தையும் சந்தர்ப்பத்திற்கேற்ப உணர்த்துமாதலால், இது குறிப்பு வினைமுற்று எனப்படும்.)

குறிப்பு வினைமுற்று, பெரும்பாலும் பெயர்ச்சொல்லின் அடியாகப் பிறக்கும்.

(உ-ம்) மதுரையான், சனியன், மூக்கன்
அழகன், கடுநடையன்.

'யார், எவன், எது, எவை' என்னும் வினைப் பெயர்ப்பயனிலைகளும், 'உண்டு, இல்லை, வேறு' முதலியனவும் குறிப்புவினைமுற்றுக்களேயாம்.

[ஆங்கிலத்தில் பெயரின் அடியாகப்பிறக்கும் குறிப்பு வினைமுற்றுகள் இருப்பதாகத் தெரியவில்லை.]

குறிப்பு வினையெச்சம்: குறிப்பு வினைமுற்று எச்சச் சொல்லாகி, வினைச்சொல்லைக்கொண்டு முடியுமானால் குறிப்பு வினையெச்சமாம்.

(உ-ம்)

நன்றாய்ப் பேசினான்; **இனிமையாகப்** பாடுகிறாள்;
உரக்கக் கூவினான்; **சாலவும்** நன்று.

[பெரும்பாலும் குறிப்பு வினையெச்சங்கள் பெயர்ச்சொல்லோடு ஆய், ஆகி என்னும் வினையெச்சங்கள் சேர்ந்ததாக

இருக்கும். 'உரக்க, சால' என்பன போலப் பெயர்ச்சொல்லடியாகவும், உரிச்சொல்லடியாகவும் குறிப்பு வினையெச்சங்கள் பிறத்தல் உண்டு.]

குறிப்பு வினையெச்சம் ஆங்கிலத்தில் **Adverb** என்று கூறப்படும்.

eg. He spoke *well*; She sings *sweetly*;
He called *aloud*; It is *very* good.

குறிப்புப் பெயரெச்சம்: குறிப்பு வினைமுற்று எச்சச் சொல்லாகி, பெயர்ச்சொல்லைக்கொண்டு முடியுமானால் குறிப்புப் பெயரெச்சம் எனப்படும்.

(உ-ம்) **அமெரிக்கச்** சிறுமி; **நல்ல** மனிதன்;
சிறிய பெண்; **கரிய** மேகம்;
வெள்ளிச் சாவி; **புதிய** உடைகள்.

குறிப்புப் பெயரெச்சம் ஆங்கிலத்தில் Adjective என்று சொல்லப்படும்.

eg. *American* girl; *Good* man;
Small girl; *Dark* cloud;
Silver key; *New* dress.

முற்றெச்சம்: தெரிநிலை வினைமுற்று வினையெச்சப் பொருளிலும், குறிப்புவினைமுற்று வினையெச்சப் பொருளிலும் பெயரெச்சப் பொருளிலும் வருமாயின், முற்றெச்சம் என்று கூறப்படும்.

(உ-ம்) **கண்டனன்** வணங்கினான்: (கண்டு)
—வினையெச்சப்பொருள்.
முருகன் **வில்லினன்** வந்தான். (வில்லையுடையவனாய்)
—வினையெச்சப் பொருள்.
வில்லினன் முருகன் வந்தான். (வில்லையுடைய)
—பெயரெச்சப் பொருள்.

ஏவல் வினைமுற்று : முன் நிற்பவனை ஏவுதலாகிய பொருளைத்தரும் முற்றுச் சொல் ஏவல் வினையாம்.

(உ-ம்) உண், உண்ணாய், உண்ணுங்கள்.

ஏவல் வினைமுற்று, ஆங்கிலத்தில் Imperative எனப்படும்.

eg: *Wait* there —(Command)
Be of good cheer —(exhortation)
Go to the ant, thou sluggard —(Precept)

வியங்கோள் வினை முற்று : எல்லா இடங்களுக்கும் பொதுவாக வரும் ஏவல் வினை, 'வியங்கோள்வினை' என்று சொல்லப்படும். இது [1]வாழ்த்துதல், [2]வேண்டுதல், [3]வைதல், [4]விதித்தல் முதலிய பொருள்களில் வரும்.

(உ-ம்) [1]வாழ்க, [2]தருக, [3]ஒழிக, [4]செய்க.

குறிப்பு : இ, இய, இயர், அல் என்னும் விகுதிகளையுடைய வியங்கோள் வினைமுற்றுகள் பெரும்பாலும் செய்யுளில் வரும்.

(உ-ம்) "பழியொடு படராப் பஞ்சவ **வாழி**"

"என் பெயர்ப் படுத்தஇவ் விரும்பெயர் மூதூர்
நின்பெயர்ப் படுத்தேன்; நீ **வாழிய**"

"**வாழியரோ** வாழி வருபுனல் நீர்த் தண்பொருநை
சூழ்தரும் வஞ்சியார் கோமான்றன் தொல்குலமே"

"பயனில் சொல் பாராட்டுவானை மகன் எனல
மக்கட் பதடி **எனல்**." (எனல்-என்று சொல்லுக)

வியங்கோள் வினைமுற்று ஆங்கிலத்தில் வழங்குமாறு :

i Thy Kingdom *Come*.
ii God *be* with you. } Subjunctive–wish

iii My sentence is that the Prisoner *be* hanged. } Subjunctive-order

iv *Have mercy* upon us. (Imperative-entreaty)

குறிப்பு:— ஆங்கிலத்தில் வேண்டுகோளைத் தெரிவிப்பதாக வரும் ஏவல் (Imperative-entreaty) தமிழில் வியங்கோள் ஆதல் காண்க.

தெரிநிலை வினை வகைகள்

[1]செயப்படுபொருள் குன்றிய (இல்லாத) வினை, [2]செயப்படுபொருள் குன்று (உள்ள) வினை, [3]தன்வினை, [4]பிறவினை, [5]செய்வினை, [6]செயப்பாட்டு வினை என்பன தெரிநிலைவினை வகைகளாம்.

செயப்படுபொருள் குன்றிய (இல்லாத) வினை	செய்யப்படுபொருள் குன்று (உள்ள) வினை
(உ-ம்) **நடந்தான்.**	(உ-ம்) **படித்தான்.**
(இவ்வினையில் 'எதை, யாரை' என்னும்கேள்விக்கு விடையில்லை. ஆதலால் இது செய்யப்படு பொருளை வேண்டாத வினை.)	(இவ்வினையில் 'எதை' என்னும் கேள்விக்கு 'பாடத்தை' என விடை வருதல் காண்க. ஆதலால் இது செயப்படுபொருளை வேண்டி வரும் வினை.)
(சென்றான், இருந்தான், நின்றான், அழுதான், சிரித்தான். இவை போல்வன காண்க.)	(எழுதினான், அழித்தான், வெட்டினான், சேர்த்தான். இவை போல்வன காண்க.)
Intransitive Verb eg. He *Walked* fast	**Transitive Verb** eg. He *learnt* his lessons

தன்வினை	பிறவினை
எழுவாயின் செய்கையைக் காட்டும் வினை தன்வினையாம்.	ஒரு வினை தன் எழுவாய் அல்லாத பிற கர்த்தாவின் செய்கையைக் காட்டுமாயின், பிறவினையாம்.
(உ-ம்) முருகன் **நடந்தான்.**	(உ-ம்) முருகன் **நடத்தினான்.**
(இவ்வினையில் 'நடத்தல்' என்ற தொழிலைச்செய்தவன் முருகன்.)	(இவ்வினையில் 'நடத்தல்' என்ற தொழிலைச் செய்தவன் முருகன் அல்லாத மற்றொருவன்.)

தன்வினை	பிறவினை
படித்தான்	படிப்பித்தான்
செய்தான், போ,	செய்வித்தான், போக்கு,
உருள்வான், பாய்,	உருட்டுவான், பாய்ச்சு
பயில், எழும்பு	பயிற்று, எழுப்பு

குறிப்பு:— தன்வினையும் செய்வினையும் ஒன்றே. செயப்பாட்டு வினைக்கு மாறுபாட்ட வினை செய்வினை என்றும், பிறவினைக்கு மாறுபட்ட வினை தன்வினை என்றும் பெயரளவில் மட்டும் வேறுபாடு உண்டு.

பிறவினையை ஆங்கிலத்தில் Causative verb என்பர்.

eg. He ***walked*** the horse.

He ***raised*** the ball.

செய்வினை	செயப்பாட்டுவினை
எழுவாய் தானே தொழிலைச் செய்வதாகக் கூறுவது செய்வினையாம்.	செயப்படுபொருளின் தொழிலை உணர்த்தும் வினை செயப்பாட்டுவினையாம். [வினைச்சொல்லின் பகுதியோடு படு என்னும் துணை வினையைச் சேர்க்க செயப்பாட்டு வினையாகும்]
(உ-ம்) i கொற்றன் வீடு கட்டினான்	(உ-ம்) i கொற்றனால் வீடு கட்டப்பட்டது.
ii பொன்னி மலர் பறித்தாள்	ii மலர் பொன்னியால் பறிக்கப்பட்டது.

[செய்வினையில் செயப்படுபொருளாக வந்த சொல், செயப்பாட்டு வினையில் எழுவாயாக மாறுவதைக் காண்க.]

Active Verbs (voice)	**Passive Verbs** (voice)
eg. i He *gave me* a pen.	eg. i The pen *was given* to me by him.
ii He *wrote* a letter.	ii A letter *was written* by him.

உடன்பாட்டு வினை	எதிர்மறை வினை
வினைச்சொல் குறிக்கும் செய்கையை உண்டென்று கூறும் வினை **உடன்பாட்டு வினை** எனப்படும்.	வினைச்சொல் குறிக்கும் செய்கையை மறுக்கிற வினை **எதிர்மறை வினை** எனப்படும்.
(உ-ம்) நடப்பேன்	(உ-ம்) நடவேன்
கற்றான்	கற்றிலன்
உண்டு	இல்லை

Affirmative	**Negative**
eg. He *comes.*	He *does not* come.
I *have* a book.	I *have no* book.
He *went.*	He *did not go.*

இடைச்சொல்.

பெயரோடும் வினையோடும் வந்து சேரும் வேற்றுமை உருபுகளும், உவமையுருபுகளும், சத்தம் பொருளை உணர்த்தும் சொற்களும், அசைநிலைச் சொற்களும், உணர்ச்சியை வெளியிடும் ஒலிகளும், குறிப்பாற் பொருளுணர்த்தும் சொற்களும், ஒரு வினைச்சொல்லோடு சேர்ந்துவரும் துணைவினைகளும் இவைபோல்வனவும் இடைச்சொற்களாம்.

[வினைச்சொல்லில் அடங்கியுள்ள விகுதி, இடைநிலை, சாரியை முதலியவைகளும் இடைச்சொல் என்பர்.]

[உ-ம்]

1. முருகனை-**ஐ**; முருகனுக்கு-கு; முருகனுடைய-**உடைய** } ஐ, கு, உடைய—வேற்றுமை உருபுகள்.

2. சிங்கம்**போல்** நடப்பவன்; இதற்கொப்ப (ஒப்ப) } 'போல்' 'ஒப்ப' உவமை உருபுகள்.

3. தினந்**தோறும்**; நல்லது **என்று**; அவனு (ஆ); கண்ணன் **என்பவன்**; குருவும் சீடனும், (உம்) மற்றொன்று, (மற்று) } தோறும், என்று, ஆ, என்பவன், உம், மற்று என்பன தத்தம் பொருளை உணர்த்துவன.

4. கற்றதனாலாய பயனென் கொல்—கொல்- அசைநிலை

5. ஐயோ, சீ, ஓகோ—உணர்ச்சியை வெளியிடும் ஒலிகள்.

6. நெஞ்சு படபடவென அடித்தது } 'படபட' 'சோ' குறிப்
மழை சோவெனப் பெய்தது } பாற் பொருளுணர்த்தும் சொற்கள்.

7. எழுந்திருந்தான் } இருந்து, இடு முதலியன வினைச்சொல்
பிளந்திட்டான் } லோடு சேர்ந்துவரும் துணைவினைகள்.

ஆங்கிலத்தில் [1]Prepositions, [2]Conjunctions, [3]Interjections என்று கூறப்படுவன எல்லாம் இடைச் சொற்களேயாம்.

eg. 1. on, from, by, about, until.

2. and, not only but also (*Co-ordinating Conjunctions*); either or, neither nor (*alter-nating Conjunctions*); that, because, since, so, as, lest, if, as if, unless (*Subordinat-ing Conjunctions*).

3. oh! ah! aha! alas! fie! (சீ)

உரிச்சொல்

உரிச்சொல் என்பது செய்யுட்கு மட்டும் உரிய சொல்லைக் குறிக்கும். உயிர்ப்பொருள், உயிரல்லாத பொருள் ஆகியவற்றின் **குணத்தையும், தொழிலையும் குறிப்பதாய் செய்யுளில் மட்டும் வழங்கும் சொல் உரிச்சொல்லாம்.** இது ஒரு பொருள் தரும் பல சொற்களும், பல பொருள்தரும் ஒரு சொல்லும் என இருவகைப்படும்.

1. சால, உறு, தவ, நனி, கழி, கூர் — 'மிகுதி' என்னும் பொருளில் செய்யுளில் வழங்குவன.

2. 'கடி' — இவ்வுரிச்சொல் காவல், கூர்மை, விளக்கம், அச்சம், விரைவு, புதுமை முதலிய பல பொருள்களில் செய்யுளில் வழங்கும்,

பொது.

தமிழில் வழங்கும் மூவகைச் சொற்கள்

தமிழில் வழங்கும் சொற்கள் பெயர்ச் சொல், வினைச் சொல், இடைச் சொல், உரிச் சொல் என்னும் நான்கு வகையுள் அடங்கும். பிற்கால இலக்கண நூலோர் இச் சொற்களைச் **செந்தமிழ்ச் சொற்கள், வட சொற்கள், திசைச் சொற்கள்** என மூவகைப்படுத்தினர்.

1. செந்தமிழ்ச் சொற்கள்:—தமிழ் வளர்த்த பாண்டியர்கட்கும், சங்கப்புலவர்கட்கும் உறைவிடமான வடபாண்டிய நாட்டில் வழங்கும் தமிழ்ச் சொற்கள்.

செந்தமிழ்ச் சொற்கள், **இயற்சொற்கள், திரிசொற்கள்** என இரு வகைப்படும்.

இயற்சொற்கள்:—வடபாண்டிய நாட்டில் மட்டுமன்றி ஏனைய தமிழ் நிலப்பகுதிகளிலும் வழங்கி, யாவர்க்கும் இயல்பாய்ப் பொருள் விளங்கும் சொற்கள்.

(உ-ம்) மரம், பொன், மண், நடந்தான், வந்தான் முதலியன.

திரிசொற்கள்:—எளிதிற் பொருள் விளங்காத தமிழ்ச் சொற்கள்.

[இது ஒரே பொருளைத் தரும் பல சொல், பல பொருளைத் தரும் ஒரு சொல் என இருவகைப்படும்.]

(உ-ம்) 1. 'படர்ந்தான்,' 'ஏகினான்,'-இவை 'போனான்' என்னும் பொருளை உணர்த்தும் திரிசொற்கள்.

2. **'காசு'** — இது குற்றம், பொன், மணி முதலிய பல பொருளைத் தரும் திரி சொல்.

2. வடசொற்கள்:—தமிழில் வந்து வழங்கும் சமஸ்கிருதச் சொற்கள்.

(உ-ம்) வருஷம் (ஆண்டு), புஷ்பம் (பூ), ஆலயம் (கோவில்) விவாஹம் (திருமணம்), ஜயம் (வெற்றி)

3. திசைச் சொற்கள் இரண்டு வகைப்படும். அவை கொடுந்தமிழ்த் திசைச் சொற்கள், அயல் மொழித் திசைச் சொற்கள் என்பன.

கொடுந்தமிழ்த் திசைச் சொற்கள்:—வடபாண்டிய நாட்டைச் சூழ்ந்துள்ள தமிழ் நிலப்பகுதிகளில் மட்டும் வழங்கும் தமிழ்ச் சொற்கள் செந்தமிழில் வந்து வழங்குமாயின், அவை கொடுந்தமிழ்த் திசைச் சொற்கள் எனப் படும்.

(உ-ம்) வெள்ளம் (நல்ல நீர்)—மலையமானாட்டுச் சொல்;
ஆய் (தாய்)—சோழநாட்டுச் சொல்;
கேணி (சிறு குளம்)—அருவாநாட்டுச் சொல்.

அயல்மொழித் திசைச் சொற்கள்:—தமிழ் நாடு நீங்கலாக வுள்ள பகுதிகளில் வழங்கும் மொழிச் சொற்கள் செந்தமிழில் வந்து வழங்குமாயின், அவை அயல் மொழித் திசைச் சொற்கள் எனப்படும்.

(உ-ம்) சிக்குதல்—கன்னடம்; எச்சரிக்கை — தெலுங்கு தபால், தயார்—உருது; அலமாரி, ஜன்னல்—போர்த்துக்கீசியம்; கவர்னர், மோட்டார், டாக்டர்— ஆங்கிலம்.

[இவை போல்வனவற்றையும் அறிந்து கொள்க,]

சொற்கள் வழங்கும் முறைமை

சொற்கள் இருவகையாக வழங்கப்படுகின்றன. அங்ஙனம் வழங்கப்படும் முறைமை பற்றி **இயல்பு வழக்கு** என்றும், **தகுதி வழக்கு** என்றும் பிரிக்கப்பட்டிருக்கின்றன.

இயல்பு வழக்கு:— ஒரு பொருளைக் குறிக்க அமைந்த சொல்லாலேயே அப்பொருளை வழங்குவது.

[நிலம், நீர், தீ என்பனபோல் **இலக்கண வழியால் வரும் சொற்களும்**, வாயில் (இல்வாய்), கடைக்கண் (கண் கடை), சதை (தசை) என சொற்கள் அல்லது எழுத்துக்கள் முன் பின்னாக மாறி வரும் **இலக்கணப் போலிகளும்**, யாவராலும் ஏற்றுக்கொள்ளக்கூடிய இலக்கணம் சிதைந்து வரும் * மரூஉ மொழிகளும் இயல்பு வழக்குச் சொற்கள் எனப்படும்]

---

* மரூஉ மொழிகள் 45-ஆம் பக்கம் காண்க.

தகுதி வழக்கு :— யாதேனும் ஒரு காரணத்தால் ஒரு பொருளுக்கு இயல்பாய் அமைந்த சொல்லை நீக்கி விட்டு, தகுதியான வேறு சொல்லால் அப்பொருளைக் கூறுதல்.

இது **இடக்கரடக்கல், மங்கலம், குழூஉக் குறி** என மூன்று வகைப்படும்.

இடக்கரடக்கல் :- நன் மக்களிடத்தில் சொல்லத் தகாத வார்த்தைகளை மறைத்து வேறு வகையாற் சொல்லுதல்.

(உ-ம்) 'மலங் கழுவப் போனான்' என்பதைக் **கால் கழுவப் போனான்** என்றும், 'மூத்திரம்' என்பதைச் **சிறுநீர்** என்றும் கூறுதல். இவை போல்வனவும் கொள்க.

மங்கலம்:—மங்கலம் [சுபம்] அல்லாத சொல்லை ஒழித்து, மங்கலமான சொல்லாற் கூறுவது.

(உ-ம்) 'செத்தான்' என்பதை 'இறைவன் திருவடியடைந்தான்' என்றும், 'பொய்யான உடம்பை' 'மெய்' என்றும் கூறுதல். இவை போல்வனவும் கொள்க.

குறிப்பு :— இடக்கரடக்கல், மங்கலம் ஆகிய இரண்டும் ஆங்கிலத்தில் Euphemism எனப்படும்.

eg. 1. You are telling me a *fairy tale* (a lie.)

—இடக்கரடக்கல்

2. He is *no more*. (He is dead)—மங்கலம்.

குழூஉக்குறி :— ஒரு பொருளுக்கு ஒரு கூட்டத்தாரிடையே மட்டும் வழங்கப்படும் குறிப்பு மொழி.

உதாரணமாக, குடிகாரர்கள் **கறுப்பு** எனச் சாராயத்தையும், **வெள்ளை** எனக் கள்ளையும் குறித்து வந்ததை அறிக.

[சில கடைக்காரர்கள் பொருட்களின் விலையைத் தமக்குள் எழுத்துக்களால் குறிப்பதையுங் காண்க.]

அடுக்குத் தொடர்	இரட்டைக் கிளவி
1 உணர்ச்சி வேகத்தால் ஒரு சொல்லைப் பலமுறை சொல்லுதல் அடுக்குத்தொடர் எனப்படும்.	1 இரட்டித்து நின்றே பொருள் தரும் சொற்கள் இரட்டைச் சொற்கள் எனப் படும்.
2 அடுக்குத் தொடரிலுள்ள சொல்லைத் தனித்துக் கூறி னும் பொருள் உண்டு.	2 இரட்டைச் சொற்கள் தனித்து ஒலியா.
உ-ம்:— வருக! வருக! போ, போ, போ. தீத் தீத் தீ.	உ-ம்:—குழந்தை 'குறு குறு' என நடந்தது. நெஞ்சு 'படபட' என அடித்தது.

எழுவாய் (*Subject*)

ஒரு வாக்கியத்தில் கூறப்பட்டிருக்கும் தொழிலைச் செய் கின்ற பொருளைக் குறிக்கும் சொல் '**எழுவாய்**' எனப்படும்.

[பயனிலைச் சொல்லோடு 'யார்' அல்லது 'எது' எனச் சேர்த்து வினவின், வரும் விடையே 'எழுவாய்' என உணர்க.]

(உ-ம்) **கண்ணன்** கடைக்குப் போனான்.

(இங்குப் போதல் என்னும் தொழிலைச் செய்தவன் கண்ணன்.) இவ்வாக்கியத்தில், 'போனான்' என்பது பயனிலை. போனான்— யார்? என வினவின் 'கண்ணன்' என விடை வருதல் காண்க.

குறிப்பு :— சில வாக்கியங்களில் எழுவாய் மறைந்து வருதலும் உண்டு.

(உ-ம்) பால் குடி. (நீ என்னும் எழுவாய் மறைந்து வந்தது)

பயனிலை (*Predicate*)

வாக்கியத்தின் பொருளை முடித்து நிற்கின்ற சொல் **பய னிலை** எனப்படும். பெரும்பாலும் வினைமுற்றே பயனிலையாக

வரும். சிறுபான்மை வினைச் சொல்லும், பெயர்ச் சொல்லும் பயனிலையாக வருதல் உண்டு.

(உ-ம்) சாமிநாதன் பள்ளிக்கூடத்திற்குப் **போகிறான்.** (வினைமுற்று)

திருக்குறளை இயற்றியவர் **யார்?** (வினா)
உலகத்தைப் படைத்தவர் **கடவுள்.** (பெயர்)

செயப்படுபொருள் (*Object*)

எழுவாய் செய்த தொழிலை ஏற்கும் சொல் **செயப்படு பொருள்** எனப்படும். பயனிலைச் சொல்லோடு 'யாரை' அல்லது 'எதை' எனச் சேர்த்து வினவின் வரும் விடையே செயப்படுபொருள் என உணர்க.

(உ-ம்) இயேசு **சிறுவர்களை** அதிகமாக நேசித்தார்.

['நேசித்தல்' என்னும் தொழிலை ஏற்கும் சொல் சிறுவர்கள். இவ்வாக்கியத்தில், 'நேசித்தார்' என்பது பயனிலை. நேசித்தார்—யாரை? என வினவின், 'சிறுவர்களை' என விடை வருதல் காண்க.]

குறிப்பு:—பெரும்பாலும் செயப்படுபொருளோடு 'ஐ' என்னும் இரண்டாம் வேற்றுமை உருபு வெளிப்பட்டு நிற்கும். சிறு பான்மை அவ்வுருபு மறைந்தும் வரலாம்.

(உ-ம்) நீ இப் **புத்தகத்தைக்** கொண்டு போ.

'ஐ' என்னும் வேற்றுமை உருபு வெளிப்பட்டு நின்றது.

நீ **கடிதம்** எழுது— 'ஐ' என்னும் வேற்றுமை உருபு மறைந்து நின்றது.

வாக்கியங்கள்

1. தனி வாக்கியங்கள் (Simple sentences)

கீழ்க்காணும் வாக்கியங்களைக் கவனியுங்கள்:

1. சாத்தான் எங்கே போகிறான்?
2. அவன் தெருவில் மூன்று வண்டிகளைக் கண்டான்.
3. இவன் ஓர் நாட்டுப்புறத்தான்.

இவ்வாக்கியங்கள் ஒவ்வொன்றிலும் ஒரே பயனிலை இருப்பதை நோக்குக. இவ்வாறு ஒரே பயனிலையுடைய (எச்சச் சொற்றொடரில்லாத) **வாக்கியம் தனி வாக்கியம்** எனப்படும்.

2. கலவை வாக்கியங்கள் (Complex sentences)

கீழ்க்காணும் வாக்கியங்களைக் கவனியுங்கள்.

1. *நீ பார்த்த சைக்கிள் என்னுடையது.*
2. *நீ வந்த போது அவர் நூல் நிலையத்திலிருந்தார்.*
3. *அவன் அங்கே தான் இருக்கிறான் என்று நான் நம்புகிறேன்.*

[*நீ சைக்கிள் பார்த்தாய்; அந்த சைக்கிள் என்னுடையது என்னும் இரு வாக்கியங்களின் இணைப்பே 'நீ பார்த்த சைக்கிள் என்னுடையது' என்பதாகும். இத்தொடர் வாக்கியத்தில் 'நீ பார்த்த' என்பது, 'சைக்கிள்' என்னும் சொல்லைத் தொடர்ந்து வரும் எச்சச் சொற்றொடர். 'சைக்கிள் என்னுடையது' என்பது முழுச் சொற்றொடர். ஏனைய வாக்கியங்களையும் இவ்வாறு பிரித்து உணர்க.*]

ஒரு முழுச் சொற்றொடரும், ஒன்றோ பலவோ எச்சச் சொற்றொடரும் உடையது கலவை வாக்கியம் எனப்படும்.

தொடர் வாக்கியங்கள் (Compound sentences)

1. *மேரி பள்ளிக்கூடம் சென்றபோது, அன்னாள் பின் தொடர்ந்தாள், ஆனால் நான் பின் தங்கிவிட்டேன்.*

2. *அவன் மிகச் சோம்பேறி, இல்லையெனின் அவன் தேறியிருப்பான்.*

இவ் வாக்கியங்கள் ஒவ்வொன்றிலும் இரு முழுச் சொற்றொடர் இருப்பதைக் கவனி. இவ்வாறு **தனி வாக்கியமாக நின்று பொருளுணர்த்தும் முழுச் சொற்றொடர்களின் இணைப்பு, தொடர் வாக்கியம் எனப்படும்.**

நிறுத்தற் குறிகள்

கேட்பவர்க்குத் தெளிவாய்ப் பொருள் விளங்குமாறு அவசியமான இடங்களில் நிறுத்திப் பேசுவது இயல்பு. அது போலவே, படிப்பவர்க்குத் தெளிவாகப் பொருள் விளங்குமாறு உரிய இடங்களில் நிறுத்தற் குறிகள் இடுதல் வேண்டும். அவை காற்புள்ளி, அரைப்புள்ளி, முக்காற்புள்ளி, முற்றுப் புள்ளி எனப் பலவகைப்படும்.

[*காற்புள்ளிக்கு நிறுத்தும் நேரத்தையொட்டியே ஏனைய புள்ளிகளுக்கும் நிறுத்தும் நேரத்தைக் கணக்கிடுக.*]

நிறுத்தற் குறிகள்

1. காற்புள்ளி (Comma) ,
2. அரைப்புள்ளி (Semicolan) ;
3. முக்காற்புள்ளி (Colan) :
4. முற்றுப்புள்ளி (Fullstop) .
5. கீற்றுப்புள்ளி (Dash) —
6. வினாக்குறி (Note of Interrogation) ?
7. வியப்புக்குறி (Exclamation) !!
8. பிறைக் கோடு (Bracket) ( ) [ ]
9. மேற்கோட்குறி (Quotation) ' ' " "

காற்புள்ளி.— (1) எண்ணுப் பொருளின் பின்னரும், (2) ஒரு எழுவாயைத் தொடர்ந்து வரும் பல வினைப் பயனிலைகளின் பின்னரும், (3) நீண்ட வாக்கியத்தில் வரும் எச்சச் சொற்றொடரின் பின்னரும், (4) இணை மொழிகளின் பின்னரும் (5) அழைப்பிதழின் தலைப்பில் இடும் விளிச்சொல்லுக்கு பின்னரும், (6) சொற்றொடர்களையும், வாக்கியங்களையும் இணைக்கும் இடைச் சொற்களுக்குப் பின்னரும் காற்புள்ளி இடவேண்டும்,

(1) அறம், பொருள், இன்பம், வீடு என உறுதிப் பொருள் நான்கு.

(2) அவன் நின்றான், இருந்தான், கிடந்தான், எழுந்தான்.

(3) நாள்தோறும் பாடங்களை ஒழுங்காகப் படித்து வந்தால், நீ வெற்றி பெறுவது உறுதி.

(4) அன்பும் அறனும், இன்பமும் துன்பமும், ஊணும் உடையும்,

(5) அன்புமிக்க ஐயா, அன்புடையீர்,

(6) மனத்தை ஒருமைப்படுத்துவது கடினம்; எனினும், முயன்றால் முடியாதது இல்லை.

ஆகையால், ஆதலால், என்றாலும், இனி, மேலும், எனவே, ஆகவே, — இவ்வாறு பல உதாரணங்கள் காண்க]

அரைப்புள்ளி:– (1) ஒரு வாக்கியத்தில் எழுவாயைத் தொடர்ந்து வரும் வெவ்வேறு கருத்துக்களைத் தெரிவிக்கும் பயனிலைகளின் பின்னரும், (2) எதிர்மறைக் கருத்துக்களை ஒருங்கே கூறும் தொடர் வாக்கியத்தின் இடையிலும் (3) தனித்தனி வாக்கியமாக வரும் உவமான உவமேயங்களின் இடையிலும் (4) ஒரு வாக்கியத்தை முடிக்கும் பயனிலை இடையில் வரும்போதும் அரைப்புள்ளி இடவேண்டும்.

(உ-ம்) (1) காந்தியடிகள் தெய்வ நம்பிக்கையுடையவர்; அரசியல் ஞானி; சீர்திருத்தவாதி; ஏழைகட்கு இரங்குபவர்.

(2) எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம்; உய்வில்லை
செய்நன்றி கொன்ற மகற்கு.

(3) ஊருணி நீர்நிறைந் தற்றே; உலகவாம்
பேரறி வாளன் திரு.

(4) சொல்லில் கோணுமையே நடுநிலைமை;
மனத்தில் கோணுதல் இல்லாவிட்டால்.

முக்காற்புள்ளி:– (1) சிறு தலைப்புக்குப் பின்னும், (2) உதாரணங் கூற வரும் விதிக்குப் பின்னும் (3) மேற்கோள் வசனத்தைத் தழுவும் தொடக்கவுரைக்குப் (introducing words) பின்னும் முக்கால் புள்ளி இடவேண்டும்.

(உ-ம்) (1) செயப்படுபொருள் குன்றியவினை: ‘முருகன் கண்டான்’.

(2) வினைமுற்று பால், எண், இடம் இவற்றில் எழுவாயோடு ஒத்திருத்தல் வேண்டும்: “வேலன் நன்றாய் விளையாடுவான்”.

(3) கல்வி கற்கும் முறைபற்றித் திருவள்ளுவர் கூறியதாவது:– “கற்க கசடறக் கற்பவை; கற்றபின் நிற்க அதற்குத்தக”

முற்றுப்புள்ளி:– (1) வாக்கியத்தின் முடிவிலும், (2) சொற் குறுக்கங்களுக்குப் பின்னும் முற்றுப் புள்ளி இட வேண்டும்.

(உ-ம்) (1) கண்ணன் பந்து விளையாடினன்.
(2) ந. நி. (நமது நிருபர்), எம். ஏ.,

வினுக்குறி:– வினு வாக்கியத்தின் இறுதியில் வினுக்குறி இடுதல் வேண்டும்.

(உ-ம்) நீ எங்கே வந்தாய்?
உலகில் பெரிய தேசம் எது?

வியப்புக்குறி:– உணர்ச்சி வசப்பட்டுக் கூறும் சொல் லுக்குப் பின் வியப்புக்குறி இடுதல் வேண்டும்.

ஆ! தெய்வமே!; | வருக! வருக!; | பாம்பு! பாம்பு!

பிறைக்கோடு:– விளக்கம் கருதி வருவிக்கும் சொல்லைப் பிறைக்கோட்டினுள் இடவேண்டும்.

கணை கொடிது- அம்பு (உருவில் நேரானதாயினும் செய லால்) கொடியது.

இரட்டை மேற் கோட்குறி:– (1) அறிஞர்களின் பொன் மொழிகளை மேற்கோளாகக் காட்டும் பொழுதும், (2) நேர் கூற்றுக்கு (Direct speech) முன்னும் பின்னும் இரட்டை மேற்கோள் குறியிடுக.

(உ-ம்) (1) "கற்றதனு லாய பயனென்கொல்; வாலறிவன்
நற்றூள் தொழா அர் எனின்" என்பது திருக்குறள்.

(2) "நான் இனி நன்றாகப் படிப்பேன்" என்று சொன்னுயே?

ஒற்றை மேற் கோட் குறி:– (1) எழுத்தோ சொல்லோ தன்னையே சுட்டிக் கொள்ளும் பொழுதும். (2) மேற்கோளுக் குள் வரும் மற்ருெரு மேற்கோளுக்கும் (3) சிறப்பு நிகழ்ச்சி களுக்கும், சிறப்புப் பெயர்களுக்கும் முன்னும் பின்னும் ஒற்றை மேற் கோட் குறியிடுக.

[அறிஞரின் பொன்மொழியைத் தமது வாக்கில் கூறும் பொழுது முன்னும் பின்னும் ஒற்றை மேற் கோட் குறியிடுவது உண்டு.]

(1) 'ஃ' என்பது ஆய்த எழுத்து;
'வான்' ஈற்று எதிர்கால வினையெச்சம்.

(2) "மகனே! 'இளமையிற் கல்' என்ற ஔவையாரின் பொன்மொழியை நினைவில் இருத்திக்கொள்."

(3) 'வடக்கிருத்தல்' | 'நடுகல்' | திண்டிவனம் என்ற சொல் 'புளிங்காடு' என்ற பொருளைத் தரும்.

அணி

1. உவமையணி: இரண்டு பொருட்களுக்கு ஒப்புமை விளங்கச் சொல்லுதல் உவமையணியாம். உவமையணியில் உவமானம், உவமேயம், உவமையுருபு, பொதுத்தன்மை ஆகிய நான்கும் உண்டு.

(உவமையுருபும், பொதுத்தன்மையும் மறைந்தும் வரலாம்)

(உ-ம்) 1 'பால்போலும் இனிய சொல்'.

(பால்—உவமானம்; சொல்—உவமேயம்; போலும்—உவமையுருபு' இனிய—பொதுத்தன்மை.)

2 முத்துப்போன்ற பல்.

('வெண்மை' என்னும் பொதுத்தன்மை மறைந்துளது)

3 அமுத மொழி. ('போல்' என்னும் உவமையுருபும், 'இனிமை' என்னும் பொதுத்தன்மையும் மறைந்துளது)

Simile i 'The Assyrian came down like a wolf on the fold.'

ii 'He is as busy as a bee'

2. எடுத்துக்காட்டுவமையணி: உவமான உவமேயங்களைத் தனித்தனி வாக்கியமாக இடையில் உவமையுருபு இல்லாமல் எடுத்துக் கூறுதல். (இது உவமையணியின் ஒரு பிரிவேயாகும்.)

(உ-ம்) "அகர முதல எழுத்தெல்லாம்; ஆதி
பகவன் முதற்றே உலகு."

3. உருவக அணி: உவமேயத்தில் உவமானத்தின் தன்மையை ஏற்றிக் கூறுதல். (Implied Simile) (உவமேயத்துக்கும் உவமானத்துக்கும் வேற்றுமை தோன்றாதபடி ஒன்றெனக் கூறுதல்.)

(உ-ம்) 1 'திருவடி மலர்' - திருவடியாகிய மலர். (திருவடியையே மலர் எனல் காண்க.)

2 'குணமென்னும் குன்று' (குணத்தையே குன்று எனக் கூறுதல் காண்க.)

குறிப்பு: உவமையணியில் 'போல' என்னும் உவமையுருபு மறைந்தேனும் வெளிப்பட்டேனும் வரும். உருவக அணியில் 'என்னும்' அல்லது 'ஆகிய' என்னும் சொல் மறைந்தேனும் வெளிப்பட்டேனும் வரும்.

Metaphor: ' Life is an empty dream '
Richard was a lion in battle.

4. ஏகதேசஉருவகஅணி: உவமான உவமேயங்களில் ஒன்றை உருவகித்து, மற்றொன்றை உருவகப்படுத்தாமல் விட்டுவிடுவது. (இது உருவக அணியின் ஒரு பிரிவேயாகும்.)

(உ-ம்) அறக்கடலாகிய இறைவனின் திருவடியைப்பற்றினாலன்றி, துன்பக்கடலை நீந்துதல் அரிது.) அறத்தைக் 'கடல்' எனக் கூறியதற்கேற்ப திருவடியைத் தோணி எனக் கூறாமை காண்க.)

5. பிறிதுமொழிதலணி: சொல்லக் கருதிய பொருள் (உவமேயம்) தோன்றுமாறு மற்றொரு பொருளைக் கூறுதல்.

(உ-ம்) 1 'அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சு'
(இது வரம்பு மீறிய செயல் கூடாது என்பதைக் குறிக்கிறது.)

2 "நுனிக்கொம்பர் ஏறினார், அஃதிறந்து ஊக்கின்
உயிர்க்கிறுதி ஆகி விடும்"

(ஊக்கத்தின் மிகுதியால் ஒருவன் தன் சக்தியின் அளவை மறத்தல் கூடாது என்பது கருத்து)

6. உயர்வுநவிற்சியணி: கேட்போரை மகிழ்விக்கும் பொருட்டு, ஒரு பொருளை மிகுதிப்படுத்திக் கூறுதல்.

(உ-ம்) 1. அயோத்தி மக்கள் சிந்திய கண்ணீர் கடலையடைந்தது; அழுத ஓசை விண்ணை அடைந்தது.

2. எள் போட்டால் எள் விழாது; அவ்வளவு கூட்டம்.

3. வானுற ஓங்கிய மதில்.

Hyperbole: 1. She wept oceans of tears.

2. The waves rose mountains high.

7. வஞ்சப்புகழ்ச்சியணி: புகழ்ச்சியால் பழிப்பும், பழிப்பால் புகழ்ச்சியும் தோன்றும்படி கூறுதல்.

(உ-ம்) 1. 'தொண்டைமானே, உனது வேலுக்குப் பீலி அணிந்து மாலை சூட்டி, நெய் பூசி காவல் உள்ள அறையில் எவ்வளவு அழகாக வைத்திருக்கிறாய்!'—புகழ்வதுபோல் பழித்தல். (வேலைப் பயன்படுத்தாத காரணத்தால் வீரமில்லாதவன் என்பது விளங்குகிறது.)

2. 'எனது அரசன் வேலாயுதம் பகைவரைக் குத்தியதனால் நுனி முறிந்து, கொல்லனின் உலைக்களத்தில் கிடக்கிறது.' பழிப்பதுபோல் புகழ்தல். (வேலைப் பயன்படுத்திய காரணத்தால் வீரமுள்ளவன் என்பது விளங்குகிறது.)

Irony: What a clever fellow you are! (really meaning) What a fool you are!

8. தற்குறிப்பேற்ற அணி: உயிர்ப்பொருளும், உயிரல்லாத பொருளும் ஆகிய இயற்கைப் பொருளில் இயல்பாக நிகழும் தன்மைக்குக் கவி தன் கற்பனையைக் காரணமாகக் கூறுதல்.

(உ-ம்) நளதமயந்தியர் பட்ட பாட்டைக்கண்டு, கதிரவனே நீ விரைவாக வா என்று அழைப்பதுபோல் கோழிகள் சிறகடித்துக் கூவின.

Pathetic falacy என்னும் அணி இதனோடு சிறிது ஒற்றுமையுடையதாதல் காண்க.

9. சிலேடையணி : ஒரு சொல்லோ, ஒரு சொற்றொடரோ பல பொருள் தருமானால் சிலேடை எனப்படும்.

(உ-ம்) 1. தட்டில் பரிசு வாங்கிய புலவர் வள்ளலை நோக்கி 'ஐயா **தட்டு** யாருக்கு' என்றார்.

(**தட்டு**—தாம்பாளம், குறைவு.)

2. **கரும்புக்கும் மயிலுக்கும் சிலேடை :**

மேனியெலாம் கண்உறலால், வேள்விரும்பும் தன்மையினால்
ஆன பசுந் தோகையினால் ஆடலினால்—மீனவனே
கானமயில் ஒப்பாம் கரும்பு. (சிந்தியல் வெண்பா)

மேனி-தடி, உடல்; **கண்**-கணு, கண்; **வேள்**-மன்மதன், குமரன்; **தோகை**-கரும்பு இலை, மயில் தோகை.

Pun: 'Is life worth living?' — It depends upon the *liver*.

(liver - one who lives, an organ)

10. வேற்றுமையணி :— உவமான உவமேயங்களுக்கு வேற்றுமை தோன்ற உரைப்பது வேற்றுமையணியாம்.

(உ-ம்) "தீயினாற் சுட்ட புண் உள்ஆறும்; ஆறாதே
நாவினாற் சுட்ட வடு."

தீ - உவமானம்; வடு - உவமேயம்.

தீ ஆறும்; வடு ஆறாது என்பது வேற்றுமை.

Antithesis :

eg. Man Proposes, God disposes.

11. வேற்றுப்பொருள்வைப்பணி : கவிஞர் தாம் கூறக் கருதிய பொருளை உறுதிப்படுத்துவதற்கு உலகம் அறிந்த உண்மை ஒன்றனையும் சேர்த்து முடிப்பது.

இடியிடித்து மின்னடித்து எங்கியே மக்கள்
துடிதுடிக்கத் தோன்றிடினும் தூற்றாரே மாமழையை;
பொல்லாத செய்கை புரிந்தாலும் பூவுலகில்
செல்வம் பொழிவார்க்கே சீர்.

12. தன்மையணி :— ஒரு பொருளின் தன்மையை யாதொரு விகாரமும் இன்றி உள்ளவாறு சிறப்பித்துக் கூறுவது.

(உ-ம்) "கட்டிய சுரிகையன் கடித்த வாயினன்
வெட்டிய மொழியினன் விழிகட் டீயினன்
கொட்டிய துடியினன் குறிக்குங் கொம்பினன்
கிட்டிய தமரெனக் கிளர்ந்த தோளினான்."

[குகன் பரதனைத் தூரத்திற் கண்டபோதே, அரையில் உடைவாளைச் செருகி, உதட்டைக் கடித்து, கடுஞ்சொற்கூறி, தீப்பறக்க விழித்து, பறையை அறைந்து, ஊது கொம்பை ஊதி, தன் வீரரை வருவித்துத் தோள் பூரித்து நின்றான்]

13. மடக்கணி: சொல்லோ, சொற்றொடரோ பொருள் வேறுபடுமாறு மீண்டும் மீண்டும் மடக்கி வருவது மடக்கணியாம். (அந்தாதி கலம்பகம் முதலிய நூல்களில் மடக்கணி அமைந்த பாடல்கள் பல உள.)

மடக்கணி அமைந்த பாடலில் ஓரடி கீழே காண்க.

(உ-ம்) "அரங்கு மையற்கு வெள்ளி யரங்கமே
ஆலயம் பிறவெள்ளியரங்கமே" (மதுரைக்கலம்பகம்)

வெள்ளியரங்கமே-வெள்ளியம்பலமே; எள்ளியர் அங்கமே-(கடவுளைத் தவிர) யாவற்றையும் இகழ்ந்த அடியார்களது மனமே.

* ஒப்பு நோக்குதற்குரிய வேறு சில அணிகள்

1. **மேன்மேலுயர்ச்சியணி**
   i. மேன்மேலுயர்வாதல் — Climax.
   ii. மேன்மேலும் தாழ்வாதல் — Anti climax.
2. **விரோத அணி** — Epigram.
3. **சொற்பின்வருநிலையணி** — Tautophony.
4. **பொருட்பின்வருநிலையணி** — Tautology.
5. **உபசார வழக்கு** (நன். காண்டிகை அநுபந்தம்) — Transferred Epithet.
6. **ஒலிக்குறிப்பு** (இசை, குறிப்புமொழி (நன், 424), இரட்டைக்கிளவி (நன். 396) —Onomotopoeia.

யாப்பு

[மாணவர்க்கேற்ற எளிய பகுதிகள் மட்டும்]

பொருளும் இசையும் பொருந்த, கற்று வல்ல புலவர்கள் பாடும் பாடலே செய்யுள் (யாப்பு) ஆம்.

எழுத்து, அசை, சீர், தளை, அடி, தொடை என்ற ஆறும் செய்யுள் உறுப்புக்களாம்.

1. எழுத்து: உயிர், மெய், உயிர்மெய், ஆய்தம் என்பன

2. அசை: நேரசை, நிரையசை என இருவகைப்படும்.

நேரசை: 1. நெடில் தனித்தும் (ஆ), ஒற்றடுத்தும் (**ஆம்**) வருவது.

2. குறில் ஒற்றடுத்தும் (**சொல்**), தனித்தும் (**க**) வருவது.

[பெரும்பாலும், சீரின் இறுதியில்தான் குறில் தனித்து அசையாக வரும்.]

நிரையசை: 1. குறிலிணை தனித்தும் (**பல**), குறிலிணை ஒற்றடுத்தும் (**பலம்**) வருவது.

2. குறில் நெடில் தனித்தும் (**விளா**), குறில் நெடில் ஒற்றடுத்தும் (**விளாம்**) வருவது.

3. சீர்: அசைகள் தனித்தோ, தொடர்ந்தோ செய்யுளின் இசைக்கு ஏற்ப சீர்ப்பட்டு நிற்பது. இது ஓரசைச்சீர், ஈரசைச்சீர், மூவசைச்சீர், நாலசைச்சீர் என நான்கு வகைப்படும்.

[நாலசைச்சீர் பாடப்பகுதியான பாக்களில் பெரும்பாலும் வருதல் இல்லையாதலின் ஏனைய சீர்கள் மட்டும் இங்கு எடுத்துக் காட்டப்பட்டுள்ளன.]

சீர்		வாய்பாடு		
நேர்	—	நாள்	ஓரசைச் சீர்	
நிரை	—	மலர்		
நேர் நேர்	—	தேமா	ஈரசைச்சீர் (மாச்சீர்)	இயற்சீர்
நிரை நேர்	—	புளிமா		
நேர் நிரை	—	கூவிளம்	ஈரசைச்சீர் (விளச்சீர்)	
நிரை நிரை	—	கருவிளம்		
நேர் நேர் நேர்	—	தேமாங்காய்	மூவசைச்சீர் (காய்ச்சீர்)	வெண்சீர்
நிரை நேர் நேர்	—	புளிமாங்காய்		
நேர் நிரை நேர்	—	கூவிளங்காய்		
நிரை நிரை நேர்	—	கருவிளங்காய்		
நேர் நேர் நிரை	—	தேமாங்கனி	மூவசைச்சீர் (கனிச்சீர்)	வஞ்சிச்சீர்
நிரை நேர் நிரை	—	புளிமாங்கனி		
நேர் நிரை நிரை	—	கூவிளங்கனி		
நிரை நிரை நிரை	—	கருவிளங்கனி		

4. தளை: நின்ற சீரின் ஈற்றசையும், வரும் சீரின் முதலசையும் செய்யுளின் இசைக்கேற்ப கூடி நிற்பது.

மா முன் நேர் வருவது	}	ஆசிரியத்தளை.
விள முன் நிரை ,,		
மா முன் நிரை வருவது	}	இயற்சீர் வெண்டளை.
விள முன் நேர் ,,		
காய் முன் நேர் வருவது	—	வெண்சீர் வெண்டளை
காய் முன் நிரை ,,	—	கலித்தளை
கனி முன் நேர் வருவது	}	வஞ்சித்தளை.
கனி முன் நிரை ,,		

5. **அடி:** தளைகள் ஒன்றும் பலவும் அடுத்து, இசை எடுப்புக்கு உதவியாக இருக்கும் செய்யுள் உறுப்பு.

இது ஐந்துவகைப்படும்.

i	குறளடி	—	இரு சீரால் வரும் அடி
ii	சிந்தடி	—	முச்சீரால் வரும் அடி
iii	அளவடி	—	நாற்சீரால் வரும் அடி
iv	நெடிலடி	—	ஐந்து சீரால் வரும் அடி
v	கழிநெடிலடி	—	ஆறு முதலிய சீர்களால் வரும் அடி

6. **தொடை:** பல அடிகளிலேனும் சீர்களிலேனும் எழுத்துக்கள் ஒன்றிவாத் தொடுப்பது.

1. **மோனைத்தொடை** (Alliteration): முதற்சீரின் முதலெழுத்தோடு, பின்வரும் சீர்களில் ஒன்றிலேனும் பலவற்றிலேனும் முதலெழுத்து ஒற்றுமைப்படத் தொடுப்பது.

ஒன்றற்கொன்று மோனையாக வரும் எழுத்துக்கள்.

அ ஆ ஐ ஔ	ஞ ந
இ ஈ எ ஏ யா	ச த
உ ஊ ஒ ஓ	ம வ

கீழ்க்காணும் அடிகளின் மோனைகளைக் காண்க.

1 **மோ**ற்றுதல் என்பது **பு**ணர்ந்தாரைப் பிரியாமை (கலித்தொகை)
2 "**ம**ந்திர **மொ**ழிகளாய் வந்தெழக் கேட்டனர்" (ஆசிய ஜோதி)
3 "**எ**ழுமின் **எ**ழுமின் **யா**வரும் **எ**ழுமின்" ,,
4 "**ஞா**யிலும் சிறந்து **நா**ட்கொடி நுடங்கும்" (சிலப்பதிகாரம்)
5 "**தீ**தியல் கானஞ் **செ**லவரி **தெ**ன்று" ,,
6 "**பொ**ருள்**பொ**ழிவார் மேற்றே **பு**கழ்"

எதுகைத் தொடை (Rhyme): அடிதோறும் முதலெழுத்து அளவொத்து நிற்ப, இரண்டாமெழுத்து ஒன்றிவரத் தொடுப்பது.

(உ-ம்) "கற்கக் கசடற கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக."

இயைபுத் தொடை (Rhyme): அடிகளின் ஈற்றெழுத்து அல்லது அசை ஒன்றி வரத் தொடுப்பது. இது அரையடியிலும் வரலாம்.

(உ-ம்) கடவுளைத் துதிப்பது போல்வாய் பாடும்
கண்ணுங் கருத்தும் கண்ட இடமெங்கும் ஓடும்
திடமாகக் கோயிற்குள்ளே தேகம்போய்க் கூடும்
சிந்தனை வெளியிலே திரிந்துதிண் டாடும்.
(சமரசக் கீர்த்தனை)

முரண் தொடை: ஓரடியில் சீர்களை ஒன்றோடொன்று சொல்லாலும், பொருளாலும் மறுதலைப்படத் தொடுப்பது.

(உ-ம்) "செய்ய கரியவனைக் காணாத கண்ணென்ன கண்ணே"
(இதனை Oxymoran என்னும் அணியோடு ஒப்பிட்டு ஆராய்க.)

அந்தாதித் தொடை: முடிவில் (அந்தம்) நிற்கும் எழுத்து அசை, சீர் முதலியன முதலிலும் (ஆதி) நின்று தம்முள் ஒன்றுபட தொடுப்பது.

(உ-ம்) "உலகுடன் விளக்கும் ஒளிதிகழ் அவிர்மதி
மதிநலன் அழிக்கும் வளங்கெழு முக்குடை
முக்குடை நீழற் பொற்புடை யாசனம்"

பா

வெண்பாவின் இலக்கணம்: ஈற்றடி முச்சீர் பெற்று, ஏனையடி நாற்சீர் கொண்டதாயிருக்கும்; வெண்சீர் வெண்டளையும் (காய் முன் நேர்), இயற்சீர் வெண்டளையும் (மாமுன்நிரை, விளமுன்நேர்) கொண்டு 'நாள்', 'மலர்', 'காசு' 'பிறப்பு' என்னும் வாய்பாட்டுச் சீர்களுள் ஒன்று பெற்று முடியும். இது ஒரே எதுகையாலேனும் இருவகை எதுகையாலேனும் வரும்.

குறிப்பு: 'காசு, பிறப்பு' என்பன முறையே 'தேமா, புளிமா' என்னும் வாய்பாடு கொண்டு உகரவீறாய் இருத்தல் காண்க.

வெண்பா வகை

1. குறள் வெண்பா—ஈரடியால் வருவது
(திருக்குறளிற் காண்க.)

2. சிந்தியல் வெண்பா—மூவடியால் வருவது
(பக். 102-ல் காண்க.)

3. நேரிசை வெண்பா—நான்கடியாய் இரண்டாம் அடியிறுதி [தனிச்சீர் பெற்று வருவது.

(உ-ம்) "நன்றி ஒருவற்குச் செய்தக்கா லந்நன்றி
என்று தருங்கொ லெனவேண்டா—நின்று
தளரா வளர்தெங்கு தாளுண்ட நீரைத்
தலையாலே தான்தருத லால்"

குறிப்பு: இரண்டாம் அடியிறுதிச்சீர் எதுகை பெற்று, தனிச் சீராக வருதல் காண்க.

4. இன்னிசை வெண்பா—நான்கடியாய்த் தனிச்சீர் இன்றி [வருவது.

அகவற்பா (ஆசிரியப்பா) வின் இலக்கணம்:— நாற் சீரான் வரும் அடிகளையுடையதாய், பெரும்பாலும் ஈரசைச் சீர்களும் சிறுபான்மை பிறசீர்களும் கொண்டு, 'கருவிளங்கனி, கூவிளங்கனி' என்னும் இருசீரும் கலவாது, மூன்று முதலிய பலவடிகளால் வருவதே அகவற்பாவாம்.

(உ-ம்) புறநானூறு, சிலப்பதிகாரம், மணிமேகலை, மனோன் மணியம் முதலான நூல்களிற் கண்டு கொள்க.

குறிப்பு:— ஈற்றயலடி முச்சீராயிருப்பின் நேரிசை ஆசிரியப்பா என்றும், எல்லாவடிகளும் நாற்சீராயிருப்பின் நிலைமண்டில ஆசிரியப்பா என்றும் கூறப்படும்.

ஆசிரியவிருத்தம்: அளவொத்த கழிநெடிலடி நான்கி னால் வரும்.

முதலடியின் சீர்கள் கொண்டுமுடியும் வாய்பாடே பின் வரும் அடிகளின் சீர்களிலும் அமைந்திருக்கும்.

ஆசிரிய விருத்தம்

[1]விளச்சீர் [2]மாச்சீர் [3]விளச்சீர் [4]மாச்சீர்
புண்பட வுடம்பும் புரைபடா மனமும்
[5]விளச்சீர் [6]விளச்சீர் [7]மாச்சீர்
பொய்படா வொழுக்கமும் பொருந்திக்

[1]கண்படா [2]திரவும் [3]பகலுநின் [4]றனையே
[5]கருத்தி(ல்)வைத் [6]தேத்துதற் [7]கிசைந்தேன்
[1]உண்பனே [2]யெனினும் [3]உடுப்பனே [4]யெனினும்
[5]உலகரை [6]நம்பிலேன் [7]எனது
[1]நண்பனே [2]நலஞ்சார் [3]பண்பனே [4]உனையே
[5]நம்பினேன் [6]கைவிடேல் [7]எனையே. (திருவருட்பா)

குறிப்பு: எண்களைக் கவனித்து எல்லா அடிகளிலும் சீர்கள் ஒத்துவந்துள்ளமையை நோக்குக.

எல்லாப் பாக்களிலும் தளை சிதைய வருமிடத்து ஒற்றும், குற்றிய லுகரமும் எண்ணப்படா.

இசைப்பாட்டு வகைகள்

இசைப்பாட்டு என்பது பெரும்பாலும் மகிழ்ச்சி பொங்க இசையோடு பாடும் நாடோடிப் பாட்டைச் சேர்ந்ததாகும். பொருளமைதியோடு, தாளம் பொருந்த, மோனை எதுகைகளு டன் பாடும் இசைப்பாட்டே யாவராலும் விரும்பத்தக்கதாம். இசைப்பாட்டு வகைகளில் கும்மி, நொண்டிச்சிந்து, காவடிச் சிந்து, கிளிக்கண்ணி, பராபரக்கண்ணி முதலியன முக்கியமா னவை. பெரும்பாலார்க்கும் தெரிந்த சில இசைப்பாடல்கள் இங்குக் கொடுக்கப்பட்டுள்ளன.

கும்மி

செந்தமிழ் நாடெனும் போதினி லே இன்பத்
தேன்வந்து பாயுது காதினிலே—எங்கள்
தந்தையர் நாடென்ற பேச்சினி லே ஒரு
சக்தி பிறக்குது மூச்சினிலே.

இப்பாடலின் முதலடியில் 'செ, தே' எனவும், இரண்டாம் அடியில் 'த, ச' எனவும் மோனைகள் அமைந்திருப்பதைக் கவனியுங்கள். 'செ ந் த மி ழ், த ந் தை ய ர்' என இரு அடிகளிலும் ஒரே எதுகை வந்திருப்பதையும், ஒவ்வொரு அடியிலும் இசைக்குப் பொருந்த எழு சீர்கள் அமைந்திருப்பதையும், இரண்டாம் அடியின் இறுதியில் தனிச்சீர் வந்திருப்பதையும் காண்க. [இப்பாடலில், 'போதினிலே காதினிலே' 'பேச்சினிலே மூச்சினிலே' என ஒலியின்பம் அமையச் சொற்கள் தொடுக்கப்பட்டிருப்பதையும் படிக்கப் படிக்க இன்பந்தரும் பொருட் செறிவையும் கண்டு மகிழ்க.]

காவடிச்சிந்து: "சுருளிமலை மீதில் மேவும் சீலா"

நொண்டிச்சிந்து: "நெஞ்சு பொறுக்குதிலையே—இந்த
நிலைகெட்ட மனிதரை நினைந்துவிட்டால்"
(பாரதியார்)

கிளிக்கண்ணி: "நெஞ்சில் உரமுமின்றி நேர்மைத்திறனுமின்றி
வஞ்சனை சொல்வாரடி—கிளியே
வாய்ச்சொல்லில் வீரரடி."
(பாரதியார்)

பராபரக்கண்ணி:

"பாராயோ என்னைமுகம் பார்த்தொருகால் என் கவலை
தீராயோ வாய்திறந்து செப்பாய் பராபரமே"

என்ற பாடல்களை நன்கு அறிந்தவர்கள்பால் சென்று இசையுடன் பாடக்கேட்டு, ஓசை வேறுபாட்டையும் அவற்றில் எதுகை மோனை வரும் இடங்களையும் அறிந்துகொள்க. பாக்களையும் இசைப் பாடல்களையும் சீரமைப்புக்கேற்ற இசையோடு பாடினால் அல்லது பாடக் கேட்டால்தான் அவற்றின் இலக்கணத்தை நன்கு புரிந்துகொள்ள முடியும்.